Registered as a Newspaper
பக்கங்கள்: இருபத்துநான்கு
# சஞ்சீவி
விலை ரூபா 10-00
மலை 9 : வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 20 சனிக்கிழமை (06-11-1999) SANJEAVY -Regenerative Tamil Weekly சிகரம்:23

# கனகராயன் குளம், மன்னகுளம் முகாம்கள் மீதும் புலிகளின் தாக்குதல் நேற்று மாலை முதல் ஆரம்பம்!

## பல முனைகளிலும் கடும் சமர் நீடிப்பு

வவுனியா, நவம்பர்6

**வன்னியில் வவுனியா - யாழ்ப்பாணம் நெடுஞ் சாலையில் (ஏ-9) அமைந்துள்ள பிரதான படைத் தளங்களான கனகராயன்குளம், மன்னகுளம் படைமுகாம்கள் மீது புலிகள் நேற்று மாலை முதல் பெரும் தாக்குதல்களை ஆரம்பித்திருப்ப தாக வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

கண்டி வீதியில் மாங்குளம் பிர தேசத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னர் இந்த இரு முகாம்கள் மீதும் புலிகள் தாக்குதல்களை ஆரம் பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா நகரில் இருந்து வடக்கே 22 மைல் தொலைவில் கனகராயன் குளம் படைமுகாம் அமைந்துள்ளது. கனகராயன்குளம் முகாமை அடுத்து தெற்கே சுமார் ஆறு மைல் தூரத்தில் புளியங்குளம் முகாம் அமைந்துள்ளது. இவ்விரு முகாம்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் மன்னகுளம் முகாம் உள் ளது. இந்தப்பகுதிகள் மீது கடும் ஷெல் வீச்சுகளுடன் புலிகள் தமது தாக்கு தல்களை ஆரம்பித்ததாக வவுனியா தகவல்கள் தெரிவித்தன.

இவ்விரு முனைகளிலும் கடும் சண்டை தொடர்வதாக நேற்றிரவு தெரி விக்கப்பட்டது.

கண்டி வீதியில் மாங்குளம் பகுதி யில் இருந்து தெற்கு நோக்கி முன் னேறும் முயற்சிகளைப் புலிகள் ஆரம் பித்திருப்பதை அடுத்து சண்டை மேலும் தீவிரமடைந்திருப்பதாக பாது காப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்ஸி செய்திகள் தெரி வித்தன.

தெற்கு நோக்கி முன்னேற முயற் சிக்கும் புலிகளுக்கு எதிராக புளியங் குளம், ஓமந்தை பகுதிகளில் இருந்து படையினர் கடும் ஆட்லறி தாக்கு தல்களை நடத்தி வருவதாகவும் -

தெரிவிக்கப்படுகிறது.

கனகராயன்குளத்துக்கும் வவுனி யாவுக்கும் இடைப்பட்ட கண்டி நெடுஞ் சாலையில் மன்னகுளத்தை அடுத்து புளியங்குளம், ஓமந்தை, தாண்டிக் குளம் ஆகிய இடங்களில் பிரதான படைத்தளங்கள் அமைந்துள்ளன. 17 மாத காலமாக மேற்கொள்ளப்பட்ட 'வெற்றி உறுதி' படை நடவடிக்கை மூலம் இந்தப்பிரதேசங்களை படையி னர் கைப்பற்றி இந்த முகாம்களை நிறுவினர்.

இதேவேளை -

வவுனியா பகுதியில் அமைந் துள்ள படைமுகாம்களின் பாது காப்பை பலப்படுத்தும் முயற்சியில் படையினர் ஈடுபட்டிருப்பதாகவும் -

போர் நடைபெறும் பகுதியில் இருந்து பாதுகாப்புக்கருதி நகர்த்தப் பட்ட இராணுவ வாகனங்கள், கனரக ஆயுதங்கள் என்பன வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து தெற்கு நோக்கி நகர்த்தப்படுவதாகவும் -

வவுனியாச் செய்திகள் தெரிவித் தன. (ஐ-3-7-21-164)

### ஜனாதிபதி பதிலளிப்பார்

யாழ்ப்பாணம்,நவ.6

யாழ்ப்பாண மக்களின் கேள்விக ளுக்கு செய்மதி மூலம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று பதில் அளிக்கவிருக்கின்றார்.

இது தொடர்பான நிகழ்ச்சி பலாலி யில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள திணைக்களத்தலைவர்கள். அரச சார் பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதில் பங்குபற்றுவதற்காக பலாலிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ-3-139)

அனைத்து வாசக நெஞ்சங்களுக்கும்
சஞ்சீவி யின்
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்

## மாங்குளம், கரிப்பட்டமுறிப்பு, ஒலுமடு பகுதிகளை மீட்டதாக புலிகள் அறிவிப்பு!

வவுனியா,நவ.6

வன்னியில விடுதலைப்புலிகள மேற் கொண்டுள்ள 'ஓயாதஅலைகள்-3' நடவடிக்கைகளின் போது மாங்குளம், கரிப்பட்டமுறிப்பு, ஒலுமடு ஆகிய படைத்தளங்களும் தமது கட்டுப்பாட் டினுள் வந்துள்ளதாக விடுதலைப்புலி கள் அறிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை முதல் தீவிரம டைந்த தாக்குதல் காரணமாக பிற் பகலில் அந்த முகாம்கள் தமது வசம் வந்தன என்றும் -

அந்தப் பிரதேசத்தில் உள்ள நூற் றுக்கு மேற்பட்ட மினிமுகாம்கள், காவ லரண்கள் ஆகியன அழிக்கப்பட்டன என்றும் -

ஒலுமடு முகாமை தாங்கள் கைப் பற்ற முன்பே படையினரால் அது குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டதாக வும் -

விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

கனகராயன் குளம் உள்ளிட்ட பகு திகளில் தொடர்ந்து தாக்குதல்கள் இடம்பெற்றுவருகின்றன என்றும் -

எந்த நேரமும் அந்தப் பகுதிகள் தமது வசம் வரும் என்றும் -

புலிகள் அறிவித்துள்ளனர்.

அரச படையினர் தரப்பில் இது வரை 2 ஆயிரத்துக்கு மேற்பட்டவர் கள் உயிரிழந்தனர் என்றும் -

தமது தரப்பில் இதுவரை 83 பேர் உயிரிழந்துள்ளதாகவும் -

புலிகள் மேலும தெரிவித்துள்ளனர்.

### ஆணின் சடலம் கரை ஒதுங்கியது

யாழ்ப்பாணம்,நவ.6

குருநகர் கடற்பரப்பில் ஆணின் சடலம் ஒன்று நேற்று கரை ஒதுங் கியுள்ளது.

துர்நாற்றம் வீசிய நிலையில் மீட் கப்பட்ட இந்தச் சடலத்தை யாழ். பொலீஸார் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்ப டைத்துள்ளனர். (ஐ-3-139)

### ரயில் பாதையில் குண்டு வெடிப்பு

கொழும்பு,நவ.6

நானுஓயாவுக்கும், பதுளைக்கும் இடையில் ரயில் பாதையில் நேற்று முன்தினம் இரவு குண்டு ஒன்று வெடித் துள்ளது.

இந்தக் குண்டுவெடிப்பில் ரயில் பாதைபலத்த சேதம் அடைந்தது. (ஐ-க-3)

## உதவி கோரப்பட்டால் இந்தியா பரிசீலிக்கும்

### மத்திய இணை அமைச்சர் தெரிவிப்பு

சென்னை,நவ.6

'இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்க உதவி கோரப்படும் பட்சத்தில் இந்தியா அது குறித்துப் பரிசீலிக்கும்' என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் அஜித்குமார் பாஞ்சா தெரி வித்துள்ளார்.

இ.தொ.கா. தலைவர் எஸ்.தொண்ட மானின் இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றிவிட்டு புதுடில்லி திரும்பும் வழி யில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

இலங்கை இனப்பிரச்சினையை முடி வுக்குக் கொண்டுவர இந்தியா தலை யிட்டு உதவ வேண்டும் என்று தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் கோரியுள்ள னவே. அது பற்றி அரசின் நிலைப்பாடு என்ன? என்று செய்தியாளர்கள் அவரி டம் கேள்வி எழுப்பினர்.

"இலங்கை இனப்பிரச்சினை அந் நாட்டின் உள்விவகாரம். எனினும் இந்தி யாவிடம் கோரப்பட்டால் அதுபற்றி பரி சீலிக்கப்படும்" என்று அவர் பதில் அளித்தார்.

புதுடில்லி புறப்பட முன்னர் அவர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமருடன் பேச்சு நடத்தி னார். (ஐ-க-3)

## ஒட்டுசுட்டான், நெடுங்கேணிப் பகுதிகள் மீது விமானத் தாக்குதல்கள் தொடர்வதாக அறிவிப்பு

கொழும்பு, நவ.6

ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஆகிய பகுதிகளில் உள்ள விடுதலைப்புலி களின் நிலைகள் மீது விமானப்படை யினர் தாக்குதலை மேற்கொண்டுள் ளதாக பாதுகாப்பு அமைச்சின் நடவ டிக்கைத் தலைமையகம் நேற்று மாலை அறிவித்தது.

படையினர் ஒன்றுதிரண்டு தமது முன்னரங்க பாதுகாப்பு நிலைகளைப் பலப்படுத்தி வருவதாகவும் -

இந்த நடவடிக்கையில் படையினர் தரப்பில் 89 பேர் உயிரிழந்தனர் என் றும் -

645 பேர் காயமடைந்தனர் என்றும்-

122 படையினரை காணவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-7)

## செஞ்.கப்பலுக்கு இனி கட்டணம்

காங்கேசன்துறைக்கும், திருகோ ணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் 'ஜாவா கல்வ்' கப்பல் மூலம் பொருள்களை எடுத்துவர இனிமேல் கட்டணம் அறவிடப்படும் என அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் முதல் அமு லுக்கு வந்துள்ள இந்த நடைமுறை யின்படி -

ஆறு முதல் 20 கிலோ வரையான பொருள்களுக்கு பத்து அமெரிக்க டொலர்களும் -

21 முதல் 50 கிலோ வரையான பொருள்களுக்கு 25அமெரிக்க டொலர் களும் -

51 முதல் 99 கிலோ வரையான

(8ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் விமானசேவை இன்றுமுதல் இரண்டாகக் குறைப்பு

யாழ்ப்பாணம்,நவ.6

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையிலான விமானச் சேவை இன்று முதல் குறைக்கப்படவுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித் துள்ளது.

இதுவரை காலமும் தினமும் இடம் பெற்றுவந்த மூன்று சேவைகள் இன்று முதல் இரண்டாகக் குறைக்கப்படு வதாகவும் -

மறுஅறிவித்தல் வரை இது நடை முறையில் இருக்கும் என்றும் -

மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

நாளை ஞாயிற்றுக்கிழமை விமா னச் சேவை முற்றாக ரத்துச் செய்யப் பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள் ளது. (ஐ-3)

## ஐ.தே.கவின் 5 எம்.பிக்கள் சந்திரிகாவுக்கு ஆதரவு!

அரசாங்கம் முன்னெடுக்கும் திட் டங்களுக்கு ஆதரவு வழங்குவதாக வும் -

ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கப் போவதாகவும் -

ஐ.தே.கவின் ஐந்து நாடாளுமன்ற

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் ஒத்துழைப்பைப் பெறாமலே உரிய நேரத்தில் புலிகளுடன் பேசுவேன்

### ரணிலுக்கு சந்திரிகா கடிதம்

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் உரியநேரத்தில் விடுதலைப்புலிகளு டன் பேசுவேன் என்று ஜனாதிபதி சந் திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. தலைவர் ரணில்விக்கிரம சிங்கவுக்கு நேற்று அவர் அனுப்பி யுள்ள கடிதத்திலேயே இப்படி கூறி யுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தங்களுடன் ஒன்றுசேர்ந்து செயற்பட பல கடிதங்களை அனுப்பியிருந்தேன். ஆனால் தாங்கள் இதில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

இதன் காரணமாக தங்களின் பதிலை எதிர்பார்க்காமல், உரிய நேரத்தில் விடுதலைப்புலிகளுடன் பேச இருக்கிறேன் - என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்தக் கடிதத் துக்கு நேற்று மாலை ரணில் பதில் அனுப்பியுள்ளார்.

"இனப்பிரச்சினை விவகாரத்தில் நான் அக்கறைகாட்டவில்லை என்று தாங்கள் கூறுவதை ஏற்கமுடியாது. இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக பகி ரங்க விவாதத்திற்கு வாருங்கள் என்று அந்தப் பதிலில் ரணில் கேட்டுள்ளார். (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்துவிட்டன!

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த
'குடைகள்' யாவும் வந்துள்ளன.
(சொற்ப கையிருப்பு மட்டுமே)

## செல்வம் பென்சி

இல. 10, நவீனசந்தை,
சாவகச்சேரி.
T. P. 070 -212429 (70735)


**சுன்னாகம், மல்லாகம், மருதனார்மடம், இணுவில்-தாவடி**

வர்த்தகர் சங்கங்கள் இணைந்து நடத்தும்

## அருணா இசைக்குழுவினரின் தீபாவளி இன்னிசை இரவு

இடம்: சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையம்
காலம்: 07-11-1999 தீபாவளி இரவு 7.00 மணி

வர்த்தக சங்கம்
சுன்னாகம்.
(70738)

## மருதனார்மடம்

**கிறிஸ்தவ இறையியற் பயிற்சிக் கல்லூரி**

இறைபணி ஆற்றவுள்ள
எதிர்காலக் குருக்களுக்கு
மறைக்கல்வி வழங்கி நிற்கும்
மகத்துவக் கல்லூரிக்கு
ஆண்டு பதினாறு
ஆயிற்றாம்! அகமகிழ்ந்து
ஈண்டு அக்கல்லூரியை
இதயத்தால் வாழ்த்துவது.

~ பழைய மாணவர்கள்.
கிறிஸ்தவ இறையியற்கல்லூரி,
மருதனார்மடம்.
(C/9719)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்

அன்னை மடியில்
12 - 02 - 1936



ஆண்டவன் அடியில்
11 - 10 - 1999

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த

## ஆறுமுகசாமி பங்கையற்செல்வம்

பாசத்தின் உறைவிடமே! பண்பின் குலவிளக்கே! வல்வெட்டித்துறை ஊர் ஈன்றெடுத்த என் அருமைச் செல்வமே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு 31 நாள்கள் உருண்டோடிவிட்டாலும் ஏம் கண்முன்னே உன் கனிவான முகமும் கள்ளம் கபடமற்ற சிரிப்பும் தோன்றுதம்மா! உங்களது நீங்காத நினைவால் எங்கள் இதயங்களும் உம்மை நினைத்து ஏங்காத நேரமில்லை. உங்கள் ஆத்மா சொர்க்கத்தை சென்றடைந்து நிம்மதியாய்துயில் கொள்ளவே சுற்றம் சூழ இருந்து பிரார்திக்கின்றோம்.

அந்தியேட்டிக்கிரியை எதிர்வரும் செவ்வாய்கிழமை 9ஆம் திகதி காலை 7 மணிக்கு (09-11-1999) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரை கேட்டுக்கொள்கின்றோம்.

மகன்மார்:- ஆ. பாலசுப்பிரமணியம் (ராசா)
ஆ. விக்னேஷ்வரன் (சுவிஸ்)
ஆ. வரதராஜன் (சுவிஸ்)
ஆ. தவராஜா
மகள்:- ஆ. தனவதி

S.A. பாலசுப்பிரமணியம்,
'ஈஸ்வரிவாசா'
ஊரிக்காடு
வல்வெட்டித்துறை.

173, வாசலவீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13
தொலைபேசி இல:074615[illegible]9

(C/9718)

## தட்டெழுத்தாளர் பதவிக்கு ஆள்சேர்ப்பு

நவாலி,நவ.6

அரசாங்க சேவையில் தட்டெழுத்தாளர் பதவிக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சைக்கு பரீட்சை ஆணையாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான முடிவு தினம் இம் மாதம் 12ஆம் திகதியாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தாம் வசிக்கும் பிரதேசத்தின் அரசாங்க அதிபருக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான முழு விவரங்கள் கடந்த 08-10-99ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியாகியுள்ளன.

அந்த வர்த்தமானியின் பிரதியை 'உதயன்' பணிமனையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

(ஐ-க-100)

## குடும்பஸ்தரை காணோம்

யாழ்ப்பாணம்,நவ.6

நல்லூர் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் காணாமற்போயுள்ளதாக அவரின் உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாவலர் வீதி, நல்லூரைச் சேர்ந்த சின்னத்தம்பி நவரட்ணம் (வயது 48) என்பவரே கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் காணாமற்போனவராவார்.

சம்பவதினம் பிற்பகல் 5மணியளவில் இவர் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றதாகவும் -

இதேநேரம் நாவலர் வீதிப் பகுதியில் சிலர் இவரை தடிகள் சகிதம் வீதியால் துரத்திச் சென்றதாகவும் -

அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9-10)


## ராஜா

(யாழ்ப்பாணம்)
ரஜனி - ரோஜா
மற்றும் பலர் நடித்த
**உழைப்பாளி**
10.30, 2.00, 5.00
(C/9678)

## லிபேட்டி

இன்றுமட்டும்
றிவோல்வர் றீற்றா
காட்சிகள் - 10.30 - 2.30
T.P 070 - 212223
070 - 212678
(70541)

## நாகம்ஸ்

(சுன்னாகம்)
இன்று மட்டும்
அர்ஜுன், குஷ்பு
ரோஜாவைக் கிள்ளாதே
நாளை முதல்
காதலுக்கு மரியாதை
காட்சிகள்
11.00, 2.30, 5.15
(புதிய நேரம்)
(70726)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16.02.1942
(தெல்லிப்பழை)



மறைவு
16.11.1998
(கொக்குவில்)

## சத்தியாப்பிள்ளை குணரத்தினம்

(K.K.S சிமெந்து ஆலை)

**திதி - 6.11.99**

ஊரடங்கு வேளையிலே
உற்ற உறவுகள் உடனிருக்க
உன்னிதயம் உறங்கியதோ!
ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் அன்புமுகம்
எங்கள் கண்களிலே

இன்று அமரரின் முதலாம் ஆண்டு நிறைவு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் (06.11.99) கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அழைக்கின்றோம்.

திருமதி சி.குணரட்ணம், **குடும்பத்தினர்.**
பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,கோண்டாவில். (70753)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புஸ்பம் பொன்ராஜா

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் 12, மவுண்காமல் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டு தற்பொழுது கொழும்பில் வாழ்ந்து வந்த திருமதி புஸ்பம் பொன்ராஜா அவர்கள் 1999.11.04 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சில்லாலை வைத்தியர் Dr.சுவாம்பிள்ளை இன்னாசித்தம்பி அவர்களின் மூத்த மகளும் காலஞ்சென்ற B.M.யோசப் பொன்ராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர் புனித பத்திரிசியார் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் ராஜேஸ்பற்றிக், ரட்னேஸ்சபாபதி, தர்மி - மனுவல்பிள்ளை, குலேந்திரன், மகேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்றூபற்றிக், கிலரி சபாபதி, ஜேரி மனுவல்பிள்ளை, ஜெசிந்தா பொன்ராஜா, சாந்தி பொன்ராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் நிமால், லக்சி, ஹேபி, சுனிஷா, நிர்மலி, றோஷானி, டிலானி, நிரோஷா, திவாகரன், லொயட், தர்ஷிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (1999.11.06) சனிக்கிழமை கொழும்பில் இடம்பெறும்.

அவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக யாழ்ப்பாணம் புனித மரியாள் பேராலயத்தில் இன்று சனிக்கிழமை 06.11.99 மாலை 3.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இத்திருப்பலியில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றி அவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இறைவனைப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்:
**குலேந்திரன் பொன்ராஜா**
(மகன்)

12, மவுண்காமல் வீதி,
யாழ்ப்பாணம். (70744)

## திருமதி சீதேவன் சுப்பிரமணியம்

உசன் மிருசுவிலைச் சேர்ந்த திருமதி சீதேவன் சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற ஆசிரியை) 5.11.99 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் மீரா, சிறீதரன்-மாலினி (ஆஸ்திரேலியா), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தேவரஞ்சன் (Commercial Bank Jaffna), சோமகலா ( ஆசிரியை றோ.க. பாடசாலை மிருசுவில்), சிவபாலன் (ஆஸ்திரேலியா), ரஜீனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் மது, துஷான், சங்கவி, ஜெயகணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (6-11-99) நண்பகல் 12.00 மணியளவில் உசன், மிருசுவிலில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
**ச.தேவரஞ்சன்**
(மருமகன்)

*உசன்,மிருசுவில்.* (70748)


## ஷண் ஓடியோ

**கெசட் இலவசம்**

அதிரடிப் புயல் ஷண் மீண்டும் வருகிறான்.

தன் தாயகத்து இசைப் பிரியர்களை சந்திக்க ஒரு சூறாவளி செய்தியுடன்.

**தீபாவளி போனஸ் !**

C. D. யில் இருந்து பதிவு செய்யப்பட்டு, அழகிய வர்ண கவர்களுடன் பக்திப் பாடல்கள், புதிய சினிமாப் பாடல்கள் **கெசற் இலவசம்.**

ஆச்சரியமா? அள்ளித்தருகிறோம் வாங்கிச் செல்லுங்கள்.

**AUDIO, VIDEO ORIGINAL CD** கள் 325/- முதல் விற்பனையில் உள்ளது.

C. D. சக்கரவர்த்தி ஷண்ணின் சங்கீத சாம்ராஜியத்துள் சங்கீத படையணிகள் இன்றே நுளையட்டும்.

நுளைவாயில் முகவரி.
ஷண் றெக்கோடிங் ஸ்பொட்
பெரியகடை யாழ்ப்பாணம்.

எங்கள் சங்கீத சாம்ராஜியம் அங்கேயும்
**ஷண்**
ஓடியோ வீடியோ போட்டோ அன்ட் கொம்யூனிகேசன்,
கொட்டாஞ்சேனை, கொழும்பு -13.
தொலை : 075-351856 - 074-616349 / பெக்ஸ் : 075-351855

புதுமைகள் படைப்பதில் ஷண் வழி தனி வழி.......

விளம்பர ஆக்கம் : விளம்பரபுயல் - மேஜர் ஷண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகத்தில் பகுதிநேர பட்டப்பின் படிப்பு

யாழ்ப்பாணம், நவ.6

இரண்டுவருட இடைவெளிக்குப் பின் யாழ். பல்கலைக்கழத்தில் பகுதி நேரப் பட்டப்பின்படிப்பு ஆரம்பிக்கப் படவுள்ளது.

பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமது பட்டப்பின் படிப்பினை மேற் கொள்ள விரும்புபவர்களுக்கு உத வும் நோக்குடனே பகுதிநேர பட்டப் பின் படிப்பு யாழ்.பல்கலைக்கழகத் தில்ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

பகுதிநேர பட்டப்பின்படிப்பு கற்கை நெறியை மேற்கொள்ளத் தகுதி உடையவர்கள் யாழ்.பல்கலைக்கழக கல்வியியல்துறைத் தலைவருடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட் டுள்ளது.

பகுதிநேர பட்டப்பின் படிப்புக்கென தற்பொழுது நூலக வசதிகளும் செய் யப்பட்டு வருகின்றன என்றும் -

இந்த வகுப்புக்கள் சனி மற்றும் கிழமை நாள்களில் மாலை நேரங்க ளிலும் நடத்துவது பற்றி ஆலோசிக் கப்பட்டு வருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

முழுநேரமாக பட்டப்பின் படிப்பை தொடர்வதற்கு இதுவரை 40 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை - அடுத்த வருட ஆரம்பத்தில் கல்வி முதுமானி பாட நெறியை ஆரம்பிப்தற்கு பட்டப்படிப்புக் கள் பீடத்தினால் ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுவருகின்றன. (ஐ-5)

## வினாவிடைப் போட்டி

கொழும்புத்துறை,நவ.6

உலக ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு இல.39, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி சந்தியிலுள்ள யாழ் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத் தின்சார்பில் ஜி.சீ.ஈ. உயர்தர மாண வர்களிடையே ஒருமணி நேர பொது அறிவு மற்றும் ஊனமுற்றோர் சம்பந்த மான வினாவிடைப் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணி தொடக்கம் 11.30 மணி வரை நடத்தப்படும். (ஐ-3)

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் உயிர்தப்பும் சாத்தியம் அதிகரிப்பு

சென்னை,நவ.6

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப் பட்ட நால்வரும் உயிர்தப்புவதற்கான சாத்தியங்கள் அதிகரித்துவருவதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொலைக்குற்றம் சாட்டப்பட்ட நளினி, முருகன், பேரறிவாளன், சாந் தன் ஆகியோரின் மரணதண்டனை யைக் குறைக்குமாறு ராஜீவ் கொலை யாளிகள் சார்பாக சென்றமாதம் 17ஆம் திகதி தமிழ்நாடு ஆளுநர் பாத்திமாபீபீ யிடம் கருணைமனு சமர்ப்பிக்கப்பட் டது. இந்தக் கருணைமனுவை தமி ழக ஆளுநர் 27ஆம் திகதி நிராகரித் தார். இதனை எதிர்த்து அவர் மீது சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக் குத்தாக்கல் செய்யப்பட்டது.

ஆளுநரின் அறிவிப்பை எதிர்த்து நால்வரும் தொடுத்த வழக்கு மீதான விசாரணைகள் முடியும்வரை தூக்கு தண்டனை நிறைவேற்றப்படமாட்டாது என தமிழகஅரசு உத்தரவாதம் அளித் துள்ளது.

வழக்கு விசாரணை முடியும்வரை மரணதண்டனை அமுல் செய்யப்பட மாட்டாது என சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து எந்தவித ஆணை யும் வராமலேயே தமிழகஅரசு உத்த ரவாதம் அளித்திருப்பது பலரது கவ னத்தையும் ஈர்த்துள்ளது.

மேலும் இந்தவழக்கு விசாரணை கள் ஒத்திப்போடப்பட்டு வருகின்றன. மனுவை கடந்த வியாழன்று விசா ரணை செய்வதாக நீதிபதி கூறியபோ தும் அன்று விசாரணைகள் எதுவும் நடக்கவில்லை. விசாரணை அடுத்த புதன்கிழமைவரை அரச வழக்கறிஞர் கேட்டதற்கமைய ஒத்திப் போடப்பட் டுள்ளது.

இந்த மனு விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்பட்ட முதல்நாளே கருணைமனு மீது முடிவெடுக்கும முன் மாநிலஅரசின் ஆலோசனையை ஆளு நர் கோரவில்லை என சம்பந்தப்பட்ட கோப்புக்களை பார்வையிட்டபின்னர் நீதிபதி கோவிந்தராஜன் குறிப்பிட்டார்.

இன்றைய அரசியல் நிலைமை யில் இந்தமாதிரி விஷயங்களில் மாநில அரசின் ஆலோசனையின் படியே ஆளுநர் நடந்து கொள்ள வேண்டும். நடந்திருக்கவேண்டும். அது மட்டுமல்ல உச்ச நீதிமன்ற நீதிபதி யாக ஆளுநர் இருந்தபோது அவரே அப்படியொரு தீர்ப்பை வழங்கியுள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு முதல்வரின் ஆலோ சனை பெறாமல் ஆளுநர் இந்த மனுவை நிராகரித்தது சட்ட விரோத மானது எனவும்-மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு அரசியல் சட்டத்தின் 161 ஆவது பிரிவின்படி தண்டனையைக் குறைக்க ஆளுந ருக்கு அதிகாரம் உள்ளது எனவும்-மனுக்களை மீள்பரிசீலனை செய்து சரியான ஒரு முடிவை அறிவிக்கும்படி உயர்நீதி மன்றம் ஆளுநரைப் பணிக் கக்கூடும் எனவும் கொலைக் குற்ற வாளிகள் சார்பாக ஆஜராகும் வழக் கறிஞர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் கொலையாளிகள் ஜனா திபதியிடம் இன்னமும் மனுச்செய்ய வில்லை. மாறாக உயர்நீதி மன்றத் தீர்ப்பு வரும்வரை தமக்குத தண்டனை வழங்கக் கூடாதுஎனவும் அதன் பின் னரே தாம் ஜனாதிபதியின் உதவியை நாட உள்ளதாகவும் அவர்கள் தெரி வித்துள்ளனர். அவர்களின் கோரிக் கையை மாநில அரசும் ஏற்றுக்கொண் டுள்ளது.

இதனிடையே தூக்குத்தண்ட னையை ஆயுள்தண்டனையாகக் குறைக்கப் பரிந்துரை செய்யுமாறு காங்கிரஸ் தலைவர் சோனியா காந் திக்கு பா.ம.க. தலைவர் ராமதாஸ் கடிதம் எழுதியுள்ளார்.

தங்களது சுயலாபம் கருதி ராஜீவ் கொலையில் எவரும் இறங்கவில்லை. தவறான வழிகாட்டுதலினாலும் தாங் கள் நேசித்த அரசியல் நோக்கங்க ளுக்காகவும்தான் அவர்கள் அப்படிச் செய்துள்ளனர். இதனால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது சோனியா காந்தி தான் என்றாலும் கூட இந்தத் தண்ட னையை மன்னிப்பது மனித நேயத் துக்கே ஓர் உதாரணமாகும் என ராம தாஸ் தன் கடிதத்தில் குறிப்பிட்டுள் ளார். (இ-8)

சிந்தித்துப் பாருங்கள்

• நோவு, வலி ஏற்படுகின்றபோது வைத்தியரின் ஆலோசனையின்படி, மருந்து வில்லைகளை பாவிப்பதே சிறந்தது. எனினும், எல்லாவகையான வலி, நோவுகளுக்கும் மருந்து வில்லைகளை உட்கொள்வது சிறந்ததா?

மரம், செடி, வேர், மலர், பட்டை ஆகியவற்றின் சாறைக்கொண்டு உற்பத்தி செய்யப்படும். சித்தாலேபயை தடவி வலி, நோவுகளில் இருந்து நிவாரணம் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை இலங்கையில் இலட்சக்கணக்கான சித்தாலேப பாவ னையாளர்கள் உறுதிசெய்துள்ளனர்.

இலங்கை சுகாதாரத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற சித்தாலேப

ஐ.எஸ்.ஓ. 9002 (ISO 9002) சர்வதேச தர நிர் ணயத்தின் மேற்பார்வையின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்றது.

சித்தாலேப
ஹெட்டிகொ. குரூப்

ஹெட்டிகொட இண்டஸ்ரீஸ் (பிரை) லிமிடெட்
33/3, ஸ்ரீ தர்மாராம வீதி, இரத்மலான
ரெலிபோன் 736910 பக்ஸ் 735465

(C/9497)

செவிகள் தயாரா? MW 855 MHz



நாளை தீபாவளி முதல்

855 MHz வானொலி மத்திய அலைவரிசையில்
மிலேனியம் அட்வடைசிங் சேவிசர்ஸ் ஸ்தாபனத்தார் வழங்கும்

தேனோசை
சுவைக்கத் தயாராகுங்கள்

தினந்தோறும் வானொலியில்
காலை 7.30 - 8.30 சனி, ஞாயிறு மாலை 9:00 - 10.00

ஆனந்த வேளை
மாலை 7.00 - 8.00

பொன்னந்தி வேளை
தென் இந்தியாவின் மூத்த ஒலிபரப்பாளர்கள் உங்கள் அபிமானக் குரல்களில் தரப்போகும்
அறுசுவை விருந்து
ஒவ்வொரு நாளும் புதுமை! ஒவ்வொரு நிமிடமும் இனிமை!

(C/9714)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## இறைச்சிக்கோழி

புறோயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து தேவையான அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு இல: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (70539)

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- இல: 15,6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்) (70598)

இறைச்சிக்கோழி புறோயிலர் விற்பனைக்குண்டு. குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.தீபாவளியை முன்னிட்டு காலை6மணி முதல் தொடர்ந்து மாலை வரையும் கிடைக்கும். வாடிக்கையாளருக்கு விசேட கழிவு உண்டு. தொடர்பு: லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (70632)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தட்டுப்பாடின்றி தினமும் காலை 7 மணி தொடக்கம் (பாதிக்கோழி உட்பட) சுகாதாரமுறைப்படி சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். நியாயமான விலை நுட்பமான நிறுவை, சுறுசுறுப்பானசேவை அத்துடன் அடைமுட்டையும் உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோசென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி, நல்லூர். (70523)

தீபாவளியை முன்னிட்டு மலிவு விலையில் நிறைகூடிய புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனை செய்யப்படுகின்றன. சுத்தம்செய்து கொடுப்பதுடன் பாதிக்கோழியும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல.40/6,புகையிரத கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம்.(செல்வ நாகபூசணி அம்மன்கோயில் அருகில்) (70664)

## மணமகள் தேவை

எம்மிடம் வெளிநாட்டு மணமகன் லண்டன் எஞ்சினியர்; (70,71ஆம் ஆண்டு)உண்டு. பாவம்குறைவு.குறிப்பு படத்துடன் தொடர்புகொள்ளவும்.ஸ்ரீ முருகன் சோதிடர், நல்லூர் வடக்கு. (70463)

எம்மிடம் வெளிநாட்டு மணமகன் உண்டு. பாவம் குறைந்த மணமகள் (67ஆம் ஆண்டிற்குப்பின்) தேவை. குறிப்பு,படத்துடன் செவ்வாய்க்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ முருகன் சோதிடர் நல்லூர் வடக்கு. (70464)

இந்து கௌரவமான குடும்பம் இங்கிலாந்தில் நிரந்தரவதிவுபெற்று பிரித்தானிய அரசினால் கணனி பயிற்றப்பட்ட தற்போது தன்பங்குள்ள நிறுவனத்தில் முகாமைப் பணிப்பாளர் வயது 39செவ்வாய் எட்டில் லக்கினபாவம் 48 நிரம்பிய மணமகனுக்கு மணமகள் தேவை. முதற்தொடர்புடன் முழுவிவரமும் தரவும். விவரம் யாவும் இரகசியமாகவும் இருக்கும். தொடர்பு:- விளம்பர இலக்கம்:963,மே/பா உதயன். (70499)

## வீடு விற்பனைக்கு

ஹாட்லி, மெதடிஸ்த வடஇந்து மகளிர்கல்லூரிகளுக்கு அருகில் தம்பசெட்டிவீதி, பருத்தித்துறையில் அமைந்துள்ள மாடிவீடு விற்பனைக்கு உள்ளது. தொடர்புகொள்ளும் முகவரி M.P.C.S தலைமைக் காரியாலயம் தம்பசெட்டிவீதி,பருத்தித்துறை.(70623)

## யாழ்ப்பாணம்

பல அழகுகளும் அமைந்த பத்துச் சிறுகதைகளும் அவற்றை விளக்கிக் கூறும் ஒரு கட்டுரையும் இலங்கையின் அண்மைக்கால வரலாற்றைக் கூறுபவை. 300 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல் ரூபா-50. (70633)

## விற்பனைக்கு

தேநீர் கடைகளுக்கும் பேக்கரிகளுக்கும் பாவிக்கக்கூடிய சோக்கேஸ்கள் மற்றும் புத்தம் புதிய Lumala Sports 21 Gear Bike விற்பனைக்குண்டு. தொடர்பு: சுரேன் (பிறிமியர்), பிரதானவீதி, யாழ்ப்பாணம். (70646)

## விற்பனைக்கு

சாவகச்சேரி நுணாவில் கல்வயல் வீதியிலுள்ள 23 பரப்புத் தென்னங்காணி, வீடு கராஜ் உடன் சகல வசதிகளும் கூடியது. காணிபிரித்தும் கொடுக்கப்படும். மற்றும் கனகம்புளியடி சந்தியிலிருந்து புத்தூர் வீதியில் 100 யார் தூரத்தில் 10 1/4பரப்புக் காணி வீட்டுடன் கூடியதும் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- சு.சண்முகநாதன், நுணாவில்,கல்வயல்வீதி, சாவகச்சேரி. (70592)


## விநாயகர் சோதிடம்

சாதகம் பலனறிய,விவாகப்பொருத்தம் பார்க்க, சாதகம் எழுத, விவாக தாமதத்திற்கும், கிரகதோசத்திற்கும் தகுந்த பரிகாரம், கால சர்ப்பதோஷ நிவர்த்தி, பிரயாணத்தடை இதற்கு யந்திரம் ஆகியவற்றிற்கு சந்தியுங்கள் கொழும்பில் 22 வருடம் அனுபவம் வாய்ந்த விஸ்வ பிரம்மஸ்ரீ மா.தங்கவேல் சோதிடர் 9,டச்சுவீதி, சாவகச்சேரி. (70698)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 25 - 09 - 1931



உதிர்வு 08 - 10 - 1999

அமரர்

## செல்லையா கார்த்திகேசு

அன்பின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் நேசக்கரம் நீட்டி
எம் நெஞ்சங்களில் தூய சுடரேற்றிய
எம் செல்வமே! குலவிளக்கே
ஒரு திங்கள் வந்ததுவா? நம்பமுடியவில்லை
ஒரு திங்கள் ஒரு கணமா? எமக்குப் புரியவில்லை
நெஞ்சு வெடிக்கிறது: நேற்றுப் போல் இருக்கின்றது
அன்பூட்டி அமுதூட்டி அரவணைத்த ஐயாவே!
நாம் உம் பாதையிலே நடந்திட
பாதி வழியில் பரிதவிக்க விட்டுச் சென்றீரே!
ஆதரிக்க ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
ஐயா என்று அழைக்க நீங்களில்லையே
பொல்லாத பூமிதனில் நல்லார்க்கு
இடமில்லையென
காலனவன் எமைக் காலம் முழுவதும்
கண்கலங்கச் செய்திட்டான்
ஐயா! அவன் கவர்ந்தது உம் உயிரைத்தான்
ஆனால் உம் நினைவுகள் எம் உடலுடன் கலந்து
என்றும் நீங்காது நிலைத்திருக்கும்.

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.**

07-11-1999 ஞாயிற்றுக்கிழமை (நாளை) அராலி வடக்கில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புரிமை கொண்டு அழைக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரன், சகோதரி, பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

S. கணேசன்
ஸ்ரீ முருகன் லோன்றி,
நம். 12, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (70629)
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 13 - 10 - 1936



மறைவு 07 - 10 - 1999

அமரர்

## பேரம்பலம் கனகசிங்கம்

07-10-1999 இல் கொழும்பில் காலமான அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 06-11-1999 இல் வவுனியாவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அன்று அவரின் நினைவாக எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தாய், சகோதரர்.**

**49/38 L, கோவில் வீதி,
குருமன்காடு,
வவுனியா.** (70650)

**நடேசபிள்ளை
'நாகபவனம்'
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.**

---

# விற்பனைக்கு

**இறக்குமதி செய்யப்பட்ட
பிறந்ததின, திருமண வாழ்த்துமடல்கள்,
அழைப்பிதழ்கள்
விற்பனைக்கு உண்டு**

## லிங்கன் ஸ்ரோர்ஸ்

**168, அஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
(C/9675)

---

# வடஇலங்கைச் சங்கீத சபை பரீட்சைகள் - 2000

**வடஇலங்கைச் சங்கீத் சபையின் 2,000 ஆம் ஆண்டுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் 1999-09-01 புதன் கிழமை முதல் விற்பனைக்கு வந்துள்ளன. விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை (அறிவுறுத்தல் பிரதியுடன்) ரூபா 20.00**

## முடிவு திகதி: 26-11-1999

விண்ணப்பப்படிவத்தை தபால் மூலம் பெற விரும்பும் தேர்வு நாடிகள் ரூபா 20.00 பெறுமதியான காசுக்கட்டளை (எம். ஓ.) யுடன் ரூபா 3. 50 பெறுமதியான தபாற் தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் (10 செ. மீ. X 22 செ. மீ.) கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

தேர்வு நாடி ஒருவர் ஒரு படிவத்தில் ஒரு பாடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி விண்ணப்பம் அனுப்பக் கடமைப்பட்டுள்ளார்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்கோ அல்லது தரத்திற்கோ ஒரே படிவத்தில் விண்ணப்பித்தால் அத்தகைய விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

காசுக்கட்டளைகள் 'வடஇலங்கைச் சங்கீத சபை' என்ற பெயரில் பெறப்பட்டு யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அமைதல் வேண்டும்.

**பின்வரும் இடங்களில் விண்ணப்பப்படிவங்களை நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

01)வட இலங்கைச் சங்கீத சபை
யாழ்ப்பாணக் கல்வி வலயம்,
செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.

02)திரு. வி. எம். குகானந்தா,
கொ/விவேகானந்தாக் கல்லூரி,
புதுச்செட்டித்தெரு, கொழும்பு.

03)திரு. க. தவமணிதாசன் (ஆசிரியர்)
வவு/இறம்பைக்குளம் மகளிர் ம. வி.
வவுனியா.

04)திரு. எஸ். கே. சதாசிவம்,
உதவிக் கல்விப்பணிப்பாளர்,
கிளி. ~ முல். இணைப்பாளர்,
கச்சேரி, வவுனியா.

05)திருமதி ட. முருகுப்பிள்ளை,
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (சங்கீதம்)
கல்வித்திணைக்களம், திருகோணமலை.

**திருமதி செ. மகாலிங்கம்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம்.
(C/8820) உபதலைவர், வட இலங்கைச் சங்கீத சபை.

---

# 10 வது நினைவு அலைகள்

தாயின் மடியில் 1943 - 10 - 25



புதை குழியில் 1989 - 11 - 06

## அமரர் ஐ.சண்முகலிங்கம் (ஐ.சண்)

(பத்திரிகைச் செய்தியாளரும் முன்னோடி எழுத்தாளரும்)

எமதன்பின் பப்பாவே
ஆண்டுகள் பத்துகள் ஓடினாலும்
நீங்கவில்லை நினைவுகள்
அன்று எம்மைவிட்டு பிரிய மனதின்றி நிற்கையில்
பிரித்தெடுத்தனர் கொடிய வதையினர்
உம்மை என்ன செய்தனரோ
நினைக்கையில் மனம் வெதும்புகின்றது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

'வருத்தப்பட்டு பாரம் சுமக்கின்றவர்களே என்னிடத்தில் வாருங்கள்
நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'


உங்கள் பிரிவால் துயறுரும்
**மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரி, மைத்துனர்.**

21/1 புவனேஸ்வரி அம்மாள் வீதி,
நல்லூர் கிழக்கு. (70669)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டினில் நெஞ்சம் சுமக்கும் நினைவுகள்

மலர்வு 22 - 10 - 1945



உதிர்வு 29 - 10 - 1997

அமரா நாகரத்தினம் செல்வரத்தினம்

(முன்னாள் வடமாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை)

B.Sc (Eng) Hon, M.Eng.Sc (Australia), M.I.C.E (LONDON), M.I.E (Sri Lanka)

**திதி: 06-11-1999**

குடும்பத்தின் குளவிளக்காய்
குவலயம் போற்ற வாழ்ந்த
எம் அன்புத் தந்தையே!
காலத்தால் அழியாக் காவியமாகி
நேசத்தில் எல்லாமாய் நிறைந்து
பாசப்பிணைப்புடன் எம்மை
வழிநடத்தி வாழ்விக்கும்
உங்கள் நினைவுகள் காலங்கள்
நகர்வதால் மறந்திடல் இல்லை
என்றும் பசுமையாய் எம்
நெஞ்சம் சுமக்கும் நினைவுகளாகும்.

உங்களையே நிதம் தேடும்
மனைவி, பிள்ளைகள்

40/3, புகையிரதப் பாதை
கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (70658)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை - 1999



வடமராட்சிக் கோட்டத்தில் ~ முதலாவது
யாழ் மாவட்டத்தில் ~ மூன்றாவது

## செல்வி மதுசிந்துஜா சரவணமுத்து

எமது மகள் 169 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் 3ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டமைக்காக பல்கலையும் கற்று குச்சம் சரஸ்வதியின் துணையுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

எமது மகளுக்கு கல்வி கற்பித்த யாழ்.வல்வை றோமன் கத்தோலிக்க தமிழக் கலவன் பாடசாலை அதிபர், ஆசிரிய, ஆசிரியைகட்கும் இணைந்து கற்பித்த யா/வல்/அ.மி.த.க. பாடசாலை அதிபர், ஆசிரிய, ஆசிரியைகட்கும் விசேடமாக திரு த.கனகரெத்தினம் (யா/வல்/றோ.க.த.க. பாடசாலை, இளைப்பாறிய அதிபர்) அவர்கட்கும் பிரத்தியேகமாக கல்வி கற்பித்த பகவதி ஆசிரியை (வல்வெட்டி) அவர்கட்கும் எமது சிரம் தாழ்த்தி நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மற்றும் எமது மகளுடன் இதே பாடசாலையில் கல்வி கற்று சித்தி அடைந்த

கார்த்திகா தங்கேஸ்வரராஜா - 126 புள்ளிகள்
நிதர்சன் ஜெயக்கொடி - 125 புள்ளிகள்
பெற்ற இருவரையும் மனதார வாழ்த்துகின்றோம்.

தெணியம்மை,
வல்வெட்டித்துறை. (70677)

பாசமிகு
அப்பா, அம்மா, அக்கா
தங்கை, உறவினர்கள்.

## நீரிழிவு நோய் பரிசோதனைமுகாம்கள்

தென்மராட்சி,நவம்.6

சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் நவம்பர்மாதம் நீரிழிவு நோய் மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இருபது நிலையங்களில் நீரிழிவு நோய் பரிசோதனைகளை நடத்த விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களும் சுகாதாரத் தொண்டர்களும் லயன்ஸ், லியோ கழக உறுப்பினர்களும் பரிசோதனைகளை மேற்கொள்வர். இதற்கான மருந்துகளை லயன்ஸ் கழகம் வழங்கும். (ஐ-117)

## கண்காட்சி

அறவழி நிலையத்தினால் நடத்தப்படும் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மழலைகள் கல்விப் பூங்கா சிறார்களின் ஆக்கப் பொருள் கண்காட்சி இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நிலையத் தலைவர் வீ.ஜீ.தங்கவேல் தலைமையில் நடைபெறும்.


விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய உதவிப் பணிப்பாளர் கே.ஆர். டேவிட், சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு.செ.சரவணபவ, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் மு.நாகேந்திரராசா ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-117)

## புலமைப்பரிசில் 2000

தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள் விடையுடன் வாரம் தோறும் வெளியிடப்படுகின்றது. பெற விரும்புவோர் சுயமுகவரியிட்ட கடித உறையுடன் தொடர்பு கொள்ளவும்.

சுந்தர் வெளியீடு 54/9
கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு. (70695)


# வெப்




நுளம்புச்சுருள் உற்பத்தியில் சர்வதேச புகழ்பெற்ற 'ஜப்பான் நாட்டின்' வரையறுக்கப்பட்ட பியூமாக்கிலா நிறுவனத்தின் அனுசரணையுடன் ஏனைய நுளம்புச் சுருள்களைப் போல் அல்லாது உயர்ரக ஜப்பானிய தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட ஒரேயொரு நுளம்புச்சுருள்

## வெப் நுளம்புச் சுருள்கள்

## (VAPE MOSQUITO COILS)

சந்தைப்படுத்துவோர்:-

வரையறுக்கப்பட்ட
டெல்மேஜ் போசைத் அன் கம்பனி.

யாழ்ப்பாண ஏக விநியோகஸ்தர் :-

றூபா பன்முக வர்த்தகம்

இல- 104 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வியாபாரிகளுக்கு விசேட
விலைக்கழிவுகள் உண்டு.

(69927)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

### செல்லையா விஜயரட்னம் (தோப்பன்)

செல்லையா விஜயரட்னம் அவர்கள் நீர்ப்பாசன மின்சக்தி - பெரும் வீதிகள் அமைச்சின் ஆள்புல வேலைகள் பிரிவு வட மாநிலத்தில் 1971ஆம் ஆண்டு தற்காலிகமாக மேற்பார்வையாளராகக் கடமை புரிந்தவரும். மேற்குறிப்பிட்ட வேலைத் தளத்தின் தொழிலாளர் சங்கம், வட - மாநிலத் தலைவராகவும் ஊழியர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளை சங்கத் தின் மூலம் செய்து கொடுத்தவரும் வீதி பெருந்தெருக்கள் திணைக்களத்தில் வேலை - மேற்பார்வையாளராகவும் தொழில் நுட்ப உத்தியோகஸ்தராகவும் கடமையாற்றி 1986ஆம் ஆண்டு ஓய்வுபெற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையில், வீதி பராமரிப்பு ஒப்பந்தகாரராகக் கடமையாற்றி 1990ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தி திணைக்களத்தில், வீதி பராமரிப்பு ஒப்பந்தகாரராகக் கடமையாற்றினார். அன்னாரின் மரணம் எனக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. காலஞ்சென்ற செ. விஜயரட்னம் 1960ஆம் ஆண்டிலிருந்து எனது உற்ற நண்பனாக இருந்து வந்தார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி பிள்ளைகள் மற்றும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்.

S.SARVANANTHAN
SARA CONSTRUCTION COMPANY
PROPRIETOR OF SARA METAL CRUSHER
OVERSEERS LANE, TELLIPALAI.
R.M.C.UNDER R.D.A., R.D.D. JAFFNA.

61/4 கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (70723)



## சங்கமம் ரெக்ஸ்

மழைத்துளி மழைத்துளி
மண்ணில் சங்கமம்
பனித்துளி பனித்துளி
மண்ணில் சங்கமம்
புதுவித புடைவைத் தினுசுகள்
சங்கமம்! சங்கமம்!!

**சங்கமம் ரெக்ஸில் சங்கமம்**
'இறக்குமதி செய்யப்பட்ட ரெடிமேட் ஆடைகளின் பிரத்தியேக காட்சியறை'

**சங்கமம் ரெக்ஸ்**

(ஜனரஞ்சகமான ஜவுளிமாளிகை)
54 A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம். (C/9592)



CEFE - Competency
based Economies through
Formation of Enterprises

CEFE

கைத்தொழிற்றுறையில் விருத்திபெற்ற நாடாகிய ஜேர்மனியில் உருவாக்கப்பட்ட ஒரு சிறந்த முறையில் யாழ்ப்பாணத்தில் முயற்சியாண்மைப் பயிற்சி நெறி.

ஸ்ரீ லங்கா ~ ஜேர்மன் CEFE நிகழ்ச்சித் திட்டம்
GTZ யாழ்ப்பாணம் புனர்வாழ்வுச் செயற்றிட்டம்
வடக்கு ~ கிழக்கு மாகாணக் கைத்தொழில் திணைக்களம்
என்பவற்றுடன் இணைந்து
யாழ். பல்கலைக்கழகம்
வழங்கும்
தொழில் முயற்சியாண்மைப் பயிற்சி நெறி வரிசையில

## ஆறாவது பயிற்சிப்பட்டறை

உங்கள் தொழில் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமென ஆர்வம் கொண்டுள்ளீர்களா? வெற்றியின் நுணுக்கங்களை அறிந்துகொள்ள ஆசைப்படுகின்றீர்களா? திட்டமிட்டுச் செயற்பட்டு வெற்றியை அடைய நீங்கள் எப்படி, எதைச் செய்ய வேண்டுமென நீங்களே உணர்ந்து கொள்ளும் வாய்ப்பை இந்தப் பயிற்சி உங்களுக்குத் தரும். பயிற்சி முடிவில் ஒரு சிறந்த தொழில் முயற்சியாளனாகச் செயற்பட உங்களால் முடியும் என்ற தன்னம்பிக்கை நிச்சயம் உங்களிடம் வளர்ந்திருக்கும்.

பயிற்சிக் காலம்: 14 நாள்கள்
பதிவுக் கட்டணம்: ரூபா 1000
(ஏனைய செலவுகள் இலவசம்)

விண்ணப்பப் படிவத்தினைப் பெறவும் கையளிக்கவும்
CEFE அலகின் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.

விண்ணப்ப முடிவு திகதி: 15 ~ 12~1999

முகவரி:- Co - ordinator/University/CEFE unite,
University City Hall,
Jumma Mosque Lane,
Jaffna.

(C/9700)


# கொழும்பு வரும் ஐ.நா. அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கும் வரவேண்டும்

## பாதுகாவலர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.6

கொழும்புக்கு வருகைதரும் ஐ.நா வின் மனித உரிமைக்குழு அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்யவேண்டும் என்று வடக்கில் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் ஐ.நா. அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகப் பிரதிநிதிக்கு அந்த அமைப்பு எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தெற்கில் கடந்தகாலங்களில் காணாமற்போன 12 ஆயிரம் பொதுமக்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக ஐ.நா. குழு ஒன்று கொழும்பு வருவதாக அறிகிறோம். ஆனால் வடக்கில் காணாமற்போனோர் தொடர்பாக அவர்கள் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

வடக்கு - கிழகில் காணாமற் போனோர் தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் இலங்கை அரசாங்கத்தால் எடுக்கப்படவில்லை.

குடாநாட்டில் இடம்பெற்ற இடம் பெயர்வை அடுத்து 1996ஆம் ஆண்டு மே மாதம் அரசாங்கத்தின் அறிவிப்பை நம்பி மீண்டும் சொந்த இடம் திரும்பியவர்களில் படையினரால் கைது செய்யப்பட்டவர்களில் 400 பேர் காணாமற் போயுள்ளனர்.

அவர்களின் குடும்பங்கள் பெரும் கஷ்ட நிலையில் காணாமற் போன தமது உடன்பிறப்புக்கள் திரும்பி வருவர் என்ற நம்பிக்கையில் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

காணாமற்போனோர் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

எனவே இலங்கை வரும் ஐ.நா. குழுவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் இங்குள்ள உண்மையான நிலைவரத்தைஅறிந்து காணாமற் போனோரின் குடும்பங்களுக்கு நீதி கிடைக்க உதவவேண்டும் - என்றுள்ளது. (ஐ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

'உதயன்' வெற்றிக்கிண்ணத்துக்காக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் 21வயதுக்கு உட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நெல்லியடி ம.ம.வி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* சிதம்பராக் கல்லூரி எதிர் ஹாட்லிக் கல்லூரி.
* உடுப்பிட்டிஅ.மி.த.க பாடசாலை எதிர் நெல்லியடி ம.ம.வி. (ஐ-3-4)

* * *

யாழ். ஹற்றன் நஷனல் வங்கியின் ஏற்பாட்டில் விளையாட்டுக் கழகங்கள், பாடசாலைகளுக்கிடையே நடத்தும் வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்.மத்தியகல்லூரி வலைபந்தாட்ட ஆடுகளத்தில் இன்று நடைபெறவிருக்கும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

* பிற்பகல் 3.30 மணிக்கு - பல்கலைக்கழக 'புளூ' அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் 'ஏ' அணி.
* பிற்பகல் 4.30 மணிக்கு - பற்றீஸியன் 'கோல்ட்ஸ்' அணி எதிர் ஜொலி ஸ்ரார் அணி. (ஐ-3-4)

* * *

அரியாலை மத்தி இளைஞர் கழகம் தனது இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 7 பேர் பங்குபற்றும் 12 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கனகரத்தினம் ம.ம.வி மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* காலை 9.00 மணி - ஜம்பேர்ஸ் வி.க எதிர் நல்லூர் ஐக்கிய வி.க 'ஏ' அணி.
* முற்பகல் 11.00 மணி - வை.எம்.சி.ஏ வி.க அணி எதிர் நல்லூர் தெற்கு வி.க.
* பிற்பகல் 3.00 மணி பிரதீப் வி.க எதிர் திரீஸ்ரார் வி.க.
* பிற்பகல் 4.30 மணி - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை எதிர் உடற்கல்விப் பிரிவு. (இ-3-4)


உ

கல்வியங்காடு

## இலங்கை மனோன்மணி அம்பாள் கோயில் கேதார கௌரிக்காப்பு


திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயில் கேதார கௌரிக்காப்பு இம்முறையும் வழமைபோல் 07-11-99 ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு (பழைய நேரம்) விசேட பூசையைத் தொடர்ந்து வழங்கப்படும் என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

சு. பாலசுப்பிரமணிய ஐயர்
ஆதீனகர்த்தாவும்
ஆலய உரிமையாளரும்.

சோ. ரவிச்சந்திரக்குருக்கள்,
பத்திரகாளி கோயில்,
திருகோணமலை. (70730)



## 16 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 22-10-1973 மறைவு 22-10-1999

### வஜிதா துரைராஜன் (சூட்டி)

பதினாறாம் நாள் இன்றம்மா
பதைக்கிறதே எங்கள் மனம்!
பிறந்த நாள் அன்றுனக்கு
இறந்த நாளும் வந்ததேனோ!
மணக்கோலம் காணாமல்
பிணக்கோலம் கொண்டாயே
சுட்டியாய் சுற்றினாயே
சூட்டியம்மா நீ எங்கே?
ஆசிரியத் தொழிலேற்க
ஆவலுடன் வந்தாயே
ஆசைகள் நிறைவேறுமுன்னே
ஆவியாகிப் போனாயோ?
நீ இல்லா வீடிங்கு
நீர் இல்லாக் குளமாச்சே
ஆண்டு பல சென்றாலும்
பார்த்திருப்போம் உன்வரவை...

உன் பிரிவால் துயருற்றிருக்கும

அப்பா, அம்மா, மாமாமார், மாமிமார்,
அன்ரிமார், பெரியப்பாமார், சித்தப்பாமார்,
அண்ணாமார், மச்சான்மார், மச்சிமார்,
அக்கா, தம்பிமார், தங்கைமார்,

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (70732)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிரடி அரங்கு

யாழ்.பல்கலைக் கழகத்தில் உடற்கல்வித்துறை டிப்ளோமா பயிற்சி பெறத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், அத்துறையின் சிரேஷ்ட மாணவர்களால் பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டதாகப் பிரஸ்தாபித்து கடந்த 16-10-1999 சஞ்சீவியில் இந்தப் பத்தியில் பிரசுரமாகியிருந்த தகவல் குறித்து அத்துறையின் புதுமுக மாணவர்களில் 43பேரின் ஒப்பத்துடன் ஒரு மறுப்புக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றது.

கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தனியாக ஒரு தாளிலும் ஒப்பங்கள் பிறிதொரு (வேறுவகைத்) தாளிலும் அமைந்திருந்தன.

"முதலாம் வருட மாணவர்கள் ஆகிய நாம் எச்சந்தர்ப்பத்திலும் பகிடிவதை தொடர்பான விடயத்திற்கு முகம்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படவில்லை" என்றும் -

"பல நெருக்கடிகளின் மத்தியில் உருவாக்கப்பட்ட இக்கற்கை நெறியின் வளர்ச்சியைத் தடைப்படுத்துவதற்காகச் சில உந்துசக்திகள் தங்களுக்குத் தவறான செய்திகளை வழங்கியிருக்கலாம்" என்றும் -

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இக்கடிதம் தொடர்பாக பின்வரும் தகவல்களைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

* பகிடிவதை நடந்தது உண்மையே.

* பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்களும் இக்கடிதத்தில் ஒப்பமிட்டுள்ளனர்.

* இந்தக் கடிதத்தில் ஒப்பம் பெறப்பட்ட வழிமுறை ஒரு வகையில் பகிடிவதைப் பாணியின் வழியில் அமைந்ததே.

என்றாலும் மேற்படி அதிரடி அரங்குத் தகவலுக்குப் பின்னர், சம்பந்தப்பட்ட கடிதத்தில் ஒப்பம் பெறுவதில் மட்டுமே 'அழுத்தமான' போக்கு இருந்தது. மற்றப்படி பகிடிவதை முற்றாகவே நிறுத்தப்பட்டுவிட்டது.

ரோசம் உள்ளவர்கள் முதற்பிழையோடு திருந்தி விடுவது வழக்கம் ஒரு தகவலுடன் தமது நடவடிக்கைகளைத் திருத்திக்கொண்ட - அல்லது தவறு செய்யப்பட்ட ஒரு சில மாணவர்களையும் திருந்தவைத்த - உடற்கல்வி டிப்ளோமாத்துறை சிரேஷ்ட மாணவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

தற்போது அனுமதி பெற்றிருக்கும் புதுமுக மாணவர்களுக்கு ஒரு குறிப்பு:-

நீங்கள் பகிடிவதைக்கு உட்படுத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தி ஒப்பமிட்ட கடிதம் இங்கு பாதுகாப்பான ஆவணமாக வைக்கப்பட்டுள்ளது - அடுத்த வருடம் மீண்டும் அதை உங்களுக்கு நாம் நினைவூட்ட வைக்கும் நிலைமையை ஏற்படுத்தாமல் - உங்களின் சிரேஷ்ட மாணவர்கள் திருந்திக்கொண்டது போல நீங்களும் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும் என்பதை சமூகம் ஆவலோடு எதிர்பார்க்கின்றது என்பதைக் கூறிவைக்க விரும்புகிறோம்.

* * *

அரசாங்கத் திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்களுக்கு அவற்றின் கொழும்புத் தலைமை அலுவலகங்களில் இருந்துவரும் கடிதங்களில் மிகப் பெரும்பாலானவை இன்னமும் தனிச்சிங்களத்திலேயே வந்துகொண்டிருக்கின்றன. தமிழும் நாட்டின் நிர்வாகமொழி என்று அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டு பதினொரு வருடங்கள் ஆகின்றன். ஆனால் சிங்களத் திணிப்புத் தொடரவே செய்கிறது.

திணிப்பு ஒருபுறம் இருக்க, சிங்களச் சுற்றுநிருபங்கள் இங்குள்ள அதிகாரிகள் சிலருக்குத் தாம் விரும்பிய நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

வடபிராந்திய போக்குவரத்துச்சபையில் கொழும்பிலிருந்து வந்த சுற்றுநிருபத்தில் இல்லாத விடயங்கள் புதிய நடவடிக்கைகளாக அறிவிக்கப்பட்டதாக ஊழியர்கள் முறைப்படுகிறார்கள்.

விவரம் இதுதான்:

பஸ்சேவையின்போது கடமையில் உள்ள சாரதி, நடத்துநர் ஆகியோரின் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட வேண்டுமெனவும் பயிற்சிக்குரிய கட்டணம் அந்தந்த சாரதி அல்லது நடத்துநர் செலுத்தவேண்டுமெனவும் -

ஒரு நாளைக்கு பயிற்சிக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படல் வேண்டுமெனவும் -

மத்திய போக்குவரத்துச் சபையினால் சுற்று நிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக வ.பி.போ.ச. கோண்டாவில் டிப்போ விளம்பரப் பலகையில் சுற்றுநிருபம் போடப்பட்டிருந்தது. எனினும் அது மறுநாள் அகற்றப்பட்டது.

இச்சுற்றுநிருபத்தின் பிரகாரம் தவறுகள் செய்த சாரதி, நடத்துநர்கள் பயிற்சிக் கட்டணம் செலுத்தியே பயிற்சிபெற்றனர்.

மத்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர் காரைநகர் பஸ்டிப்போ திறப்பு விழாவுக்காக சென்ற மாதம் வந்திருந்தபோது, இவரைச் சந்தித்த ஊழியச் சங்கப் பிரதிநிதிகள் இவ்விடயம் குறித்து முறையிட்டனர். அப்போது அவ்வாறான சுற்றுநிருபம் தம்மால் வெளியிடப்படவில்லை என கூறினாராம்.

அவ்வேளையில் அங்கிருந்த வ.பி.போ.சபை அதிகாரிகள் சிரித்து சமாளிக்க முயன்றனர். பின்னர் தாங்கள்தான் சுற்றுநிருபத்தை தயாரித்து வெளியிட்டதாகத் தெரிவித்தனராம்.

தம்மிடம் பயிற்சிக் கட்டணம் என அறிடப்பட்ட முழுப்பணத்தையும் மீள வழங்குமாறு சாரதிகளும் நடத்துநர்களும் இப்போது போர்க்கொடி உயர்த்துகிறார்கள்!

* * *

தீபாவளி அமளியோடு நகரின் பல பகுதிகளிலும் திருட்டுச் சம்பவங்களும் அமளியாகிவிட்டன. பகலில் வந்து குறிபார்த்து இரவில் திருட்டுக்கள் நடத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

அதனால் இரவில் மட்டுமன்றி பகலிலும் பொதுமக்கள் கவனமாக இருக்கவேண்டும். வீட்டுக்கு அறியாதவர்கள், தெரியாதவர்கள், வெளியார்கள் பகலில் வரும்போது மிக அவதானமாக இருப்பது அவசியம். அவர்களிடம் கண்டபடி கதை கொடுக்காது தவிர்ப்பதும் அவசியம்.

நல்லூர், ஆனைப்பந்தி, அத்தியடிப் பகுதிகளில் அடுத்தடுத்துத் திருட்டுக்கள் நடைபெற்றுள்ளன. திருடர்கள் பல உத்திகளைக் கையாண்டு வருகின்றனர். இரவில் ஊரடங்கு நேரத்தில் திருட்டுக்கள் நடைபெறுவதால் அயலவர்களும் உதவிக்கு வரமாட்டார்கள் என்ற துணிவு திருடர்களுக்கு.

வீடுகளில் மட்டுமன்றி நகரின் மத்தியில் உள்ள கடைகளிலும் ஊரடங்கு வேளையில் தீபாவளித்திருட்டுகள் பல நடைபெற்றுள்ளன.

யாழ். நவீன சந்தைப் பகுதியிலுள்ள ஐந்து கடைகளில் இவ்வாரமத்தியில் நடைபெற்ற திருட்டுச் சம்பவமானது நகரிலுள்ள வர்த்தக நிறுவனங்களின் பாதுகாப்பினைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

இரவு நேரத்தில் ஊரடங்கு அமுலில் உள்ள வேளையில் திருடர்கள் அலவாங்குகள், இரும்புக்கம்பிகள் கொண்டு பூட்டுக்களை உடைத்தே உள்ளே சென்றிருப்பதாக அறியப்படுகிறது. இரும்பு அரியும் வாள்களால் அறுக்கப்பட்டுக் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கிறார்கள்.

பல மணித்தியாலங்கள் வரை பிரயத்தனப்பட்டே இந்தக்கதவுகள் திறக்கப்பட்டிருக்க வேண்டும். ஊரடங்கு வேளையில் அவர்களால் எவ்வாறு நீண்ட நேரம் மினைக்கெட முடிந்தது என்ற சந்தேகம் பரவலாக எழுந்துள்ளது.

திருடர்கள் கடைகளிலிருந்த புடைவைகளை விட மேசை லாச்சிகளிலிருந்த பணத்தினையே வழித்தெடுத்துச் சென்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

-மின்னல்

# புலிகளின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டதே தோல்விக்கு காரணம்

## இராணுவ ஆய்வாளர் அத்தாஸ் கூறுகிறார்

கொழும்பு,நவ.6

விடுதலைப் புலிகள் பலவீனமான நிலையில் இருப்பதாக அரசாங்கம் பிரசாரம் செய்து வந்தமையே ஒட்டுசுட்டான்,நெடுங்கேணி முகாம்கள் புலிகளிடம் வீழக் காரணம் என்று இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் தெரிவித்தார்.

பி.பிஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் பலவீனமான நிலையில் உள்ளதாக அரசாங்கம் பிரசாரம் செய்வதுடன், அவர்களின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டது. முக்கிய படை முகாம்கள் புலிகளிடம் வீழ இதுவே காரணமாயிற்று.

முகாம்கள் தாக்கப்படப்போவதாக ஐந்து நாள்களுக்கு முன்பே இராணுவத் தலைமையகத்துக்குத் தகவல் கிடைத்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது - என்று அவர் தெரிவித்தார்.

# இயன்றவரை மோதிவிட்டு பின்வாங்கி விட்டோம்!

## காயமடைந்த சிப்பாய் தெரிவிப்பு

கொழும்பு,நவ.6

நெடுங்கேணிப் பிரதேசத்தில் கட்டளையிடும் அதிகாரிகள் எவரும் இல்லாத காரணத்தால் சாதாரண சிப்பாய்களால் எதுவும் செய்ய முடியவில்லை. இயலுமட்டும் நேரடியாக மோதினோம். பின்னர் பின்வாங்கி விட்டோம்.

அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் சிப்பாய் ஒருவர் மேற்கண்டவாறு பி.பி.ஸி.சிங்கள சேவைக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நெடுங்கேணிப் படைத்தளத்தில் முன்னரங்க நிலையில் கடற்படையினரே பணியில் இருந்தனர். அவர்கள் போதிய எதிர்ப்புக் காட்டாத காரணத்தால் அவர்களைத் தாண்டி எமது பகுதிக்குள் புலிகள் திடீரென வந்துவிட்டனர்.

எமக்குப் பொறுப்பாக கட்டளையிடும் அதிகாரிகள் எவரும் அங்கு இருக்கவில்லை. கட்டளையிட எவரும் இல்லாத நிலையில் புலிகளுடன் நேருக்குநேர் மோதவேண்டி ஏற்றபட்டது. எம்மால் முடிந்தளவு மோதினோம். பின்னர் பின்வாங்கிவிட்டோம்- என்றார் அவர். (ஐ-3)

# உயிரிழந்த மேலும் 24 புலிகளின் விவரம்

வவுனியா,நவ.6

ஒட்டுசுட்டான் - நெடுங்கேணிப் பகுதியில் இடம்பெற்றுவரும் "ஓயாத அலைகள்-3" நடவடிக்கையின்போது புலிகள் தரப்பில் உயிரிழந்தவர்களில் 50பேரின் விவரங்கள் நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தன. உயிரிழந்த மேலும் 24 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

*லெப்.கேணல் ராகவன் (சின்னையா சுஜீந்திரராஜா - வவுனியா)

*2 ஆம் லெப். இசைவேந்தன் (செல்வராசா நிசாந்தன்- யாழ்ப்பாணம்)

*குமரன்(அன்ரனிராஜா ரஞ்சித்குமார்- கொழும்பு)

*பார்வேந்தன் அல்லது இன்பராஜ்.(மகேஸ்வரராஜா ஜெயரூபன்- யாழ்ப்பாணம்).

*நிலவழகன் (சுப்பிரமணியம் சசிரேசன் - யாழ்ப்பாணம்)

* குறிஞ்சிமணி (அரியதாஸ் குட்டிநாதன் - மன்னார்).

* புகழன் (சோமசுந்தரம் ரவிச்சந்திரன் - பரந்தன்)

*உதயன் அல்லது எழிற் கதிரோன் (தனபாலசிங்கம் சபேசன்-யாழ்ப்பாணம்)

*வினோதினி (நடராஜா மைல்காந்தி-ஒட்டுசுட்டான்)

*மரகதன் அல்லது வில்லியம் (நிர்மலாநந்தன் சிவசங்கர்- யாழ்ப்பாணம்)

*நிலா (சிவராத்திரி திலகவதி - யாழ்ப்பாணம்)

*கண்ணன் அல்லது இளவேந்தன் (தங்கராசா செந்தில்குமார்-திருமலை).

*மாலா (துரையப்பா ஸ்ரீரஞ்சினி- வவுனியா)

*நாயகன் (துரைச்சாமி லோகேந்திரன் - மட்டக்களப்பு).

*சஞ்சீவன் (தியாகராஜா ரவீந்திரராஜா-யாழ்ப்பாணம்).

*தமிழ்ப்பிரியன்(பெருமாள் விஜேந்திரகுமார்- உடையார்கட்டு)

*இளங்குமரன் (கந்தசாமி சர்வானந்தன்-யாழ்ப்பாணம்)

*திருக்குமரன் (சந்திரராசா யோகராசா-கண்டி)

*தமிழந்தி (மதுரைவீரன் சிவலட்சுமி - மாங்குளம்)

*புஸ்பலதா(பாக்கியராசா மனோன்மணி - மட்டக்களப்பு)

*அண்ணாநம்பி (இராமன் ஜெயசீலன் - மன்னார்).

*நிலவழகி (வேலு லீலாவதி-மன்னார்)

*சிகரதன் அல்லது சிகரவிழியன் (சத்தியமூர்த்தி விவேகானந்தன்-அம்பாறை)

*தர்சினி (பாக்கியநாதன் ரஞ்சினி- அம்பாறை)

(இ-8-9)

# படையினரின் உறவினர் தகவல் பெற ஏழு நிலையங்கள் அமைப்பு

கொழும்பு,நவ.6

வன்னியில் இடம்பெறும் சண்டையில் பாதிக்கப்பட்ட படையினரின் விவரங்களைப் பெறுவதற்காக ஏழு தகவல் நிலையங்களை அரசாங்கம் அமைத்துள்ளது.

வன்னிப் போர் முனையில் பணிபுரியும் படையினரின் உறவினர்கள் கொழும்பு இராணுவத் தலைமையகம், அநுராதபுரம் ஆஸ்பத்திரி ஆகிய இடங்களுக்குச் சென்று தமது உறவினர்களின் நிலைகுறித்து விசாரித்து வருகின்றனர்.

பெருமளவில் படையினரின் உறவினர்கள் அந்த இடங்களில் கூடுவதால் ஏற்படும் நெருக்கடி நிலையை அடுத்து தகவல் நிலையங்களை அரசாங்கம் அமைத்துள்ளதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

கொழும்பு, பனாகொடை, அநுராதபுரம், திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களில் இந்த நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. (ஐ-3)


## கண்ணீர் அஞ்சலி

**எமது கல்வி வலயத்தின் உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலாதேவி மகேந்திரராசா அவர்களின் அன்புத் தந்தையார்**

**உயர்திரு செ.சிவசுப்பிரமணியம்**

அவர்கள் 04-11-1999 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(70747)

**வலிகாமம் கல்விவலய நலன்புரிக் கழகம், மருதனார்மடம்.**


## இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,நவ.6

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடத்தும் கிராமியக் கலைப் போட்டிகள் இன்று காலை 9.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணிவரை கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக புவியியல்த்துறை தலைவர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக் கழக நுண் கலைப்பீடத் தலைவர் திருமதி நா.செல்வநாயகம், இராமநாதன் நுண்கலைப்பீட இசைத்துறைத் தலைவர் என்.வி.எம்.செல்வநாயகம் அகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (க)

* * *

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் தொடர்ந்து இடம்பெறவுள்ள திரைப்படமாக்கப்பட்ட இலக்கியப் படைப்புகள் வரிசையில் அகிலனின் "பாவை விளக்கு" திரைப்படம் வீடியோக் காட்சியாக இன்று முற்பகல்10.00 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. ஆர்வமுடையோர் எவரும் இப்படக் காட்சிக்கு வருகை தர முடியுமென இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்தார். (ஐ-க)

* * *

யாழ்ப்பாணம்,நவ.6

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை வைரவிழா பரிசுத் தினம் இன்று காலை 9.00 மணிக்கு வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். பல்லைக்கழக தமிழ் துறை தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்க்ராசாவும் சிறப்புவிருந்தினராக வலி மேற்கு பிரதேச செயலர் கா.சந்திரராசாவும் கலந்துகொள்வர். (க)

* * *

யாழ். பல்கலைக்கழ்க உள நலத்துறையும் மருத்துவ மாணவர் ஒன்றியமும் இணைந்து வழங்கும் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'வேள்வித் தீ' நாடகம் இன்று காலை 10.00 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்கும் இரு தடவைகள் பல்கலைக்கழகத்தில் மேடையேறவிருக்கிறது. (ஐ-3)

* * *

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் நிர்வாக முகாமைத்துவம் அடிப்படை கற்கை நெறி தொகுதி மூன்றின் ஆரம்ப நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் செ.பாலச்சந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (-3)

### ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,நவ.6

யாழ் நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையத்தினரின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை நடைபெற உள்ளது.

காலை 6.00 மணிக்கு நாவாந்துறை புனித நிக்கிலஸ் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

நாவாந்துறை பங்குத்தந்தை அருட்திரு பீற்றர் துரைரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக அருட்திரு நேசநாயகம் அடிகளார், அருட்திரு பி.எம்.இம்மானுவேல் ஆகியோர் கலந்துகொள்வர். (ஐ-ம)

### நாளை

யாழ்ப்பாணம்,நவ.6

சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

SALE MT SALE

இதோ!

உள்ளம் துள்ளும் தீபாவளிப் பரிசு!

மகாநதி வழங்கும்

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

07-11-99 வரையுமே

புதிது புதிதாய்ப் பூத்திருக்கும் தீபாவளிப் புடைவை ரகங்களுக்கு கழிவு உண்டு.

மகாநதி புடைவை அகம்

(முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்குக் கைராசியான ஸ்தாபனம்)

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

4, நவீன சந்தை சாவகச்சேரி.

T.P. 2552

சாறி பிளவுஸ் பீஸ் துணிவகைகளுக்கு பிரத்தியேக காட்சி அறைகள்

16, நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

நவீன சந்தை, (மேல்மாடி) சாவகச்சேரி.

(C/9591)


## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,நவ.6

மிட்சுஇ - ஜெசிபா வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ். மத்தியகல்லூரி மைதானத் தில் இன்று காலை 9 மணி முதல் இடம்பெறும் 3ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் திருமலை, வவுனியா அணிகள் மோதுகின்றன. (ஐ-3-8)

## செஞ்.கப்பல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்களுக்கு 40அமெரிக்க டொலர்களும் - கட்டணமாக அறவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச உதவி நிறுவனங்களின் நிதி உதவியுடன் மனிதாபிமானப் பணியாக ஆஸ்பத்திரிகளுக்கான மருந்து வகைகள், பரீட்சை ஆவணங்கள் மற்றும் சர்வதேசத் தொண்டு அமைப்புகளுக்கான பொருள்கள் ஆகியவற்றை இலவசமாக இந்தக்கப்பலில் எடுத்து வர செஞ்சிலுவைச்சர்வதேசக்குழு இதுவரை உதவி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## ஐ.தே.கவின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் உட்பட 40 உறுப்பினர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்றுச் சந்தித்து உறுதி வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் வைத்து நேற்று அவரைச் சந்தித்த இவர்கள் தாம் ஐ.தே.கவில் அங்கம் வகித்துக் கொண்டே இந்த ஆதரவை வழங்கப்போவதாகத் தெரிவித்துள்ளனர்.

ஐ.தே.கவின் சிரேஷ்ட தலைவர்களான விஜேபால மெண்டிஸ், நந்தா மத்தியூ, சுசில்முனசிங்க, சரத் அமுனுகம, சூலபண்டார ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் -

மாகாணசபை, பிரதேசசபை ஆகியவற்றில் ஐ.தே.க சார்பில் அங்கம் வகிக்கும் 35 உறுப்பினர்களுமே - ஜனாதிபதியை சந்தித்துள்ளவர்களாவர்.


JAFFNA DISTRICT AMATEUR ATHLETIC ASSOCIATION

S.L.A.A Technical Officials Examination - 1999

Subjects :- Track/Field/Starting/Time keeping
Language :- Tamil/English
Date of Examination :- 27th November 1999
Centre :- Jaffna
Examination Fee :- Rs 50 per subject

Applications Close On:- 12-11-1999 with the - J.D.A.A.A

Application forms available with the president J.D.A.A.A Aruns Sports Spot, 347, Kasturiar Road, Jaffna.

Jaffna .

Secretary
J.D.A.A.A

(C/9724)


# மரண அறிவித்தல்கள்

## முருகநாதர் சிவானந்தராஜா

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த முருகநாதர் சிவானந்தராஜா ஆஸ்திரேலியாவில்(சிட்னி) 01.11.99 திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி முருகநாதர் - செல்வம் ஆகியோரின் அன்பு மகனும் வள்ளியம்மையின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற நடராஜா (திருகோணமலை), தையல்நாயகி (லண்டன்), றட்னேஸ்வரி(யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரரும் சத்தியநாதன் (பிரான்ஸ்), செல்வநாதன் (இந்தியா), கமலநாயகி (ஜேர்மனி), யோகநாயகி(கொழும்பு), விமலநாயகி (ஆஸ்திரேலியா), வசந்தநாயகி, சிவாம்பிகை (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தந்தையும் சரோஜினி (பிரான்ஸ்) விக்னவேணி(இந்தியா), விக்னராஜா(ஜேர்மனி), குருபரன் (கொழும்பு), கிருபானந்தன்(ஆஸ்திரேலியா), முருகாநந்தராஜா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் நந்தராஜ், ஹரி, நளினா, ஆனந்தினி, வினுசகன், தனுஷா, தர்மினி, பாரதி, துஷானி, பிரதீஷ் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.11.99 திங்கட்கிழமை சிட்னியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.நந்தகுமாரன்.
செட்டிச்சோலை,
அளவெட்டி வடக்கு.
(70752)

## தேவராசா கிருபாகரன்

துர்க்காபுரம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட தேவராசா கிருபாகரன் (மகாஜனக்கல்லூரி மாணவன் - உயர்தரம் 2001 கலைப்பிரிவு, (முன்னாள் மாணவன் தெல்லிப்பழை சைவப்பிரகாசவித்தியாலயம்) காலமாகிவிட்டார்.

அன்னார் மு.தேவராசா - சகுந்தலாதேவி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் சுதாகரன், கயந்தினி, பிரேமலதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தம்பிராசா - பூபதி தம்பதிகளின் அன்புப்பேரனும் சறோஜினிதேவி, ரஞ்சினிதேவி, செல்வராணி, ஆனந்தராசா, இந்திராணி, நிர்மலாதேவி ஆகியோரின் பெறாமகனும் சண்முகராசா, விமலதாசன், தர்சிகா, விநோதினி, தயாபரன், சிவகுமார் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6.11.1999) சனிக்கிழமை காலை10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கட்டுப்பிட்டி இந்து பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சண்முகராசா (மனோ)
(அத்தான், திருநெல்வேலி)
த.ராசன் (கோண்டாவில்)
(70755)

## இராசதுரை சிறிதரன் (அப்பன்)

ஓட்டுமடத்தை பிறப்பிடமாகக் கொண்ட இராசதுரை சிறிதரன் 05.11.99 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தனேஸ்வரியின் பாசமிகு கணவரும் பாணுஷா, டினேஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மணியம் அவர்களின் மருமகனும் தவநாயகி, கோசிந்திரன், லவக்குசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6.11.99) சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வண்ணார்பண்ணை கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மா.இராசதுரை
(தகப்பன்)
687/29, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(70761)

## அம்பலவாணர் இராசசேகரம்

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற அம்பலவாணர் - ஆச்சிமுத்து தம்பதிகளின் மகன் இராசசேகரம் 05.11.99 அன்று காலமாகிவிட்டார். அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6.11.99) சனிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
இ.மனோன்மணி
(மனைவி)
பூதர்வளவு,
அச்செழு, நீர்வேலி.
(70760)


IIS இன் மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் ~2000

5000 மாணவர்களுக்கு

யாழ். மாவட்டத்திலே கணணிக் கல்வியிலே காத்திரமானபங்களிப்பினை வழங்கிவரும் நாம் சர்வதேச சமுகத்தில் இருந்து கணணித்துறையில் அந்நியப்பட்டிருக்கும் எமது மாணவர்களிடையே கணணிக்கல்வியை வளர்ப்பதற்காக கடந்த சில வருடங்களாக பல ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு கணணிப்பயிற்சிநெறிகளுக்கான புலமைப்பரிசில்களை வழங்கியிருந்தோம். அத்திட்டத்தின்கீழ் 2000 ஆம் ஆண்டில் மிகப்பெரும் எடுப்பில் 5000 மாணவர்களுக்கு போட்டிப் பரீட்சை(நுண்ணறிவு, பொது அறிவு) ஒன்றின்மூலம் கீழ்க்காணும் கற்கைநெறிகளுக்கு புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளோம்.

புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கவுள்ள பாடநெறிகள்.

- Advanced Diploma in Applied Computer Science (12 மாதங்கள்)
- Diploma in Software Engineering (12 மாதங்கள்)
- Diploma in Computer Programming (8 மாதங்கள்)
- Diploma in Personal Computer Specialist (8 மாதங்கள்)
- Technician Diploma in Computer Hardware (6 மாதங்கள்)
- Diploma in Microsoft Office (5 மாதங்கள்)
- Diploma in Internet & Email Communication (4 மாதங்கள்)

விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

- பொஸ்கோ புத்தகசாலை , ஆஸ்பத்திரி வீதி , யாழ்ப்பாணம்.
- பூபாலசிங்கம் புத்தகசாலை , ஆஸ்பத்திரி வீதி , யாழ்ப்பாணம்.
- சிறிலங்கா புத்தகசாலை , KKS வீதி , யாழ்ப்பாணம்.
- மொடேண் ஸ்ரோர்ஸ் , நெல்லியடி.
- வடலங்கா புத்தகசாலை , பருத்தித்துறை.
- J.S.T. ஸ்ரேஸனறி , கண்டி வீதி , சாவகச்சேரி.
- அருள்நாயகி புத்தகசாலை, பஸ் நிலையம் , கொடிகாமம்.
- ஆசீர்வாதம் புத்தகசாலை, சாவகச்சேரி.
- கரன் புத்தகசாலை, ஸ்ரேஸன் வீதி , சுன்னாகம்.
- நாயகபாலன் புத்தகசாலை , மானிப்பாய்.

எதிர் வரும் "மிலேனியம்" ஆண்டை எதிர்கொள்ளும் வகையில் அனைத்துத்தரப்பினருக்குமாக நன்கு திட்டமிடப்பட்ட பயிற்சி நெறிகள் இவை என்பது குறிப்பிடத்தக்கது

2000A/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி இப்புலமைப்பரிசில் திட்டத்தில் தெரிவு செய்யப்படுவோருக்கான மேற்குறிப்பிட்ட பயிற்சிநெறிகளின் விசேட பிரிவொன்று எமது சகல பயிற்சி நிறுவனங்களிலும் புரட்டாதி மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படும்

பாடசாலை மாணவர்களுக்கு

"விண்ணப்பதாரி பாடசாலை மாணவன்/மாணவி யாக இருந்தால் உங்களுக்குரிய பரீட்சை கட்டணம் ரூபா 150/= மட்டுமே"
விண்ணப்பப் படிவத்தில் அதிபரின் உறுதிப்படுத்தல் அவசியமாகும்.

உங்கள் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து ரூபா 200 பரீட்சைக்கட்டணத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும். காசுக்கட்டளையாக அனுப்ப விரும்புவோர் Director, Institute of Informatics Studies என்று பெயரிட்டு பணம்பெறும் நிலையம் Post Office - Jaffna எனக் குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய முகவரி :

Director, IIS, 100,Clock Tower Road ,Jaffna.

விண்ணப்பங்கள் யாவும் 14/12/99 வரை ஏற்றுக்கொள்ளப்படும்

இவ் அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்!

எம்முடன் இணைந்து நவீன கணனித்தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளுங்கள்!

Institute of Informatics Studies (IIS)

(பிரித்தானிய IMIS நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)

தலைமை அலுவலகம் : IIS, 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்.

021-2831 Email : iis@sltnet.lk

கிளை நிறுவனங்கள் :
- IIS , நெல்லியடி , கரவெட்டி.
- IIS , [illegible]
- IIS , [illegible] சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியர் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06-11-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


ராகங்கள் பலவிதம்,
'ராகம்ஸ்' பட்டுச்
சோலையின் சேலை
கள் ஒவ்வொன்றும்
புதுவிதம்! தனிரகம்!
என்ன
அதுதான்!
ராகம்ஸ் பட்டுச்சோலை
இல.24, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

# அக,புறத் தூய்மைக்கு வழிகாட்டும் தீபாவளித் திருநன்னாள் இது!

கருத்துக் கலசம் — மயூரா

## தர்ம ஒளி

எந்த அளவுக்கு நான் அதர்மத்தை ஒழித்து நன்னெறியில் நிற்கிறேனா, அந்த அளவுக்குக் கடவுளை அணுகிச் செல்கிறேன். எந்த அளவுக்குத் தர்மத்தினின்றும் விலகிச் செல்கிறேனோ அந்தளவுக்கு இறைவனுடைய காட்சியும் விலகிப்போகிறது.

*- மகாத்மா காந்தி -*

அதர்மம் நீங்கி தர்மம் நிலை நாட்டப்பட்டதை நினைவுபடுத்துவதே தீபாவளித் திருநாள். அதர்மம் இருளாகவும் தர்மம் ஒளியாகவும் காணப்படுகின்றன. இருள் அகன்றால் ஒளி பிறந்து விடுகிறது. அது இயற்கை; நடைமுறை இயல்பு. அதேபோன்று ஒளியை ஏற்றினால் இருள் தானாகவே அகன்று விடுகிறது. அதுவும் இயற்கையான இயல்பு.

பூட்டிய அறைக்குள் மின் குமிழ் இருப்பினும் அதனை எரியச் செய்தால் மட்டுமே ஒளி - வெளிச்சம் - பரவும்.இல்லையேல் இருளே தொடர்ந்து கவிந்திருக்கும்.

இருள் தானாக அகன்று ஒளி தோன்றுவது இயற்கை. ஒளியை ஏற்றி இருளை அகற்றுவது - விரட்டுவது - செயற்கை. அதேபோன்று அதர்மம் நீங்கியதும் தர்மம் தலையெடுப்பது இயற்கை. அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவது செயற்கை, எனினும் அது இயற்கையின் நிர்ப்பந்தமாகிறது.

தர்மம் ஆக்கபூர்வமானது; எல்லா வகைகளிலும் வழிகளிலும் மக்களுக்கு நன்மைசெய்வது. அமைதியையும் ஆனந்தத்தையும் தருவது. உலகமும் மனிதவாழ்க்கையும் சீராகவும், நீதியுடனும் இயங்குவதற்குத் தர்மம் அவசியம்.

அதர்மமோ அழிவைத் தருவது. நீதியையும் நெறிகளையும் மீறி ஆணவத்தோடு செயற்படுவதால் அடுத்தவர்களுக்குத் துன்பத்தையும் அவலத்தையும் அளிப்பது.

தர்மம் தழைப்பதற்கு அதர்மம் அழிக்கப்பட வேண்டும். தீபாவளிப் பண்டிகையின தத்துவமும் அதுவே. உலகத்தில் மற்றவர்களுக்குத் துன்பத்தையும் அவலத்தையும் கொடுத்த அசுரனை அழித்துத் தர்மத்தை இறைவன் - கண்ணன் - நிலைநாட்டினான் என்பது கதை.

"எப்பொழுது உலகில் தர்மம் அழிந்து அதர்மம் அதிகரிக்கிறதோ அப்பொழுது நான் அவதரிக்கிறேன்" என்று கண்ணன் கீதையிலே பேசுவதும் அதனையே. அசுரன் என்பது ஒவ்வொரு மனிதனிடத்தும் உள்ள அரக்கத்தனத்தையும், ஆணவம், மமதையையும் குறிக்கிறது.


உலகில் தர்மம் தழைத்தோங்குவது ஒவ்வொரு தனிமனிதனிடத்துள்ள அரக்கத்தனம் ஒழிவதிலேயே தங்கியுள்ளது. அடுத்தவனுக்கு இன்னல் தராது நன்மையே செய்யும் மனமே - மனப்பக்குவமே - தர்மமாக வடிவெடுக்கிறது.

ஆணவம், அடக்குமுறை, அதிகாரத்தனம், அழுக்காறு, பொறாமை என்று அதர்மத்தின் அங்கங்கள் பல. அவற்றை விலக்க, நீக்கப் பழகிக் கொண்டால் தர்மம் ஓங்குவதற்கு உதவலாம். தர்மங்கள் பல செய்யவும் தர்மம் பிறழாமல் வாழவும் பழகிக் கொள்வது இறைவனுக்கு அருகில் செல்வதற்கு சமம்.

நாம் ஒவ்வொருவரும் எம்மிடத்தில் உள்ள அரக்கத்தனங்களை ஒழித்துக் கொள்ளப் பயிற்சி செய்வோமாக! பயில்வோமாக!அந்தப் பயிற்சி தர்மமாகத் திரண்டு எல்லோர் தலைகளையும் காக்கும்.

---

தெய்வத்தை வழிபடவும் - தெய்வக் கருணையைப் பின்பற்றவும் - உதவுபவையே விரதங்களும் பண்டிகைகளும். விரதங்களின் போதும் பண்டிகைகளின் போதும் நீராடித் தோய்த்த உடை உடுத்துப் புறத் தூய்மை உடையவர்களாகவும் தெய்வ நினைவினால் அகத்தூய்மை உடையவர்களாகவும் ஆலயங்களுக்குச் சென்று தெய்வ வழிபாடு செய்கின்றோம். விரதங்கள், பண்டிகைகள் அனைத்தும் புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டவை. அந்தப் புராணக் கதைகள் பெரும்பாலும் தெய்வத்தின் கருணையையும் அசுரர்களின் கொடுமையையும் விளக்கி ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிவகுக்கும்.



தர்ம, அதர்ம போராட்டங்களை விளக்கும் பண்டிகைகளுள் தீபாவளியும் ஒன்று. தீபாவளிப் புராணக் கதையில்வரும் நரகாசுரன் கொடியவன். ஆனாலும் கூடத்திருமாலாற் கொல்லப்படும்போது - சாகும் நேரத்தில் - நல்லறிவு பெறுகின்றான். அந்த நல்லறிவு திருமாலின் திருக்கோலத்தைக் கண்டதினால் ஏற்பட்ட ஒன்றாகும். அந்த நல்லறிவினால் தீபாவளியை எப்படிக் கொண்டாடவேண்டும் என்றும் திருமாலிடம் வரம் கேட்கின்றான்.

நரகாசுரன் என்னும் அசுரன் குடிமக்களுக்குக் கொடுமை செய்து ஆண்டு வந்தான். குளித்தல், உடை தோய்த்தல், வீடுகளைக் கூட்டுதல், மெழுகுதல் முதலிய நற்செயல்களையெல்லாம் தடுத்துத் தனது ஆணையினாற் பாவவழிகளிற் செலுத்தினான். தர்மத்தைக் காக்கவும் அதர்மத்தை அழிக்கவும் கருதிய திருமால் நரகாசுரனைக் கொன்றருளினார்.

நரகாசுரன் சாவதற்கு முன்நல்லறிவுபெற்று "கடவுளே நான் எனக்காக ஒரு நன்மையும் கேட்கவில்லை. இதுவரை எனது ஆணையினால் குளிக்காது, உடை தோய்க்காது, கோயிலுக்குச் செல்லாது, பாவவழியிற் சென்றவர்கள் இனிக் குளித்துப் புதுஉடை உடுத்துக் கோயிலுக்குச் செல்லவும் புண்ணிய கருமங்களில் ஈடுபடவும் அருள்புரியுங்கள்" என்று வேண்டிக்கொண்டான்.

எனவே தீபாவளித் தினத்தில் குளிப்பதால் புறத்தூய்மையையும் புண்ணிய நினைவுகளால் அகத்தூய்மையையும் பேணிக்கொள்ள வேண்டும்; கடவுளை வழிபடவேண்டும்.

ஆனால் தீபாவளியின் தத்துவம் அறியாத பலர் அன்றுதான் அளவுக்கு அதிகமாக மதுபானம் அருந்துகிறார்கள்; அன்றுதான் பெரும் செலவில் இறைச்சி வாங்கி உண்டு பாவத்தைப் பெருக்குகிறார்கள். நரகாசுரன் வரம் கேட்பதற்கு முன்னர் நரகாசுரனின் ஆட்சியில் எப்படி இருந்தார்களோ அப்படி என்றும் இருக்க விரும்புகிறார்கள். நரகாசுரன் கேட்டவரத்தைப் பற்றிச் சிந்திக்கிறார்கள் இல்லை.

### பண்டிகைகளும் வாழ்வும்

சமயத்துக்கும் பண்டிகைகளுக்கும் வாழ்வுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சமயமும் பண்டிகைகளும் போதிக்கும் கருத்துக்களின் அடிப்படையிலேயே வாழ்வு அமையவேண்டும்.

நல்வாழ்வு என்பது இறைவனோடும் சமூகத்தோடும் தொடர்பு உடையதாக இருக்க வேண்டும். இறைவனோடும் சமூகத்தோடும் இருக்க வேண்டிய உறவைச் சமயப் பெரியோர்கள் பலரும் பாடி இருக்கிறார்கள். பட்டினத்தடிகள் ஒரு பாடலில் வெகு சிறப்பாகப் பாடியுள்ளார்.

### தெய்வம் உண்டென்றிரு

மனிதனாகப் பிறந்த எவனும் தெய்வநம்பிக்கை உடையவனாக இருக்கவேண்டும். தெய்வ நம்பிக்கைதான் நீதியில் நம்பிக்கை கொள்ளச் செய்யும். நீதியைப் பின்பற்றித் தெய்வ நம்பிக்கையோடு வாழ்பவன்தான் பிறவியின் பயனை அடையமுடியும்; பெற்றோரை மற்றோரை மதித்து நற்பெயர் அடைய முடியும்; தெய்வத்தின் கருணை விளங்கி எல்லா உயிர்களுக்கும் கருணைகாட்ட முடியும். உயிர்களுக்குக் கருணையை காட்டுவதன் மூலம் இறைவனின் கருணையைப் பெறமுடியும். இவற்றுக்கெல்லாம் தெய்வம் உண்டென்றிருக்கும் நம்பிக்கையே காரணமாகும்.

### பசித்தோர் முகம்பார்

சமயவாழ்வு வாழ்பவன் பசித்தோர் முகம் பார்ப்பவனாக இருக்கவேண்டும். *"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"* என்றார் திருவள்ளுவர். எக்காலத்திலுமே இறைவனோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கு நாம் பசித்தோர் முகம் பார்ப்பவர்களாக இருக்கவேண்டும். விரதநாள்களிலும் பண்டிகை நாள்களிலும் நாம் சிறப்பாகப் பசித்தோர் முகம் பார்க்கவேண்டும்.

புலவர்.ம.பார்வதிநாதசிவம்

செல்வவசதி கொண்டவர்கள் முதியோர் இல்லங்களுக்கும் அநாதைகள் இல்லங்களுக்கும் அள்ளி அள்ளிக்கொடுப்பதன் மூலம் பட்டினத்தார் கூறிய பசித்தோர் முகத்தைப் பார்க்கலாம். வசதி குறைந்தவர்களும் பசி என்று வீட்டுக்கு வருபவர்களுக்கும் ஏழைகளுக்கும் தம்மால் இயன்றதைக் கொடுக்கலாம். இது சமயப் பணியாகவும் சமூகப் பணியாவும் அமையும். இக்கருத்தைப் பட்டினத்தார்

*"ஒன்றென்றிரு தெய்வமுண்டென்றிரு*
*உயர் செல்வமெல்லாம்*
*அன்றென்றிரு பசித்தோர் முகம் பார்*
*நல்லறமும் நட்பும்*
*நன்றென்றிரு நடுநீங்காமலே*
*நமக்கிட்ட படி*
*என்றென்றிரு மனமே உனக்கே*
*உபதேசமிதே!"*

என்கிறார்.

எனவே தீபாவளித் திருநாளாகிய புண்ணிய நாளிலே மது உண்டும் புலால் உண்டும் பாவத்தைச் சேர்க்காது தெய்வம் உண்டென்றும் வழிபட்டும் பசித்தோர் முகம் பார்த்தும் புண்ணியத்தைப் பெருக்குதல் நல்வாழ்வுக்கு வழியாகும்.

---

## தீவினை களையும் தீபாவளித் திருநாள்

இந்துக்களின் தலையாய பண்டிகை தீபாவளி. இந்தியாவிலும் இலங்கையில் தமிழர் பிரதேசங்களிலும் ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடின்றி கொண்டாடும் பண்டிகை இது. என்றாலும் மக்களின் பாரம்பரியம், பண்பாடு, வாழ்க்கை முறை, இடப்பரம்பல் ஆகிய வற்றிற்கு ஏற்ப தீபாவளி கொண்டாடும் முறையிலும் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தீபாவளி என்றால் தீபங்களின் வரிசை என்று பொருள். அதற்கேற்ப வடஇந்தியாவில் மக்கள் தங்கள் வீடுகளில் பளிச்சென்று விளக்கேற்றிக் கொண்டாடுவர். ஞானம் என்ற விளக்கொளியால் மனத்தின் உள்ளேகுடி கொண்டுள்ள அஞ்ஞானம் என்ற இருளை விரட்டியடிப்பது என்பது இதன் தத்துவம்.

நரகாசுரன் எனும் அரக்கனை கண்ணன் வதை செய்ததையொட்டி அமைந்த பண்டிகை என்பது புராண வரலாறு.

தேவர்களும் மனிதர்களும் கொடிய அரக்கனாம் நரகாசுரனால் பெரும் தொல்லைகளுக்குள்ளாகித் துன்புற் றனர்.

தேவர்களின் தலைவனான இந்திரன் பகவான் கிருஷ்ணரிடம் முறையிடவே, கிருஷ்ணர் நரகாசுரனுடன் போர் புரிய, சத்தியபாமாவுடன் புறப்படுகின்றார். சத்தியபாமா இப்போரில் சக்தியின் அவதாரமாகச் செயற்பட்டாள் என்பது குறிப்பிடத்தக்கது.

கண்ணன் - சத்தியபாமாவினால், நரகாசுரன் என்ற தீய சக்தி அழிக்கப்பட்டு மக்கள் அசுரனின் கொடுமையினின்றும் விடுபட்ட நாளையே தீபாவளியாகக் கொண்டாடுகின்றோம்.

தீபாவளியன்று விடியற் காலையிலேயே எழுந்து தலைக்கு எண்ணை தேய்த்து புனித நீராடுவதை 'கங்கா ஸ்நானம்' எனக் கருது கின்றோம்.

இந்தப் பண்டிகை நாளில் எண்ணெயில் லஷ்மியும் நம் வீட்டுத் தண்ணீரில் கங்கையும் பிரசன்னமாகின்றனர் என்பது ஐதீகம்.

தீபாவளி - அன்னை பவானியின் பூஜையாக வங்காளத்திலும், தாம்பூலத் திருநாளாக மகாராஷ்டிர மாநிலத்திலும் குபேர பூஜையாக - புதுக் கணக்குத் தொடங்கும் புத்தாண்டாக - குஜராத்திலும் கொண்டாடப்படுகின் றது.

திருமணமான முதல் ஆண்டு வரும் தலைத்தீபாவளியானது மாப்பிளையைக் கோலமிட்ட மனையில் உட்கார வைத்து 'கௌரி கல்யாணமே, வைபோகமே' என்று மாமியார் பாடித் தலையில் எண்ணெய் வைப்பது தமிழ் நாட்டவர் பழக்கம்.

தமிழகத்தில் தீபாவளியன்று தொடங்கும் தீபஅலங்காரம் கார்த்திகைப் பண்டிகை வரை நீடிக்கின்றது எனலாம். தென்னாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் அகல் விளக்கேற்றி வரிசை, வரிசையாக வைத்து அலங்கரிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

தீபாவளியைத் தொடர்ந்து கந்த சஷ்டி விரதமும் அதன் பின்னர் கார்த்திகைத் தீபத்திருநாளும் தெய்வ மனங் கமழும் திரு நாள்களாக ஒன்று கூடி வருவது குறிப் பிடத் தக்க ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்

| | | | |
|---|---|---|---|
| | வி சனி | | |
| | இராசிச்சக்கரம் | | ரா |
| கே | | | |
| செவ் | | புத சூ | வெ சந் |

*மாற்றம்: அரசியலில் தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கும். இடைக்கிடை குமுறல்களும் ஏற்படும். யுத்தநிலை தொடரும். அரசியலில் இனப்பிரச்சினை அரசபீடத்தில் ஏறுபவர்களுக்கு ஒரு துரும்பு போன்ற நிலை இருக்கும். உலக நாடுகள் நெருக்கடிகள் கொடுக்கலாம். இந்தியாவில் சுய கௌரவம் தலைதூக்கும். அயல்நாடுகளில் உறுதியான நடவடிக்கைகள் அல்லது பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும். மேற்குநாடுகள் தொடர்ந்து மத்தியகிழக்கு நாடுகளில் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். பொருளாதார தாக்கநிலைகளைத் தோற்றுவிக்கும். வெள்ளம், காற்று, அழிவுகள் கொடுக்கும் எனக் கிரகநிலை கூறுகிறது.*

## 06 - 11-1999 இலிருந்து 12 -11 -1999 வரை

## மேடம்

காதைஅலட்சியம செய்வீர்களாமே? அப்படிச் செய்யாதீர்கள். கல்லறைக்குப் போவதாயினும் சில்லறை கொஞ்சம் சேர்த்துவைத்த பின்புதான் போக வேண்டும். அல்லது எவருமே திரும்பிப் பார்க்கமாட்டார்கள். தொழில் ஸ்தானத்தில் அதிக பிரயாசை எடுப்பீர்கள். துணிவுடன் இலாபம், நஷ்டம் பார்க்காது முயற்சி எடுத்து பொருள் தேடுவீர்கள். தேடியபொருளை சேமிக்காமல் பின் வருந்துவீர்கள். காணி, வாகனம் சம்பந்தமான பொருள் செலவுகள் அதிகரிக்கும். வயிற்றுநோ,தோல் வருத்தங்கள், கைகாலில் அடிகாயங்கள், வாய்வுத்தொல்லை, தலையிடி, காய்ச்சல் என்பன கொடுக்கும். குடும்பத்தினருடன் அன்பாக இருங்கள். போக்குவரத்து, வியாபாரம், கடல், விவசாயம் போன்றவற்றுடன் சம்பந்தப்பட்டவர்கள் அதிக இலாபங்கள் அடைவர். சிலருக்கு தொழில் ஸ்தானத்தில் கௌரவப் பிரச்சினைகள் தலைதூக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வெள்ளி.*

## இடபம்

எல்லோரும் திட்டங்களால் - சட்டங்களால் - நடைமுறையில் வெற்றி அடையமுடியாது. பொறுமையாக இருந்து காரியமாற்றுபவர்களே அதிக வெற்றிகளை அடைகின்றனர். உங்கள் பொறுமையால் பல அனுகூலங்கள் கிட்டும். தொழில் ஸ்தானத்தில் லாபங்கள் அதிகரிக்கும். எதிர்ப்பாலாருடன் நிதானமாக இருக்கவும். கோயில் செலவு, அடிக்கடி அலைச்சல், சோகம், பதற்றநிலை, நெஞ்சுவருத்தம், சலவருத்தம் என்பன கொடுக்கும். வைத்தியம், போதனை,ரீ.வி.,பத்திரிகை போன்றவற்றுடன் தொடர்பானவர்கள் அதிக மாற்றங்களும் நன்மைகளும் அடைவர். சனீஸ்வரனின் தாக்கம் விட்டு விட்டுக் கொடுக்கும். பொருள் விஷயங்களில் அவதானமாக இருக்கவும்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வெள்ளி.*

## மிதுனம்

கிரகங்கள் பிழையானால் என்னதான் கெட்டித்தனமாகச் செயற்பட்டாலும் வெற்றியடையமுடியாது. தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் ஏற்பட்டபடி இருக்கும். வரவு - முன்னைய பாக்கிகள் சிலருக்குக் கிடைக்கும். எதிலும் நிதானமற்ற தன்மைகள் கொடுக்கும். எங்கும் ஓடியாடித் திரிந்து கருமமாற்றியபடி இருப்பீர்கள். மலச்சிக்கல், தலைவலி, வாதவிறைப்பு, அடிக்கடி கவலைகள், கைகால் தாக்கம் என்பன ஏற்பட இடமுண்டு. செய்தி, வியாபாரம், போக்குவரத்து, ரீ.வி. போன்றவற்றுடன் தொடர்பானவர்கள் அதிக லாபங்கள் அடைவர். நண்பர்களால் மன வருத்தங்கள் ஏற்படஇடமுண்டு. தூர தேசத்திலிருந்து செய்திகள் அல்லது வரவுகள் கிடைக்க இடமுண்டு.

*அதிர்ஷ்ட நாள்:- புதன்.*

## கடகம்

ஒருவரின் கர்மம் அவரின் செயற்பாடுகளைத் தடுக்கும். பொறுமையாக இறைவனை வேண்டுதல் செய்து நற்பலனை அடைய முயற்சிக்க வேண்டும். தொழில்ஸ்தானத்தில் பல மாற்றங்கள் ஏற்படும். பிணிகாரகனான இராகு உதயத்தில் நின்று செவ்வாயால் பார்க்கப்படுவதனால் இரத்தத்தில் மாற்றங்கள் வரச்செய்யும். பரிசோதிக்கவும். வாய்வு, காயங்கள், சலமல வருத்தங்கள் என்பன ஏற்படச் செய்யும். கடல்,அரசியல்,பத்திரிகை,கமிஷன், வியாபாரம், சட்டத்துறையில் ஈடுபாடுள்ளவர்கள் அதிக லாபங்கள் அடைவர். இடமாற்றங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். தூரதேசத்துச் செய்திகள் ஓரளவு ஆறுதல் தரும்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன்.*

## சிங்கம்

உங்களுக்கு என்ன மனக்குமுறல்? இறைவனைக் கோபிப்பார்கள் சிலர். உங்கள் நம்பிக்கை வீண் போகக்கூடாது. இறைவனுக்கும் - அடியார்களுக்கும் இடையில் போட்டிகள் வந்துவிடக்கூடாது. அதை பக்தனால் தாங்கமுடியாது. தொழில் ஸ்தானத்தில் எதிர்பார்த்தது நடக்கும். பிறர் செய்யும் தவறுகளைக் கண்டுபிடித்து விடுவீர்கள். நெஞ்சுவலி, வாய்வுத்தொல்லை, படபடப்பு, தலையிடி, விறைப்பு என்பன கொடுக்கும். சட்டம், குரு, நிர்வாகம், தொழில்நுட்பத்துறையில் ஈடுபாடுள்ளவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். குடும்பத்தில் சகோதரர் அல்லது பிள்ளைகளுக்காக ஓடியாடித்திரிவீர்கள். இடமாற்றங்கள் நல்லதல்ல.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன்.*

# ஜோதிட சஞ்சீவி

## கன்னி

நீங்கள் ஒரு தனிமனிதர். உங்களுடன் மோதி எவரும் வெற்றிபெற முடியாது. அட்டமத்தில் சனிவந்து வீணான கவலைகளைத் தந்தாலும் உங்களுடன் மோதுவது மலையுடன் மோதுவது போலாகும். தொழில்ஸ்தானத்தில் எவரும் போட்டிபோட முடியாது. காணி, பூமிப் பிரச்சினை, கௌரவப் பிரச்சினை தலைதூக்கும் காலமாகும். நரம்பு வருத்தம், கைகால் விறைப்பு, வயிற்றுநோ, சீதோஷ்ணநிலைகளால் பாதிப்பு, அலைச்சல், களைப்பு என்பன கொடுக்கும். வாகனசுகம், புடைவை, நகைகள் கிடைக்கப் பலன் உண்டு. இடமாற்றங்கள் நல்லதல்ல. அரசியல் பேசாதீர்கள். உபத்திரவங்கள் வரலாம். கடல், சட்டம்,போக்குவரத்து, பத்திரிகை, தொழில்நுட்பத்துறையினர் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன், வெள்ளி.*

# மகாதேவா ஜோதிடம்

## துலாம்

மனிதர்களுக்கு எதுவும் கிடைக்காதபொழுது - கிடைக்கும் என்ற மனக்கற்பனையில் வாழ்வதனால், அவர்கள் ஒருவிதமான மனஆறுதலை அடைவார்கள். தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பாலார்கள் உங்கள் ஆலோசனைகளை நாடுவார்கள். குடும்பத்தில் சகோதரர்கள், இன ஜனத்தார், நண்பர்கள் உங்களால் நன்மை அடைவார்கள். இடமாற்றங்கள் சிலருக்கு ஆறுதல்கள் தரும். நெஞ்சுவருத்தங்கள், அடிவயிற்றுநோ, வாய்வுத் தொல்லை, மலச்சிக்கல் ஏற்பட இடமுண்டு. ஓய்வு எடுக்கவும். வியாபாரம், ஆசிரியர், தொழில்நுட்பம், மின்சாரத்துறையினர் அதிகஇலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன், வெள்ளி.*

## விருச்சிகம்

ஏழைகள் ஆசைகளை அடக்கி வேதனை அடைகின்றார்கள். நீங்களோ ஒருவித மனத்தைரியத்துடன் புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்து நாலு பேருக்கு தெரியப்படுத்துவதில் ஒரு திருப்தி அடைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் எவரையும் நம்பமுடியாது. பொருள் களவுபோகலாம். பதற்ற நிலை, நெஞ்சுவருத்தம், வாய்வுத் தொல்லை - பிடிப்பு, [illegible] கைகால்உளைவு என்பன கொடுக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். கடல், பத்திரிகை, கோயில் வேலை, வியாபாரம், விவசாயத்துறையினர் அதிக நன்மைகள் அடைவர்.

*அதிர்ஷ்டநாள்:புதன்,வியாழன், வெள்ளி.*

## தனுசு

பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள் எப்பொழுதும் போட்டியில் வாழ்பவர்கள். எந்தநேரமும் எதிர்ப்பும் வரும்; வாழ்த்தும் வரும். எதற்கும்லாபமில்லாத காரியங்களை முன்னெடுக்கக் கூடாது எனச் சொல்லுவார்கள். நீங்களும் தொழில் ஸ்தானத்தில் இலாபம், முன்னேற்றம் கருதிச் செயற்படுவீர்கள். இடமாற்றங்கள் சகஜமாகும். நண்பர்கள் உதவியும் - உபத்திரவமும் மாறி, மாறித் தருவார்கள். அடிக்கடி உணர்ச்சிவசப்பட்டு சிலருடன் மோதிக் கொள்ளுவீர்கள். வீடு, வாகனசுகம், லாபங்கள் எனவரும் காலமாகும். செய்தி, ரீ.வி., பத்திரிகை, அரசியல், போக்குவரத்துத் துறையினர் அதிக லாபம் அடைவார்கள். தூரதேசச் செய்திகள் வரும்.

*அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன், வெள்ளி.*

## மகரம்

மெல்லப்பாயும் தண்ணீர் - சில வேளை கல்லையும் உருட்டிப் பாயும். தொழில்ஸ்தானத்தில் உங்கள் திட்டங்கள், வேகங்கள் மந்தநிலையில் இருந்தாலும் - திடீர் திடீரென மாற்றங்கள் வந்து நல்ல லாபங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கும். முன்னர் செய்த தவறுகளை நாலுபேர் பேசும்காலமாகும். இடமாற்றம் சகஜமாகும். சளித் தொல்லை, வயிற்றுக்குழப்பம், வாய்வு, கைகால் பிடிப்பு என்பன கொடுக்கும். "காசு பொருளால் என்ன பாருங்கோ இருக்குது?.. எனக்கு உங்கள் அன்புதான் பெரிது" எனத் தத்துவம் பேசுவீர்கள். குடும்பத்தில் பொருள் குறை, கருத்து வேற்றுமைகள் சகஜமாகும். வியாபாரம், எண்ணெய், கூலி, இரும்புத் துறையினர் அதிக நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்:வியாழன்,வெள்ளி.*

## கும்பம்

தீவிரமான கற்பனைகள் தனிமையை நாடச் செய்யும். உங்கள் செயற்பாடுகளும் அப்படி இருக்கும். ஆயினும் புதிய நண்பர்களால் லாபங்கள் அதிகரித்தபடி இருக்கும். தொழில்ஸ்தானத்தில் காசு பணம் வந்துபோகும் நிலை ஏற்படும். மேலதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். வாய்வு - நரம்புச் சோர்வு, கைகால் விறைப்பு, வயிற்றுப் பொருமல் என்பன வருத்தும். எதிர்ப்பாலாருடன் முறுகல் நிலை வரலாம். கடல்,வியாபாரம், விவசாயம், கமிஷன், இரும்பு, சட்டம், மருந்துத்துறை தொடர்பானவர்கள் இலாபங்கள் அடைவார்கள். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். தூரதேசச் செய்தி ஒன்று தேடிவரும் காலமாகும்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன்.*

## மீனம்

ஓடும் மீன் ஓட விட்டுவிட்டு, வாடி இருக்கும் கொக்கு தேடிவந்த பெரு மீனை லபக்கெனக் கௌவிப் பறக்கும் நிலை போன்று உங்கள் நிலை இருக்கும். தொழில் ஸ்தானத்தில் நீங்கள் எதிர்பார்த்திருந்த இலாபங்கள் கிடைக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். வசீகரப் பேச்சு பிறரின் உதவிகளைக் கிடைக்கச் செய்யும். சகோதரர், பிள்ளைகள் நன்மை அடைவர். இடமாற்றங்கள் சகஜமாகும். சளி, நரம்பு வருத்தங்கள், தலைஅம்மல், குடல் வருத்தங்கள், கிருமித்தாக்கங்கள் என்பன கொடுக்கும். கடல், பிரயாணம், தொழில்நுட்பம், குரு, வியாபாரம், கமிஷன் துறை தொடர்பானோர் அதிக [illegible] பொருள் இழப்பு கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன்.*

# துன்பம் தொடராமைக்கு வழி

வாழ்க்கை ஒரு மணிமண்டபம் அதன் அடித்தளம் செவ்விதாக அமைதல் வேண்டும். அப்போதுதான் அது நெடிது நின்று நிலைக்கும்; இன்பம் பயக்கும். அடித்தளம் செவ்விதாக அமையாவிடில் மண்டபம் ஆட்டங்கண்டுவிடும்.

மெய்ப்புலவோர்கள், வாழ்க்கையின் அடித்தளம் குறித்துப் பெரிதும் ஆராய்ந்துள்ளனர். வள்ளுவர் பெருமான் தமது முப்பால் நூலில் அறத்துப்பாலில், இல்லறம் – துறவறம் என்னும் இருபயிற்சிக் கூடங்களை அமைத்துள்ளார். அன்புடைமை, விருந்தோம்பல், இனியவைகூறல் முதலிய இனியபண்புகள் பலவற்றை இல்லறத்திலும் அருளுடைமை, புலால் மறுத்தல், தவம், இன்னா செய்யாமை, கொல்லாமை வாய்மை முதலிய உயரியபண்புகள் பலவற்றைத் துறவறத்திலும் பயின்று பயிற்சிபெற வழிசெய்துள்ளார். நல்லோர் போற்றும் நாலடியாரிலும் இதே கொள்கை பின்பற்றப் பட்டுள்ளது.

சிவஞானசித்தியாரெனும் பொருணூலும் –

*ஒழுக்கம் அன் பருள்ஆ சாரம் உபசாரம் உறவு சீலம்*
*வழுக்கிலாத் தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை*
*அழுக்கிலாத் துறவடக்கம் அறிவோடு அர்ச்சித்தல் ஆதி*
*இழுக்கிலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணி அறங்கள்*

என்று கூறும்.

அதாவது, ஒழுக்க முதலிய பதினாறும் அவைபோல் வனவாகிய நன்மைகள் ஒருவனுக்கு உளவாயின், இரங்குவானது பணியாகிய அம்முயற்சி அறமாய் முடியும்.

இங்கு ஒழுக்கம் எனப்பட்டது உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல் – அது ஒப்புரவு; துறவு – பிறர்மனை விழைதல் முதலியவற்றைத் துறத்தல். அறிவு தக்கனவும் தகாதனவும் இவை எனப் பகுத்தறிதல். வந்தித்தல் – வணங்குதல், அருச்சித்தல் என்பன மூத்தாரிடத்துச் செய்யப்படுவனவாகும்.

என்றும் துன்பம் அற்று இன்புடன் வாழ நாலடியார் இலகுவான வழி கூறுகின்றது. *முதற்கண் அறிவது அறிய வேண்டுமாம். அடுத்து அடங்க வேண்டுமாம். பின் அஞ்சுவது அஞ்சவேண்டுமாம்; உலகு உவப்பது செய்யவேண்டுமாம்; பெறும் பயன்களால் இன்புற்று வாழவேண்டுமாம்.*

அறிவது அறிதல் என்று குறிப்பிட்டது அறிவுடைமையாகும். அறிவு, கல்வி, கேள்விகளால் வரப்பெறும். உண்மை உணர்வினாலும் எய்தப்படும். நீரையும் பாலையும் கலந்து வைத்தவிடத்து அன்னம், பாலை மட்டும் பகுத்துண்ணும் என்பர். நாமும் கற்றற்குரிய நல்ல நூல்களையே கற்றல் வேண்டும். அறிவு சமய சந்தர்ப்பங்களில் ஒருவனைக்காக்கும். அறிவுடையார் எல்லாம் உடையார் என்பது மேலோர் துணிபு. உணர உணரும் அறிவுடையார் போற்றப்படுவர்.

**தேன்கூடு**

அடங்குதல் என்பது பொறுமைக்குணமாகும். முன்பும் அறிந்திருக்கின்றோம். அது மெய், மொழி, மனங்கள் தீநெறிக்கண் செல்லும்போது அடங்கி வாழ்தலுமாம். அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை நரகத்தே கொண்டு சேர்க்கும். பிரமச்சரியநிலை அடக்கத்தை நன்கு பயிற்றுகின்றது. 'எல்லோருக்கும் நன்றாம் பணிதல்' என்பது நாம் அறிந்ததே.

இனி அஞ்சுவது அஞ்சல் குறித்து அறிவோம். அது பழி பாவங்களுக்கு அஞ்சுதலாகும். வள்ளுவர் வகுத்த தீவினை அச்சமும் இதுவே. ஒருவர் தமது உடலால் மட்டுமன்றி நினைவு, செயல் முதலியவற்றாலும் தீவினை செய்யலாம். அறிஞர், நினைத்தலும் செய்தலோடு ஒக்கும் என்பர். பிறர் நம்மைக் கோபித்தபோதும் அவர்களுக்கு நன்மையையே செய்தல்வேண்டும். 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை. அஞ்சுவது அஞ்சல் அறிவர் தொழில்' என்னும் திருக்குறளும் இங்கு நினைத்தற்பாலதாம்.

**சிந்திப்போம் செயற்படுவோம்**

இனிமேல் வருவது, உறுவது உலகு உவப்பச் செய்தலாகும். தாஞ்செய்யுங் கருமங்களை எல்லாம் உலகத்தார் மகிழும்படி செய்தலாகும். இதனை ஒப்பரவுள் அடக்கலாம். பண்டை உரையாசிரியர்கள் ஒப்பரவு என்பதற்கு உலக நடையினை அறிந்து ஒழுகுதலாகும் என விளக்கம் தருவர்.

'புத்தேன் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே ஒப்புரவின் நல்ல பிற' என்னும் திருக்குறளை நினைவு கூருவோம். ஒப்புரவு உடையவனே உயிருள்ளான; அஃதற்றவன், செத்தாருள் வைக்கப்படுவான்.

பெறுவதனால் இன்புற்று வாழ்தலை எடுத்துக் கொள்வோம். போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து என்பதை நாம் அறிவோம். எந்த விடயத்திலும் எப்போதும் நாம் திருப்தி அடைதல் வேண்டும். காந்திஅடிகளார் சிக்கனமே சிறந்த நாகரிகம் என்பர். உழைப்பில் அல்ல ஒறுப்பனவில் தான் பொருள் வளர்ச்சி தங்கி உள்ளது. ஆசையை மட்டுப் படுத்த வேண்டும். பலபொருள்களையும் விரும்புதல் சிறுமை என்று கூறப்படும். காலை அகலவையாதே என்பது ஒரு குறிப்பு மொழி. வாழ்க்கையை மட்டுப்படுத்தி வாழ வேண்டும். பழம்புலவோர்கள் அடிக்கடி பெற்றது கொண்டு அமைந்து சுற்றத்தையும் பேணவேண்டும் எனவும் இடித்துரைப்பர். இனி, நாலடியார் செய்யுளை நோக்குவோம்.

*அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி*
*உறுவ துலகுவப்பச் செய்து - பெறுவதனால்*
*இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்*
*துன்புற்று வாழ்தல் அரிது.*

வாழ்வில் இன்பம் நிலைபெறவேண்டும். எனவே ஒவ்வொருவரும் கற்றுக்கேட்டு மெய்யுணர்வு வாய்க்கப் பெறுதல் வேண்டும். ஆமைபோல் ஐந்தடக்கிப் பொறுமை காத்தல் வேண்டும். எவ்வெவற்றுக்கு நாம் அஞ்சவேண்டுமோ அவ்வவற்றுக்கு அஞ்சி ஒதுங்குதல் வேண்டும். எவர்க்கும் இனியனவே இயற்ற வேண்டும். பெற்றது கொண்டு பேராசை தடிந்து வாழவேண்டும். இப்படிவாழுவோமேயானால் துன்புற்று வாழும் நிலை ஒருபோதும் வாராது. வாராது அரிது – இல்லை என்னும் பொருளில் வந்தது.

(தொடரும்)

*–சிகண்டியார்*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வன்னி: கிழக்கு நிலப்பரப்பில் தீவிரமடைந்துள்ள யுத்தம்!

சர்வதேச ரீதியாக கவனத்தை ஈர்த்துள்ள பெரும் சமர் வன்னி மண்ணில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மூன்று கட்டங்களாக வகுக்கப்படும் ஈழப்போர்களிலே மிகமோசமான கட்டம் அல்லது பெரும் பின்னடைவு என வர்ணிக்கப்படும் பாரிய சண்டை 72 மணித்தியாலங்களைக் கடந்து தொடர்ந்துகொண்டிருக்கிறது.

ஓர் ஆண்டுக்கும் கூடிய காலமாக புலிகள் பாரிய தாக்குதல் எதனையும் மேற்கொள்ளாது இருந்து வந்துள்ளனர். கிளிநொச்சி - பரந்தன் படைத்தளங்கள் மீது கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் தீலீபனின் நினைவாக புலிகள் பெரும் போர் தொடுத்தனர். 'ஓயாத அலைகள்-2' எனப் பெயரிடப்பட்ட அந்த நடவடிக்கையே வன்னியில் புலிகள் கடைசியாக மேற்கொண்ட பாரியசமராக விளங்கியது. கிளிநொச்சி நகரப் பகுதியை உள்ளடக்கி பரந்தன் வரை நீண்டிருந்த - பல முகாம்களை இணைத்துத் தொடுத்திருந்த - இராணுவப் பிரதேசம் மீது அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனின் தலைமையில் அவரது நேரடி வழிநடத்தலின் கீழ் அந்தப் படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இலங்கை இராணுவத்தின் யுத்தவரலாற்றில் மிகமோசமான தோல்வியாக கிளிநொச்சி - பரந்தன் சமரே இது வரை குறிப்பிடப்பட்டு வந்தது. ஆனால் ஓராண்டு கழிந்த நிலையில் அதே பெயரில் - 'ஓயாத அலைகள்-3' என்ற பெயரில் - மற்றொரு பெரும் சமரை தற்போது படையினர் மீது தொடுத்துள்ளனர்.

,, படைத்துறைத் தலைமையினதும் மற்றும் இர்ாணுவ ஆய்வாளர்களினதும் கணிப்புக்கள் பொய்யாகும் விதத்தில் எதிர்பாராத ஒரு சமயத்தில் புலிகள் இந்தப் போரைத் தொடக்கி இருக்கின்றனர்.

தற்போதைய சமர் இடம்பெறும் பகுதிகள் வன்னியின் கிழக்கு நிலப்பிரதேசம். புலிகளைப் பொறுத்தவரை வன்னியின் மேற்கு நிலப்பகுதியைவிட கிழக்கு நிலப்பகுதியே இராணுவ ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆயினும் கடந்த ஒருவருட காலப்பகுதியில் மேற்கு நிலப்பரப்பிலேயே சண்டைகள் தீவிரமாக நடைபெற்றுள்ளன. கடைசியாக கடந்த மாதம் 14ஆம் திகதி அம்பகாமம் பகுதியில் இருந்து 'வோட்டர் ஷெட்' என்னும் படைநடவடிக்கையை படையினர் ஆரம்பிக்க -

அதனை முறியடிக்கும் விதமாக எதிர்பாராத சமயத்தில் புலிகள் அதிரடித்தாக்குதல் ஒன்றைத் தொடுக்க -

அதுவரை மேற்கு நிலப்பரப்பில் குவிந்திருந்த அனைவரினதும் கவனம் கிழக்கு நிலப்பரப்பிற்குத் திரும்பியது.

'வோட்டர் ஷெட்' நடவடிக்கையைக் குலைக்க புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலிலும் அதன் பின்னர் ஒலுமடு, அம்பகாமம் பகுதிகளில் தொடர்ந்து சில தினங்கள் இடம்பெற்றுவந்த மோதல்களிலும் இருதரப்புக்குமே பலத்த சேதங்கள் ஏற்பட்டன. புலிகள் தரப்பில் மட்டும் சுமார் 75க்கும் மேற்பட்டோர் பலியாகி இருந்தனர். அந்தச் சண்டைகளில் புலிகள்தரப்பில் ஏற்பட்ட ஆள் சேதங்கள் படைத்தரப்பிற்கு உற்சாகமூட்டும் வகையில் அமைந்தன.

இழப்புக்களை அடுத்து புலிகளின் அணிகள் நிலைகுலைந்து போயிருப்பதாகவும் -

அவர்கள் மீண்டும் அணி திரள்வதற்கு முன்னர் மேலும் படைநகர்வுகள் முன்னெடுக்கப்படும் என்றும் -

வன்னிப்படைத் தலைமையக வட்டாரங்கள் கூறிய தகவலை செய்தி நிறுவனங்கள் பலவும் வெளியிட்டிருந்தன.

புலிகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாக பிரசாரப்படுத்திக் கொள்வதில் படைத்தரப்பும், அரச தொடர்பு ஊடகங்களும் அதிக கவனம் செலுத்தின. அதேநேரம் புலிகளை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தும் நோக்குடன் திடீரென கடந்த முதலாம், 2ஆம் திகதிகளில் வன்னியில் மேற்கு நிலப்பரப்பில் பெரியமடுப்பகுதியில் இருந்து பெரும் படைநகர்வு ஒன்றை ஆரம்பிப்பதுபோன்றும் காட்டப்பட்டது.

இத்தகைய பின்னணியில் கடந்த மூன்று வார காலத்துக்கும் கூடிய காலப்பகுதியில் இடம்பெற்ற சண்டைகள் (அம்பகாமம், ஒலுமடு அதிரடித்தாக்குதல் உட்பட) புலிகளுக்கு வாய்ப்பானவையாக அமையாததால் போரில் அவர்களுக்குச் சிறிது பின்னடைவு ஏற்பட்டிருப்பது போன்ற ஒரு தோற்றம் உருவாகிவந்தது.

ஆனால் இங்கேதான் புலிகள் தமது இராணுவ சதுரங்கக் காய்களை மிகுந்த மதிநுட்பத்துடன் நகர்த்தி இருக்கின்றனர் என்பதை 'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கை எடுத்துக் காட்டியுள்ளது.

கடந்த திங்களன்று நள்ளிரவுக்குப்பின் - 12.30மணி தாண்டிவிட்டிருந்த சமயத்தில் - ஒட்டுசுட்டான் இராணுவ முன்னரங்கப்பகுதியில் புலிகளின் துப்பாக்கிகளும், மோட்டார்களும் முழங்கத் தொடங்கின. அதுவரை அங்கு நிலவிய நிசப்தம் குலைந்து போயிற்று.

தற்போதைய சமரும் புலிகள் இயக்கத் தலைவரினால் திட்டமிடப்பட்டு - பெயரிடப்பட்டு அவரது நேரடி நெறிப்படுத்தலின் கீழ் நடப்பதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

'அழித்தொழிப்புச் சமர்' என்று புலிகளால் அழைக்கப்படும் இந்த மிகப்பெரிய சமர் குறைந்தது மூன்று மாதகாலத்துக்கும் கூடிய காலத்துக்கு முன்னரேயே திட்டமிடப்பட்டிருக்க வேண்டும் என்று இராணுவ நிபுணர்கள் கருதுகின்றனர். அதற்கான ஆயத்தங்களைச்செய்ய மேலும் கூடியகாலம் பிடித்திருக்கும். ஆனாலும் பெரும் ஆயத்தங்கள், தயாரிப்புக்கள் தொடர்பான எந்தச் சிறு தகவலும் கசிந்து விடாதவாறு புலிகள் பரமரகசியம் பேணியுள்ளனர். அதில் வெற்றியும் கண்டுள்ளனர்.

புலிகள் பெரும் தாக்குதல் எதற்கும் தயாராகாத சமயங்களில் கூட புலிகள் பாரியதாக்குதல் ஒன்றுக்கு ஆயத்தமாகின்றனர், இங்கே தாக்கக் கூடும் அல்லது அங்கே தாக்கலாம் என முன் கூட்டியே எதிர்வுகூறுவது போன்ற தகவல்களை புலனாய்வுத்துறையினர் வெளியிட்டு படையினரை எச்சரிக்கை செய்வதுண்டு. ஆனால் இம்முறை அவ்வாறு படையினர் முன்கூட்டியே எச்சரிக்கப்பட்டதாக எந்தத் தகவலும் இல்லையென்று கொழும்பு பாதுகாப்புச் செய்தி வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. அந்தவகையில் எதிரிக்கு எவ்வித ஊகங்களோ அன்றி ஐயங்களோ எழாதவகையில் ஒரு களநிலைமையைத் தோற்றுவிப்பதிலும் புலிகள் சாதுரியமாக நடந்துகொண்டிருப்பதாக இராணுவ விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஒரு தாக்குதலை நடத்திவிட்டு அதன் பின் மிகக் குறுகிய காலத்துக்குள் - சூட்டோடு சூட்டாக - மற்றொரு பெரும்தாக்குதலுக்கு தயாராகிவிடமுடியாது என்றவாறு புலிகள் படைத்தரைப்பை நம்பவைத்துள்ளனர்போல் தெரிகிறது. 'வோட்டர் ஷெட்' நடவடிக்கைக்கு எதிராக புலிகள் நடத்திய அதிரடித்தாக்குதல் இதனையே காட்டுகிறது.

ஒட்டுசுட்டான், நெடுங்கேணி பகுதிகள் மீதான தாக்குதல் திட்டத்தை புலிகள் வகுத்தபின்னரே படையினர் அம்பகாமம் பகுதியில் 'வோட்டர் ஷெட்' நகர்வை மேற்கொண்டிருக்கவேண்டும். அதனை முறியடிக்க புலிகள் ஒலுமடுப்பகுதியில் ஊடுருவி நடத்திய தாக்குதல் கூட'ஓயாத அலைகள் -3' நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே இருந்திருக்க வேண்டும். பெரும் தாக்குதல் திட்டத்தை மறைப்பதற்கும் அத்தகைய ஒரு எதிர்பார்ப்போ அன்றி ஊகமோ - படைத்தரப்பில் ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்து கொள்ளவும் - அம்பகாமம் பகுதியில் புலிகள் மோதியுள்ளனர். இழப்புக்களையும் சந்தித்துள்ளனர். ஆனால் படையினர் தப்புக்கணக்குப் போட்டுள்ளனர் என்பதை தற்போதைய மிக மோசமான நிலைமை எடுத்துக்காட்டுகிறது.

திங்கட்கிழமை நள்ளிரவுக்குப்பின் சமர் ஆரம்பித்து தற்போது (இதனை எழுதும் போது) 72 மணித்தியாலங்கள் கடந்துவிட்டன. ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, ஒதியமலை, அம்பகாமம் ஆகிய நகரப்பகுதிகளையும், அவற்றை அண்டிய பிரதேசங்களையும் கைப்பற்றிவிட்டதாகப் புலிகளும் -

இன்னமும் ஒட்டுசுட்டான் பகுதியில் கடும் சண்டை தொடர்வதாகப் படைத்தரப்பினரும் -

தெரிவித்துவருகின்றனர்.

யுத்தகளத்தில் என்ன நடக்கிறது என்பதை தெளிவாய் அறிந்து கொள்வதற்காக நாடே காத்துள்ளது. 'புலிகளின் குரல்' வானொலி மூலம் புலிகள் விடுக்கும் உத்தியோகபூர்வ தகவல்களின்படி இராணுவத்தினருக்குப் பாரிய சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று எண்ண வேண்டியுள்ளது. சில சுயாதீன செய்திச்சேவைகளும் அவற்றை உறுதி செய்துள்ளன. ஆனால் 72 மணித்தியாலங்கள் கடந்துவிட்ட நிலையிலும் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் வெளியிடவில்லை.

புலிகளின் தாக்குதலை அடுத்து உருவாகி உள்ள நிலைமை தொடர்பாக அடுத்த சில தினங்களுக்குள் அரசு நாட்டு மக்களுக்கு அறிக்கை ஒன்றை வெளியிடும் என எதிர்பார்க்கப்பட்டது.

மாங்குளத்தில் இருந்து முல்லைத்தீவு செல்லும் வீதியில் மாங்குளத்தில் இருந்து சுமார் 15 மைல் தொலைவில் கிழக்கே ஒட்டுசுட்டான் அமைந்துள்ளது. புளியங்குளத்தில் இருந்து முள்ளியவளைவரை செல்லும் வீதியில் இடையே நெடுங்கேணிச் சந்தி அமைந்துள்ளது. ஒட்டுசுட்டான் சந்தியில் இருந்து மேற்கே செல்லும் வீதியில் சுமார் 9 மைல் தொலைவில் தெற்குப்பக்கமாக நெடுங்கேணி உள்ளது. ஒட்டுசுட்டானையும் நெடுங்கேணியையும் இணைக்கும் வீதி உட்பட அந்த வீதிக்கு மேற்கே உள்ள பிரதேசத்திலேயே தற்போது கடும் சமர் நடைபெறுகிறது. இந்தப் பிரதேசத்தின் மேற்கு எல்லையாக கண்டிவீதி அமைந்துள்ளது.

மாங்குளம் - ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி புளியங்குளம் ஆகிய பகுதிகளை இணைத்துத் தொடுக்கும் 134 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தை கடந்த ஆண்டு டிசெம்பர்மாதம் படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். டிசெம்பர் முதலாம், 2ஆம் 3ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட - 'ரிவிபல' (சூரியசக்தி) எனப் பெயரிடப்பட்ட - படைநகர்வின்போது புலிகளின் எதிர்ப்பு இன்றியே இப்பிரதேசத்தைக் கைப்பற்றி நிலை கொள்ள முடிந்தது.

யாழ்ப்பாணத்துக்குத் தரைப்பாதையைத் திறப்பதாகக் கூறி கண்டி வீதியைக் கைப்பற்றும் நோக்கில் நீண்ட 17 மாதங்களாக நடத்தப்பட்டு வந்த 'ஜெயசிகுறு' (வெற்றி உறுதி) படை நடவடிக்கை கைவிடப்பட்டது பற்றிய அறிவிப்பு வெளியான கையோடு 'ரிவிபல' நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மாங்குளம் - ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி - புளியங்குளம் ஆகிய பகுதிகளை இணைக்கும் இந்த 134 சதுரகிலோமீற்றர் பிரதேசத்தை மீண்டும் படையினரிடமிருந்து மீட்டெடுக்கும் நோக்குடனேயே 'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இது ஒரு பரந்த இராணுவப்பிரதேசம். நீண்ட பாதுகாப்பு வேலிகள், அரண்களுக்குள் தொடராகப் பல முகாம்களை நிறுவி படையினர் நிலை கொண்டுள்ள தொடர் இராணுவப்பிரதேசம். பலம் வாய்ந்த படைத் தலைமையகங்கள் சிலவும் இந்தப் பிரதேசத்தினுள் அமைந்துள்ளன. இராணுவ வளங்களும் அதிகளவில் இங்கு சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

ஒட்டுசுட்டான் சந்திக்கு வடக்கிலும் கிழக்கிலும் இருந்து புலிகளின் படையணிகள் முன்னேறி உள்ளன. இந்தத் தளத்தின் வெளிப்புறப் பாதுகாப்புப் பொறுப்பு கடற்படையினர் வசம் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. நள்ளிரவில் தாக்குதல் ஆரம்பித்த சில மணி நேரத்துக்குள்ளாகவே பிரதான தளத்துடனான தொலைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டுப் போயின, நிலை குலைந்து அங்கும் இங்குமாகச் சிதறிய படையணிகள் கட்டுப்பாட்டுத் தலைமையகத்துடன் தொடர்புகளைஏற்படுத்தி உதவி பெறமுடியாத நிலையில் தனித்துப்போனதாகவும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை நண்பகல்வேளை ஒட்டுசுட்டான் பிரதேசம் தமது முழுக்கட்டுப்பாட்டின் கீழ் வந்ததாக புலிகள் அறிவித்தனர். தொடர்ந்து நெடுங்கேணி நோக்கி முன்னேறி அந்தப் பகுதியையும் அருகே உள்ள ஒதியமலை மற்றும் மாங்குளத்துக்கு வடகிழக்கே உள்ள அம்பகாமம் பகுதியையும் கைப்பற்றியதாக பின்னர் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான், நெடுங்கேணிப் பகுதிகளுக்கு மேற்கே முறையே மாங்குளமும், கனகராயன் குளமும் அமைந்துள்ளன. இவை இரண்டும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள கண்டி வீதியில் அமைந்துள்ள இரு பிரதான நகரப்பகுதிகள்.

நெடுங்கேணிப்பகுதிக்கு வந்துள்ள புலிகள் அங்கிருந்து சுமார் 6 மைல்கள் தொலைவில் உள்ள கனகராயன்குளம் நோக்கி நகர்ந்துள்ளதாகவும் -

கனகராயன்குளம் பகுதியில் அமைந்துள்ள படை நிலைகள் மீது கடும் ஷெல் தாக்குதல்களைப் புலிகள் நடத்திவருவதாகவும் -

தகவல்கள் வெளியாகி உள்ளன.


கண்டிவீதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கனகராயன்குளம் பகுதியைப் பாதுகாக்கும் நோக்குடன் பெரும் எண்ணிக்கையான படையினர் வேறு இடங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு அங்கு குவிக்கப்பட்டிருப்பதாக இப்பத்தியை எழுதி முடிக்கும்போது களத்தகவல்கள் தெரிவித்தன.

ஒட்டுசுட்டான் படைத்தளத்துடன் கொண்டிருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்ட நிலையில் மாங்குளம் படையினர் உள்ளனர். இந்நிலையில் கனகராயன்குளம் பகுதிக்குள் ஊடுருவித்தாக்குவதன் மூலம் மாங்குளம் பகுதி படையினர் கனகராயன்குளம் படை முகாமுடன் கொண்டுள்ள தரைத் தொடர்புகளையும் துண்டித்து விடலாம். புலிகள் இந்த முயற்சியில் இறங்கக் கூடும் என எதிர்பார்த்து படைத்தரப்பினர் கனகராயன்குளம் பகுதியின் ஸ்திரநிலையை அதிகரித்துள்ளனர். தற்சமயம் புலிகள் முன்னேறி உள்ள ஒட்டுசுட்டான் நெடுங்கேணி பிரதேசங்களை நோக்கி கனகராயன்குளத்தில் இருந்து கிழக்கே படை நடவடிக்கை ஒன்றைப் படையினர் ஆரம்பிக்கக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை ஒட்டுசுட்டான் பகுதியில் இருந்து புலிகள் கரிப்பட்டமுறிப்பு, ஒலுமடு, மாங்குளம் முகாம்கள் மீது கடுமையான ஷெல் தாக்குதல்களை நடத்தி வருவதாகப் பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் நெடுங்கேணி, ஒதியமலைப் பகுதிகள் விடுதலைப்புலிகள் வசம் வீழ்ந்ததை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட எல்லைப்புற சிங்களக் கிராமங்களில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

வெலிஓயா, பதவியா, கஜபாகுபுர பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறுவதாகவும் தெரியவந்துள்ளது.




விடுதலைப்புலிகளின் அழித்தொழிப்புச் சமர் இடம்பெறும் பிரதேசம்.

மறுபக்கம்

வார விமர்சனம்

நல்லூர் தாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க. தலைமையிலான அரசு பாண்டிச்சேரியில் கவிழுமா?

புதுடில்லியில் இந்த ஆண்டு முற்பகுதியில் நடந்த தேநீர் விருந்து மத்திய அரசைக் கவிழ்த்தது. சென்னையில் கடந்த மாதம் 23ஆம் திகதி இடம்பெற்ற மரியாதை நிமித்தமான சந்திப்பு மற்றொரு அரசைக் கவிழ்க்கப் போகிறது என்று நாடு முழுவதும் பத்திரிகைகள் பரபரப்பாக எழுதிக் கொண்டிருக்கின்றன.

மரியாதை நிமித்தமான சந்திப்பு என்ற பெயரில் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் மூப்பனாரை அவரது இல்லத்துக்கே சென்று சந்தித்தார் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா. தமிழகத்தில் எந்த அரசியல் கட்சித் தலைவரையும் அவரது வீடு சென்று சந்திக்கும் வழக்கம் இல்லாதவர் ஜெயலலிதா. இந்த நடைமுறையை அவர் மீறியதே அரசியல் வட்டாரங்கள் பரபரப்படையக் காரணம்.

இந்தச் சந்திப்புக்குப்பின்னர், பாண்டிச்சேரியில் ஆட்சிமாற்றம் இருக்குமா? என்று ஜெயலலிதாவிடம் செய்தியாளர்கள் கேட்டனர். பாண்டிச்சேரியில் காங்கிரஸுடன் சேர்ந்து புதிய அரசை அமைக்க தமிழ்மாநில காங்கிரஸ் முடிவு செய்தால் அ.தி.மு.க. அதனை வரவேற்கும் என்று ஜெயலலிதா பதிலளித்தார்.

இதனைத் தொடர்ந்து பாண்டிச்சேரியில் உள்ள தி.மு.க. தலைமையிலான கூட்டணி அரசு கவிழப்போவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. காங்கிரஸும் தமிழ் மாநில காங்கிரஸும் இணைந்து பாண்டிச்சேரியில் கூட்டணி அரசு அமைக்கும் என்றும் அ.தி.மு.கவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் வெளியில் இருந்து ஆதரவு வழங்கும் என்றும் ஊகங்கள் தெரிவிக்கின்றன. சமீபத்தில் நடைபெற்ற இந்திய மக்களவைத் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் ஜெயலலிதாவின் பிரதான அரசியல் சதுரங்கக் காய் நகர்த்தல் மூப்பனாருடனான சந்திப்பு என்பதில் சந்தேகம் இல்லை.

## சட்டப் பேரவையில் கட்சிகளின் பலம்

30 உறுப்பினர்களைக் கொண்டது பாண்டிச்சேரி சட்டப்பேரவை. சட்டப் பேரவையில் கட்சிகளின் பலம், காங்கிரஸ்-8, தி.மு.க.-8, த.மா.கா. - 6, அ.தி.மு.க. - 3, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - 2, ஐக்கிய ஜனதாதள் - 1, பா.மா.க. - 1, சுயேச்சை - 1 ஆகும்.


தற்பொழுது தமிழ் நாட்டில் வெவ்வேறு துருவங்களாக இருந்து வரும் தி.மு.கவும் த.மா.காவும் இணைந்து பாண்டிச்சேரியில் ஆட்சி நடத்தி வருகின்றன.

இந்த தி.மு.க. - த.மா.கா. கூட்டணி அரசு தி.மு.கவும் த.மா.காவும் ஒரேஅணியில் இருந்தபோது உருவாக்கப்பட்டது. ஆனால் கடந்த மக்களவைத் தேர்தலின்போது தமிழ்நாட்டில் கூட்டணி உடைந்து போனது. தி.மு.க. பாரதீய ஜனதாவுடன் கூட்டணி அமைத்துக்கொண்டதே இதற்குக் காரணம்.

வகுப்புவாதக் கட்சியான பாரதீய ஜனதாவுடன் தி.மு.க.கூட்டணி அமைத்துக்கொண்டிருப்பதாகக் கூறி அந்தக் கூட்டணியில் சேர மூப்பனார் மறுத்தார். அதே சமயம் அ.தி.மு.க. ஊழல் கட்சி என்று தெரிவித்து அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியிலும் அவர் சேரவில்லை.

மூப்பனார் தலைமையிலான தமிழ் மாநில காங்கிரஸ் புதிய தமிழகம் கட்சி, விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகிய கட்சிகளுடன் சேர்ந்து மூன்றாவது அணியாகக் கடந்த மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டது. எனினும் ஒரு தொகுதியிலாவது இந்த அணியினால் வெற்றி பெறமுடியவில்லை.

தமிழ்நாட்டில் தி.மு.க.-த.மா.கா கூட்டணி முறிவடைந்த நிலையிலும் பாண்டிச்சேரி சட்டப்பேரவையில் தி.மு.க.- த.மா.கா. கூட்டணி அரசு இன்னும் நீடித்து வருகிறது. இதனைக் கவிழ்ப்பதற்கே தற்பொழுது ஜெயலலிதா வியூகம் வகுத்து வருகிறார்.




பாண்டிச்சேரி சட்டப்பேரவையில் த.மா.கா, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அ.தி.மு.க. ஆகியவை இணைந்தால் 19 உறுப்பினர்களின் பலம் கிடைத்துவிடும்.

பாண்டிச்சேரியில் ஆர்.வி.ஜானகிராமன் தலைமையிலான தி.மு.க. கூட்டணி அரசை எப்படியாவது கவிழ்த்து

**உலக உலா**
**என்.பி.சீலன்**

விட்டு தனது தலைமையில் ஆட்சியை அமைக்கவேண்டும் என்று பாண்டிச்சேரி காங்கிரஸ் கட்சி விரும்புகிறது. இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே "மத சார்பற்ற முற்போக்கு முன்னணி" என்ற புதிய அமைப்பைத் தொடங்கி இருக்கிறது காங்கிரஸ்.

ஆட்சி மாற்றம் குறித்து தமிழ் மாநில காங்கிரஸின் நோக்கத்தை அறிவதற்காக பாண்டிச்சேரி காங்கிரஸ் தலைவர் ப.சண்முகம் மூப்பனாரைச் சந்தித்துப் பேசி உள்ளார். ஆனால் சண்முகத்திடம் திட்டவட்டமான பதில் எதனையும் மூப்பனார் தெரிவிக்கவில்லை. எதிலும் அவசரப்படாது ஆறப்போட்டு முடிவுசெய்யும் தனது வழமையான பாணியை மூப்பனார் கடைப்பிடித்து வருகிறார்.

எனினும் ஒரு சில நாள்களில் பாண்டிச்சேரியில் ஆட்சி கவிழ்கிறது என்ற தோற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அந்த மாநில காங்கிரஸ் தலைவர்கள் பேசி வருகின்றனர். தமிழ் மாநில காங்கிரஸை விட அதிக பலம் பெற்றிருந்த போதிலும் முதலமைச்சர் பதவியை தமிழ் மாநில காங்கிரஸுக்கு விட்டுக்கொடுக்க காங்கிரஸ் தயாராகிவருகிறது. தமது அரசியல் எதிரியான தி.மு.கவை ஓரங்கட்டுவதே காங்கிரஸினதும் அ.தி.மு.கவினதும் நோக்கம். மக்களவைத் தேர்தலின்போது காங்கிரஸுடன் அமைத்துக்கொண்ட கூட்டணி தனது அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற அ.தி.மு.கவுக்கு வாய்ப்பாகிவிட்டது.

கடந்த மக்களவைத் தேர்தலின் போது தமிழ்நாட்டில் அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி சிறப்பாக இயங்கவில்லை. தமிழ்நாட்டில் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியுடன் ஒரே மேடையில் தோற்ற ஜெயலலிதா தவறி இருந்தார். அத்துடன் காங்கிரஸின் ஸ்திரமான ஆட்சி என்ற கோஷத்துக்கு முரணாக மத்தியில் காங்கிரஸ் கூட்டாட்சி ஏற்படுத்த வேண்டும் என்று ஜெயலலிதா வலியுறுத்தி வந்தார். மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வி அடைந்துவிட்டதால் ஏற்கனவே இழுபறியில் இருந்த அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியும் உடைந்து விடும் என்றே கருதப்பட்டது.

ஆனால் இந்தக் கூட்டணி நீடிப்பது நல்லது என்று காங்கிரஸ் - அ.தி.மு.க. ஆகிய இருகட்சிகளுமே நம்புகின்றன. தமிழ் மாநில காங்கிரஸை இந்தக் கூட்டணியில் சேர்த்துக்கொள்வது மூலம் பாண்டிச்சேரியில் தி.மு.க. தலைமையிலான ஆட்சியைக் கவிழ்ப்பது,

## த.மா.காவை தனது வலையில் வீழ்த்த ஜெயலலிதா முயற்சி

2001ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. - பாரதீய ஜனதாக் கூட்டணிக்கு ஈடுகொடுக்கும் வகையில் வலுவான கூட்டணி ஒன்றை இந்த இருமாநிலங்களிலும் உருவாக்குவது ஆகியவையே இந்த இரு கட்சிகளின் நோக்கம் ஆகும்.

அ.தி.மு.க. - காங்கிரஸ் உறவு தொடரும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திண்டிவனம் இராமமூர்த்தி சமீபத்தில் தெரிவித்திருந்தார். ஜெயலலிதாவும் இதே கருத்தையே தெரிவித்து வருகிறார்.

கடந்த மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. - காங்கிரஸ் அணியில் போட்டியிட்ட சகல கட்சிகளும் 2001 சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் ஒரே அணியில் போட்டியிட விரும்புகின்றன. இந்த கூட்டணியில் உள்ள கட்சிகள் ஒன்றை ஒன்று விமர்சிக்கக்கூடாது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அறிவுறுத்தி உள்ளது.

மக்களவைத் தேர்தலில் பின்னடைவு ஏற்பட்டதற்கு ஜெயலலிதா நடந்துகொண்ட முறைதான் காரணம் என்று தமிழ்நாட்டின் உள்ளூர் காங்கிரஸ் தலைவர்கள் தெரிவித்திருந்தனர். 2001 சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் தற்போதைய கூட்டணி தொடரும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்திருப்பதால் அதனை எதிர்கொள்வதற்கு அ.தி.மு.க - காங்கிரஸ் கூட்டணிக்கு தமிழ்மாநில காங்கிரஸின் உதவி தேவைப்படுகிறது.

## ஜெயலலிதாவை கவர்ந்த 25 லட்சம் வாக்குகள்

கடந்த மக்களவைத் தேர்தலில் தமிழ் மானில காங்கிரஸை தம் பக்கம் இழுக்க ஜெயலலிதா மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி அளிக்கவில்லை. ஊழல், வகுப்புவாதம் இரண்டையுமே எதிர்ப்போம் என்பதில் பிடிவாதமாக இருந்ததினால்தான் மூப்பனார் முன்றாவது அணியை உருவாக்கினார். ஆனால் எதிர்பாராதவிதமாக இந்த அணி ஒரு தொகுதியிலாவது வெற்றிபெறவில்லை. முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் போன்ற தலைவர்கள் கூடத் தோற்றுப் போனார்கள். தமிழ் மாநில காங்கிரஸ் வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட தொகுதிகளில்கூட போதுமான வாக்குகள் கிடைக்கவில்லை. மத்தியில் பாரதீய ஜனதா ஆட்சியா? காங்கிரஸ் ஆட்சியா? என்றபோட்டி இருந்ததால் சில தொகுதிகளில் தமிழ் மாநில காங்கிரஸ் வாக்குகள் காங்கிரஸுக்கு விழுந்தன. அப்படி இருந்திருந்தும் 25 லட்சம் வாக்குகளை மூப்பனார் தலைமையிலான இந்த மூன்றாவது அணி தமிழ்நாட்டில் பெற்றிருந்தது. எங்கள் கூட்டணியில் தமிழ் மாநில காங்கிரஸ் இருந்திருந்தால் தேர்தல் முடிவுகள் வேறுவிதமாக இருந்திருக்கும் என்று ஜெயலலிதா வெளிப்படையாகக் கூறியிருந்தார்.

கடந்த மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி தமிழ்நாட்டில் 13 இடங்களைக் கைப்பற்றி இருந்தது. தமிழ் மாநில காங்கிரஸ் அணிக்கு கிடைத்த வாக்குகள் முழுமையாக அ.தி.மு.க.அணிக்கு கிடைத்திருந்தால் மேலும் 14 இடங்களைப் பிடித்திருக்கும் என்று ஜெயலலிதா கருதுகிறார்.

ஆகவே கடந்த மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் மூப்பனார் தலைமையிலான மூன்றாவது அணி பெற்ற லட்சக்கணக்கான வாக்குகளும் ஜெயலலிதாவைக் கவர்ந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே மக்களவைத் தேர்தலில் தோல்வி கண்ட தமது கட்சி மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் தோல்வி கண்டால் கட்சியை கட்டுப்பாட்டின்கீழ் தொடர்ந்து வைத்திருக்க முடியாத நிலைமை ஜெயலலிதாவுக்கு ஏற்படும்.

## கண்ணன் முதலமைச்சராவாரா?

தி.மு.க. தலைமையிலான பாண்டிச்சேரி மாநில அரசில் உள்துறை அமைச்சராக இருந்து மக்களவைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அந்தப்பதவியை ராஜினாமாச் செய்தவர் அந்த மாநில த.மா.கா. தலைவர் கண்ணன். பாண்டிச்சேரியில் தி.மு.க. தலைமையிலான அரசு கவிழ்க்கப்படுமானால் முதலமைச்சர் பதவியை கண்ணன் ஏற்பதில் தமக்கு ஆட்சேபம் இல்லையென்று காங்கிரஸ் தெரிவிக்கிறது. தமிழகத்தில் தி.மு.கவுடனான உறவு முறிந்ததைத் தொடர்ந்து மக்களவைத் தேர்தலில் மூன்றாவது அணி அமைத்து போட்டியிட்ட த.மா.கா பாண்டிச்சேரியில் தனது வேட்பாளராக கண்ணனை நிறுத்தியிருந்தது. தி.மு.க. கூட்டணி வேட்பாளரும் த.மா.கா வேட்பாளரும் மோதிக்கொண்ட நிலையில் காங்கிரஸ் அங்கு வெற்றிபெற்றது. அதேசமயம் த.மா.காவைச் சேர்ந்த மற்றொரு அமைச்சரான ஜெயக்குமார் தி.மு.க தலைமையிலான அமைச்சரவையில் இப்பொழுதும் நீடித்துவருகிறார். பாண்டிச்சேரியைப் பொறுத்தவரை முடிவெடுக்கும் அதிகாரத்தை கண்ணனிடமே விட்டுவிட்டதாக மூப்பனார் கூறுகிறார்.

பாண்டிச்சேரி அரசின் ஸ்திரத்தன்மை குறித்து கேள்விகள் எழும்போதெல்லாம் பொறுத்திருந்து பாருங்கள் என்று மூப்பனார் பாணியில் பதில் அளிக்கிறார் கண்ணன்.ஆனால் தி.மு.க. தலைமையிலான தற்போதைய ஆட்சிக்கு ஆபத்தில்லை என்று கூறுகிறார் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள த.மா.கா.வைச் சேர்ந்த ஜெயக்குமார். ஆகவே அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியில் த.மா.கா. சேருவது தொடர்பாக பாண்டிச்சேரியில் த.மா.கா. மத்தியில் கருத்துவேறுபாடு இருப்பது புலனாகிறது.

பாண்டிச்சேரியில் தனது தலைமையிலான ஆட்சிக்கு ஆபத்து வந்துவிட்டதாக தி.மு.கவுக்கு பதற்றமோ அச்சமோ இருப்பதாகத் தெரியவில்லை. பாண்டிச்சேரியில் தமது அரசுக்கு ஆபத்துவராது என்று தாம் கருதுவதாக கருணாநிதி கருத்துத் தெரிவித்துள்ளார்.

## மூப்பனார் துணிவாரா?

கருணாநிதியின் இந்த நம்பிக்கைக்குக் காரணம் இல்லாமல் இல்லை. சட்டப்பேரவைத் தேர்தல்களுக்கு இன்னும் 18மாதங்களே உள்ளன. அதற்குள் ஆட்சியைக் கவிழ்த்து விட்டு காங்கிரஸுடன் சோந்து அ.தி.மு.க. உதவியுடன் ஆட்சி அமைப்பது எத்தகைய எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பது குறித்து த.மா.கா. தலைவர்களிடையே குழப்பம் நிலவி வருகிறது.

மத்தியில் வாஜ்பாய் அரசை கவிழ்த்ததாக அ.தி.மு.க. அரசு மீது குற்றச்சாட்டுக்கள் இருந்து வருகின்றன. அதன் காரணமாக அ.தி.மு.கவின் தேர்தல்வெற்றியும் ஓரளவு பாதிக்கப்பட்டது. அடுத்ததாக தமிழகத்தில் தி.மு.க. கூட்டணியில் இருந்து த.மா.கா. வெளியேறக் காரணம் தி.மு.க. - பாரதீய ஜனதா உறவுதான். மதவாதத்தை எதிர்ப்பதாகக் கூறியே தி.மு.க. கூட்டணியுடனான உறவை த.மா.கா.முறித்துக்கொண்டது. ஆனால் பாண்டிச்சேரி சட்டப்பேரவையில் பாரதீய ஜனதாவுக்கு பிரதிநிதித்துவம் இல்லை. அந்த மாநிலத்தில் பாரதீய ஜனதா செல்வாக்குப் பெற்ற கட்சியும் இல்லை. ஆகவே தற்பொழுது உள்ள தி.மு.க. தலைமையிலான கூட்டணி அரசைக் கவிழ்ப்பதற்கு மதவாதம் என்ற காரணத்தை முன்வைக்க முடியாது.


மற்றொரு பிரச்சினை, தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இருந்து வெளியேறுவது என்று முடிவு செய்தால் த.மா.காவின் அனைத்து உறுப்பினர்களும் ஏற்பார்களா என்பது சந்தேகமே. பொறுத்திருந்து பாருங்கள் என்று காங்கிரஸும் அரசுக்கு ஆபத்தில்லை என்று த.மா.கா. அமைச்சர் ஜெயக்குமாரும் கூறியிருப்பது இதனை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது.

எனினும் த.மா.கா. - காங்கிரஸ் உறவு பாண்டிச்சேரியில் நெருக்கமாகி வருகிறது என்பதைத் தட்டிக் கழித்து விடமுடியாது. டீசல் விலை உயர்வுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நடத்தி வரும் போராட்டத்திற்கு த.மா.கா. ஆதரவு வழங்கிவருகிறது.

புதுடில்லியில் சுப்ரமணியசுவாமி வைத்த தேநீர் விருந்தைத் தொடர்ந்து வாஜ்பாய் அரசு கவிழும்வரை, ஒன்றாக இருந்த எதிர்க்கட்சிகள் அரசு கவிழ்ந்த பின்னர் மோதிக்கொண்டது போல, பாண்டிச்சேரியிலும் நடந்துவிடுமோ என்ற அச்சம் த.மா.காவுக்கு இருக்கிறது. இதனால்தான் பொறுத்திருந்து பார்க்கும் தந்திரத்தைக் கையாளுகிறார் மூப்பனார்.

கடந்த 23ஆம் திகதி மூப்பனாரைச் சந்தித்த பின்னர் அரசியலில் நிரந்தர நண்பரும் இல்லை நிரந்தர எதிரியும் இல்லை என்று ஜெயலலிதா தெரிவித்திருந்தார். தோல்விக்கு மேல் தோல்விகளை அடைந்த நிலையில் மூப்பனாருக்கும் இது இசைவானதாகத் தோன்றினால் பாண்டிச்சேரியில் ஆட்சி மாற்றம் தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.

*





த.மா.காவும் தி.மு.கவும் முன்னர் ஒரே அணியில் இருந்த சமயம் மூப்பனாரும் கருணாநிதியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமொழி

## உங்கள் கவிதைகள்



சந்ததியாய் வாழ்ந்த மண்ணில்
சொந்தங்கள் வீழ்ந்தலற உடலில்
கந்தைத் துணியுமற்று மனித
மந்தைகளாகி மாட்டிய விலங்கொடு
வெந்தணலில் முகம் வேகவைத்து
பந்தாடி பாதிஉயிர் பறித்து
நம்தமிழ் உறவுகளின் தூய
சிந்தையும் மீறி சீரழித்து
சித்திரவதையில் குற்றுயிராக்கும்
எத்தரின் கதையில் முற்றுப்புள்ளி எப்போ??

- மதுரை பண்ணாகம் -

'தீ'க்குள் இருந்துகொண்டு
'ஈ' என்று இழிப்பவனே...
உன்னைத்தான்!
வாய்க்கும் போதெல்லாம்
'வடி' அடித்தால்,
வனப்பென்று எண்ணாதே!
ஊத்தைக்குள்ளே உல்லாசம் காணும்
பன்றி அல்ல நீ!
உண்டி அற்று உருச்சிறுத்த - உன்
'குடி'யை பெருக்குதற்கு
உள்ளத்தால் உணர்வு பெறு!
உண்மையான நினைவு பெறு!!

- ஈழமேகம் -

நாலிலொரு
அடியகலம்
துருவல் பலகையில்
தேங்காய் துருவும்
ஒருவராகவிருப்பது
இங்கெம் வாழ்வு!
குலவிளக்காயொளிர
வேண்டியவன்!
கூட்டுமாறாயானாலும்
பரவாயில்லை! ~ கள்ளுக்
குதத்தில்! ~ கசிப்புக்
கூடாரத்தில் ~ அகலக்
குந்திவிட்டாயே!
வடலியான ~ உன்
இளசுகளுக்கு
என்ன வைத்தாய்?
கொள்ளிவைத்தாயே~உன்
குடும்ப வாழ்விற்கு!!

- மாருதி -
ஆவரங்கால்.

ஆவியால்
சொட்டி நிற்கும்
அழுத ராத்திரிக்கு - நீ
அடிமை விலங்கேந்தி
தலை முழுகிவிட்டாய்...
உன் ஆவியை
அது விரட்டிட முன்பே
நீ சென்றிருந்த
அவ் உலகைவிட்டு,
இவ் உலகம்
திரும்பி விடு...!

- ச.தியாகேஸ்வரசர்மா -
நுணாவில் மத்தி.

போத்தலுள் புகுந்து
போதையைத் தேடும்
பேதை மனிதா!
உன்னை
உயிரோடு எரிக்க
உலைக்களமே
போத்தலுள் புதைந்திருப்பதை
உன் கண்கள்
காண மறுப்பது ஏனோ?

- மயூறனி -
வன்னி.

தீயாக எரியும் - இத்
தீவினிலே!
தீராத பிரச்சினைகள்
தீர்ப்பதற்கோ ஒன்றுமில்லை
தீர்வுப் பொதி இதனுள்ளே!

-வண் க.பிரசாந்தன் -

மதிகெட்டிங்கே மதுவுக்கடிமையாகி
கதியற்றுக் குடும்பம் கலங்கிட வைத்தவனே!
சீரழிந்து போனதடா வாழ்வு.
உன்னை உணவற்று ஊரெங்கும் அலைவதற்கு
என்ன தவறிங்கே செய்ததுன் உறவு?
முன்னோர் தந்த சொத்தை மதுவுக்காய் விற்றழித்தாய்
தேடிய பணத்தையெல்லாம் தினமிங்கே செலவுசெய்தாய்
மரணப் பாதையிலுன் பயணம் தொடர்வதன்றி
மண்ணி லுன்குடும்பம் வாழ நீ என்செய்தாய்...?

- பொலிகையூர் சு.க.சிந்துதாசன் -

அழுத்தங்களுக்கு
அரிவாள் நீட்டி
பெரு வாழ்வு காணும் நீ
மது விலங்கினுள்
மனம் புதைத்து
விடியலின் முன்
மடிகிறாயே...
நீ தீபமாய் எரியாமல்
திரியிலே கருகினால் – எம்
திருநாடு ஒளிருமா...?

- ம.ஜெகூ -
திருநெல்வேலி.

குடிக்கும் குடிமகன் குடித்த பின் ~ தன் குடில்
அடித்து இடிப்பது வீண்!
வடித்த வடியினைக் குடித்தவன் ~ தன் குடல்
கடித்து ஒடிக்குமோர் கருநாகம் உண்டவன் கேள்!!

- திரு நா.மயூரன் -
யாழ்.

போர்க்காலச் சூழ்நிலைகள்
போயமைதி மீளுமென
நாற்காலிச் சின்னமுடன்
நாடாள வந்தவர்கள்
தேர்க்காலில் அகப்பட்ட
தேரைகளாய் எமைவதைத்து
கூசாக்குள் புகைபோட்டு
குனியச் சொல் கொடுமையிதே
தேசாபிமானத்தை தீநாளும் தின்கின்ற
தேர்தல் சின்னமிது; தெரிந்து கொள்ளுங்கள்!

- நயினை இராகுலன் -

'ராகிங்'இல்
மதுவருந்தக் கட்டாயப்
படுத்தப்பட்ட
மாணவன் நான்
பல்கலைக் கல்விக்கு
இசைவாக்கமடைய
இதுவும் அவசியமாம்.

- பிராதிகி -
பூநகரி.

இந்தச் சிதை என்னை
எதுவும் செய்துவிட முடியாது....
இதில்
கனலும் இல்லை
பொறியும் இல்லை என்
இதயத்தில் பற்றி வியாபித்திருக்கும்
நெருப்பிலும் விட
இவை மென்மையே... இருப்பினும்
இக்கணத்தின் உணர்விறுக்கங்கள்
நாளைய முளைத்தல்களையும் தொடலாம்
இன்றே தளர்த்தா விடின்...!

- மருதம் கேதீஸ் -

'மது' தேவன் - உன்
மதி தின்ற
புது வேந்தன் - இவன்
பூட்டிய விலங்கில்
புதுங்கைதி நீ!
அரங்காந்து
அருந் தமிழ் பேணும்
பெரும் பணி துறந்து
அடிமையாகிறாய் - இது
அநியாயம்!

- க.வாணி -
கச்சாய்.

உன்னை மட்டுமன்றி
உற்றாரையும்
அழிக்கும் - மது
அரக்கனின்
பிடியினால்
பிணைக்கப்பட்டு
மதி கெட்டு அலையும்
மனிதா
நிமிர்ந்திரு - இனியாகிலும்
நிம்மதியை கொடுத்திடு!
உன்னை நம்பியோர்க்கு.

- சாவையூர் சுகந்தி -

பலரை விலங்கிட்டு அடிமையாக்கியவனே!
அவர்க்கு உயிரோடு கொள்ளியிட்டவனே!
அவர்தம் குடிகளை மடியவைத்தவனே
கயவனே! கசிப்பே!! நீயொழிவது எப்போ?

- இணுவை றொட்றிக் -

பதமான பனங்கள்ளு – இங்கே
பரவலாகக் கிடைக்கையிலே
'பாரின்' சரக்கினிலே
பாவியிவன் பழிகிடப்பதேனோ?

- ஜே.சுசீன்திரன் -
உசன்.

சுகம் தருவேன் விடாது குடி என்றது
சகல வருத்தமும் தொடர்ந்து சூழ்ந்தது - என்
பிள்ளைகள் எல்லாம் தெருவிற்கு வந்தது!

- முத்துமாரி -

## மௌனமொழி - 59




உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. இதனை வரைந்தவர் பருத்தித்துறை யைச் சேர்ந்த ரீ.ஜெயதீபன்.

கசிப்புச் சிறைக்குள்
கைவிலங்கிடப்பட்ட
மனிதா!
உனக்காக
கூர்ப்புக் கொள்கையை
மாற்றி எழுத வேண்டும்
ஏன் தெரியுமா,
மனித உருவிலேயே - நீ
மரந்தாவும் விலங்காய்
மாறியதற்காக.

- கணேஸ் விமல்ராஜ்-
யாழ்ப்பாணம்.

நினைவுகள் தோன்றவில்லை
ஏனெனில்...
என் நினைவுகள்
மறந்துவிட்டன!
சிரிக்கத் தோன்றவில்லை
ஏனெனில்...
என் சந்தோசங்கள்
சபிக்கப்பட்டுவிட்டன!
உணர்வுகள் தோன்றவில்லை
ஏனெனில்...
என் உணர்ச்சிகள்
உருவிழந்துவிட்டன!
நிஜங்கள் கூட
என்னிடமில்லை
ஏனெனில்...
வாழ்வில் நிம்மதியில்லை.

- கனகராயனூரான் -

தமிழனாயப் பிறந்ததாலா
தலைநிமிர மறுக்கின்றாய்
அடிமை விலங்கை உடைத்து
அவமானங்களை துடைதெறிந்து
வெற்றி பெறு அல்லது
சாவினைக் கடந்து செல்!

- க.யாழினி -
கரவெட்டி.

எழுக! எழுக!
மனிதா... மனிதா...
இனி... ஒரு
விதி... சமைப்போம்.
புது... வழி... அமைப்போம்...
உன் தலை எழுந்தால்
வானமும்... அதிரும்
இரு விழிகள் சிவந்தால்...
இமயமும் நகரும்
விலங்குகள் பயத்தால்...
கரங்களில் விலகும்
கொடுமைகள் ஒழிந்தால்...
புதுயுகம்... பிறக்கும்!!!

- நா.கபில்நாத் -

மதுக்கிண்ணத்தின் முன்
மண்டியிட்டிருக்கும்
மானிடனே!
மனிதமேனிகளிலே
மரணத்தின் ஆணி பாய்ச்சி
விடுதலைக்கு விலங்கிட்டு
படுகொலைக்குள் பயணம் செய்யும்
நீயும் எந்தன் உறவுதானா?

- கோவையூர் எஸ்.கௌசி -

நேற்றிது உன்
கைக்கு விலங்கிட்டது
இன்றோ
உன்னை
மெய்யோடு உள்ளே
இழுத்தும் எடுக்கின்றது
விளங்குகிறதா இந்த
'குடி' மகனின் நிலை?

- பண்ணாக நாரதன் -

'எரித்துண்டு வாழ்வாரே வாழ்வார் ~ மற்றெல்லாம்
கசிப்புண்டு குடல்வத்திச் சாவார்'
'காசினால் வந்த நோய் உள்ளாறும் ~ ஆறாது
கசிப்பினால் வந்த நோய்'

- செ.சுதர்சன் -
உடுப்பிட்டி.

மனிதா...!
மனதுக்கு கட்டுப்பாடு போடாது,
உனது கைகளிற்கு விலங்கிட்டு
என்ன பயன்?
போதைத் தீயில் விட்டிலாய் நீ விழ,
பாதையில் இல்லை தடைகள்(ல்)

- ஆரணி -
குரும்பைகட்டி.

விழிக்குப் புலனாகா
விடுதலை விலங்கைச்
சுமக்குமெங்களில்
நீ... விதி விலக்கு!
களவிரும்பிக் கைவிலங்கைச்
சுமக்குமுன் நிலைதான்
அவ் 'விலக்கு'!

- பராங்கதன் -

உதிரத்தை உறையவைக்கும்
உடலியல் வதைப்படலம்
உணர்ச்சிகளை ஒன்றுகூட்டி
உரத்து ஓலமிட வேண்டிய காட்சியை
மௌனமாக மொழியச் சொல்லும்
'உதயனே'
நீ கூட ஒருவகையில்
அடக்கு முறையாளன்தான்!

- இ.உதயசங்கர் -
வதிரி.

என் நாடு
என் ஊர்
எனது வீடு
விழித்துப் பார்த்தால்
நான் ஒரு 'அகதி'
விளக்கங்கேட்டால்
நான் ஒரு 'கைதி'

- வதிரி வாசன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிக்கத் தெரிந்தோர் ஆண்களா? பெண்களா?

**நல்லூர். சுதா.**
அதிகம் தொல்லை கொடுப்பவர் கணவனா? நுளம்பா?

☺**நுளம்பு விடிய விடியக் குத்துமே!**


❀ ❀ ❀

**அரியாலை. ஜீன்.**
'கொட்டில்' என இப்போது அழைக்கப்படுவது எது?

☺**முன்னர் கள்ளுக்கொட்டிலைத்தான் அழைத்தார்கள். இப்போது தனியார் கல்வி நிலையம், மினிசினிமா என்று பல சேர்ந்து கொண்டு விட்டனவே!**

❀ ❀ ❀

**மந்துவில். க்ரன்.**
பஸ்ஸில் இளவட்டங்கள் அடிபட்டு, முட்டி மோதி ஏறுகின்றனரே? ஏன்?



☺**பிடிப்பதற்குத்தான்! - நான் ஆசனத்தைக் குறிப்பிட்டேன்!**

❀ ❀ ❀

**மிருசுவில். மடோனா.**
கண்டகண்ட பெண்களைக் காதலிக்கும் ஆண்கள் குறித்து......!

☺**காணாத பெண்களைக் காதலிக்கச் சொல்லுகின்றீரா?**

❀ ❀ ❀

**மானிப்பாய். பிரதி.**
சாதிக்கத் தெரிந்தோர் ஆண்களா? பெண்களா?

☺**பெண்களிலும் ஆண்கள்!**

❀ ❀ ❀

**பளை. ஆர்.ராஜா.**
எனது மனைவி 'அடிக்கடி' அழுகின்றாள். என்ன செய்ய?

☺**நீர் ஒன்றும் செய்யாதீர்!**

❀ ❀ ❀

**குப்பிளான். லிங்கம்.**
வித்தய்யா! ஒழுங்காக வேலைக்குச் செல்லாது NO PAY எடுப்பவர்கள் குறித்து....!

☺**வீட்டில் Over Time செய்கிறார்கள் போலும்!**

❀ ❀ ❀

**கொழும்புத்துறை. பௌசி.**
உலகில் புத்திசாலிகள் அதிகமா? முட்டாள்கள் அதிகமா?

☺**தங்களைப் புத்திசாலிகள் என்று நினைத்துக்கொள்ளும் முட்டாள்கள்தான் அதிகம்.**

❀ ❀ ❀

**துறையூர். மெல்.**
கல்வி அறிஞனை உருவாக்குகின்றது; காதல் கவிஞனை உருவாக்குகின்றது. காமம்......?

☺**காமுகனை உருவாக்குகின்றது.**

❀ ❀ ❀

**வடமராட்சி. து.தவம்.**
கன்னிப் பெண்களை நம்பலாமா? கடவுளை நம்பலாமா?

☺**இருவருமே நம்பாச் சாதி. கடைசி வரை சோதிப்பவர்கள்.**

❀ ❀ ❀

**அளவெட்டி. ராசன்.**
"உனக்காக உயிரும் கொடுப்பேன்" என்ற தோழன் காதல் விஷயத்தில் மட்டும் எனக்கு வில்லனாக நிற்கின்றானே?

☺**சொன்னதைத்தானே அவர் செய்ய முயல்கின்றார் - உமக்காக உயிர் கொடுக்கத்தானே முயற்சிக்கின்றார்!.**


❀ ❀ ❀

**யாழ். யாரோ.**
வித்தூ! எனது நண்பி இப்போதெல்லாம் அடிக்கடி தனிமையில் சிரித்துக்கொண்டிருக்கின்றாளே! ஏன்?

☺**"தெரியாதோ நோக்கு..... தெரியாதோ... அவள் தானாச் சிரிப்பா..... தனியா நடப்பா...." என்று ஒரு சினிமாப்பாடல் உள்ளதே. அதில் கூறப்பட்டபடி காதல் நோயில் சிக்கியிருக்கின்றார் உமது நண்பி.**

❀ ❀ ❀

**நவாலி. கபி.**
'பெண் என்றால் பேயும் இரங்கும்' என்பார்கள் தற்காலப் பெண்களைப் பேய் கண்டால்....!




☺**இறங்கும் - மரத்தை விட்டு. இறங்கி ஓட்டம் பிடிக்கும்.**

# புத்திசாலிகள் அதிகமா? முட்டாள்கள் அதிகமா?

❀ ❀ ❀

**நவாலி. தீப்.**
பெண்கள் காற்சட்டை அணியலாமா?



☺**உமது நப்பாசையைப் பாரும். 'காற்' சட்டை அணிய முக்காலை பார்த்து ரசிக்கும் எண்ணமோ? 'அரை'ச் சட்டை, 'முக்கால்' சட்டை, 'முழு'ச்சட்டை அணியட்டுமே!**

❀ ❀ ❀

**நாவற்குழி. சுகி.**
வித்துவானே! உமக்கு வெட்கம், ரோசம், மானம் ஏதும் உண்டா?

☺**திருமணம் செய்ய முன்னர் இருந்ததாக ஞாபகம்.**

❀ ❀ ❀

**கல்வயல். ஈசன்.**
வித்தையா! எங்கள் அம்மணிக்கு சமாதான நோபல் பரிசு கிடைக்குமாமே!

☺**என்ன, நோபல் பரிசு நடுவர் குழுவுக்கு எங்கள் தமிழ் எம்.பிக்களையா தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள்?**

❀ ❀ ❀

**நெல்லியடி. எமிலின்.**
திறமைகள் பல இருந்தும் வாழ்க்கையில் முன்னுக்கு வரமுடியவில்லையே! ஏன்?

☺**முயற்சி திருவினையாக்கும்!**

❀ ❀ ❀

**இணுவில். எஸ்.வி.**
'கூட்டுறவு' - விளக்குங்கள்!

☺**வாழ்வின் ஊற்றே அதுதானே!**

❀ ❀ ❀

**மானிப்பாய். பிரதீப்.**
காதல் - தேர்தல். ஒப்பிடுக!

☺**தேர்தல் வாக்குறுதிகள் போல காதலும் ஆரம்பத்தில் கிளர்ச்சியூட்டுவதாகவே இருக்கும். ஆனால் தேர்வின் பின் இரண்டுமே விரைவில் சலிப்பூட்டிவிடும்.**

❀ ❀ ❀

**மானிப்பாய். தீபன்.**
பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்கின்றார்கள். விளக்குங்களேன்!

☺**கிளிப்பிள்ளை மாதிரி வீட்டில் ஒருத்தி இருக்க குரங்குப்பிள்ளையைத் தேடி வெளியில் அலையும் ஆண்களிடம் கேட்டால் நன்றாக விளக்குவார்கள்!.**

❀ ❀ ❀

**அரியாலை. ராஜீவ்.**
வித்துவா! ஐம்பதிலும் ஆசை வருமா?

☺**இங்கு எண்பதிலும் ஆசை வருகின்றதே!**

❀ ❀ ❀

**நல்லூர். ஜெயா.**
யாழ்ப்பாணத்து வீராங்கனைகள் வலைப்பந்தாட்டத்தில் திறமையானவர்களாம். உண்மையா?

☺**வலை வீசுவதிலும் அவர்கள் வீராங்கனைகள்தான்!**

❀ ❀ ❀

**விளான். மங்கை.**
காதல் கல்யாணத்துக்கும் சாதகப் பொருத்தம் பார்க்க வேண்டுமா?

☺**மனப்பொருத்தம் இருந்தால் மற்றப் பொருத்தம் எதுக்கு?**

❀ ❀ ❀

**பளை. சுபே.**
பொதுவாக முன்னனுபவத்துக்கு மதிப்புக் கொடுப்பார்கள். அனுபவத்துக்கு முன்னுரிமை கொடுத்த இடம் எது?

☺**ஏன் திருமணம் புரிவதற்கு முன்னனுபவம் ஒரு 'மைனஸ் பொயிண்ட்' ஆச்சே?**

❀ ❀ ❀

**நவாலி. பிரதீப்.**
காதலிப்போருக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டியது என்ன?

☺**எல்லை மீறாமை!**

❀ ❀ ❀

**கட்டுவன். வி.சரசு.**

# வித்துவான் பதில்கள்

குழப்படி செய்யும் மகளைக் கண்டிக்கலாமா?

☺**'ஆணை அடித்து வளர்! பெண்ணைப் போற்றி வளர்!!' - என்று நம்முன்னோர்கள் கூறியிருப்பதைப் புரிந்துகொள்ளுங்கள்!**

❀ ❀ ❀

**இத்தாவில். வ.சந்திரன்.**
காதல் கல்யாணம் எப்படியிருக்கும்?

☺**கொள்ளும்வரை கொண்டாட்டம்; கொண்டபின் திண்டாட்டம்!**

❀ ❀ ❀

**வேம்படுகேணி. மகேஸ்.**
கணவன் நலம் குறித்து சிரத்தை காட்டாத மனைவியை என்ன செய்யலாம்?

☺**'துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு' என்று தெரியாமலா கூறிவைத்தார்கள்?**

❀ ❀ ❀

**கரணவாய். சச்சி.**
'கிணறு தோண்டப் பூதம் கிளம்பியது' என்கின்றார்களே. அது என்ன?

☺**திருமணம் செய்து பாரும். விளங்கும்!**

❀ ❀ ❀

**நீராவியடி. குமார்.**
அம்மணிக்கு வக்காலத்து வாங்குகின்றனவே சில வங்குறோத்துத் தமிழ்க் கட்சிகள்......!

☺**கந்தைக்குத் தகுந்த பொந்தை!**

❀ ❀ ❀

**யாழ். ரவி.**



வித்துவாட்டியின் கையைக் காலை மட்டும் காட்டுகின்றீரே! முழு உருவத்தையும் காட்டலாமே?

☺**உமது கோரிக்கைக்காக மிகக் கஷ்டப்பட்டு நான் எடுத்த படம் இது.**

❀ ❀

**வரணி. சகுந்தலா.**
"தையல் சொற் கேளேல்" - என்ற ஔவையார் வாக்கை ஏற்கலாமா?

☺**எப்படி ஏற்பது? அவரும் தையல் தானே? தையல் சொல் கேட்கலாமா?**

❀ ❀ ❀

**திருமலை. மகேஸ்.**
இன்பமும், துன்பமும் நிலையானவையா?

☺**சுகதுக்கம் சுழல்சக்கரம்!**


❀ ❀ ❀

**சுன்னாகம். வாசவன்.**
தமிழ்க் கட்சிகள் ஒன்றையொன்று குற்றம் சொல்கின்றவே?

☺**ஓரக் கண்ணனைப் பழித்தானாம் ஒற்றைக் கண்ணன் என்ற கதைதான் இது!**

❀ ❀ ❀

**வேலணை. வாசு.**
ஸ்டார் ரி.வியில் அடிக்கடி மல்யுத்தச் சண்டை ஒளிபரப்புகின்றார்களே?



☺**அதன் பயன் நமது சிறிசுகள் புரியும் அட்டகாசத்தில் பிரதிபலிக்கின்றதே!**

❀ ❀ ❀

**வரணி. சாண்டோ.**
வித்தூ! பெண்கள் கோலாட்டம் போடலாமா?

☺ **ஏன் அது ஆண்களுக்கு மட்டுமே உரியதா?**

❀ ❀ ❀

**அளவெட்டி. அருணா.**
கதிர்காமரின் சிறப்பியல்பை ஒரு வரியில் விமர்சியுங்கள்....!

☺**கோடாரிக் காம்பு!**

❀ ❀ ❀

**காரைநகர். வளவன்.**
ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவுக்கு மறைமுகமாக வால்பிடிக்க சில தமிழ்க்கட்சிகள் முயற்சிக்கின்றனவே?

☺**'விநாசகாலே விபரீத புத்தி' என்பது இதைத்தான்!**

❀ ❀ ❀

**கோப்பாய். சுயானா.**
நம்மூர் ஆண்கள் வெள்ளைக்காரப் பெண்ணை அதிகம் விரும்புகின்றார்களே?

☺**தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி!**

❀ ❀ ❀

**நல்லூர். குமரேஸ்.**
மனைவியை இழந்த ஒருவர் சமையலுக்கு வேலைக்காரி வைக்கலாமா?

☺**ஒரு கல்லில் இரு மாங்'காய்' விழுத்தும் முயற்சி இது!**

## இவ்வார ஜோக்

ஒருவரும் இல்லாத அந்த வீட்டில் மேரியும் பீற்றரும் தனித்து இணைந்திருந்தார்கள். போன் அலறியது. மேரி கதைத்துவிட்டுத் திரும்பினாள். பீற்றர் கேட்டான்.

"யாரது?"

"என் கணவர் ஜோன் பேசினார். உங்களுடன் உங்கள் வீட்டில் சீட்டாடிக்கொண்டிருப்பதாகவும் வீட்டுக்குவரத் தாமதமாகும் என்றும் கூறினார். "நல்லது ஜோன் ஆறுதலாக வாருங்கள்!! என்று நான் பதிலளித்தேன்!" - என்றாள் மேரி.

"அப்படியா சொன்னான்?" என்று கேட்டபடி பீற்றர் விழுந்தடித்துக் கொண்டு ஓடிச்சென்று போனைச் சுழற்றி வீட்டுக்குஅழைப்பு எடுத்து மனைவியுடன் பேசினான்.

"ஹலோ! கதறீன். நான் பீற்றர் பேசுகிறேன். இங்கு ஜோன் வீட்டில் ஜோனுடன் சீட்டாடிக்கொண்டிருக்கின்றேன். வர 'லேட்' ஆகும். நீ என்ன செய்கின்றாய்?"

"நீங்கள் ஆறுதலாக வாங்க டியர். நான் இங்கு மேரியுடன் சீட்டாடிக்கொண்டிருக்கின்றேன்" என்று பதிலளித்தாள் மனைவி கதறீன்!

# அதிகம் தொல்லை தருபவர் கணவனா? அல்லது நுளம்பா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## முத்தியடைய வழி!

14

"ஸேர்! நீங்கள் பென்ஷன் எடுத்ததற்குப் பிறகு என்ன வேலை செய்வியள்.....? நேரம் எப்பிடிப்போகும் எண்டாவது சொல்லுங்கோ..... பிளீஸ்!" எனது ஆசிரிய நண்பர் கேள்விக்கணையை தொடர்ந்தார்..

"தனக்குரசனை இல்லாத வேலையை ஒருவர் விரும்பிச் செய்ய இயலாது ஸேர்! உண்மையைச் சொன்னால் எனக்கு...மினிபஸ்ஸிலை கொண்டக்ரராய் வேலை செய்யத்தான் விருப்பம்! ஸ்ஸா! என்ன ஒரு சாதுரியம், தொழில்நுட்பம் கலந்த வேலை...! உரச்சாக்கு மூட்டையும் சைக்கிளும் மழைநேரம் 'ஹூட் கரியரிலை' ஏத்திறதும் இறக்கிறதும் பெரிய கரைச்சல்தான்! மற்றும்படி.... திறமான வேலை!"

தரிப்பிடங்களில் நிற்கும் பயணிகளிடம், "அடுத்த ஹோல்ற்றிலை இறங்க இருக்கினம்.... இடந்தரலாம் ஏறுங்கோ! அண்ணை வாருங்கோ...! அம்மா வாருங்கோ...!" என்று அன்பாக உபசாரம்செய்து... ஏற்றி... முழுத்தூரமும் நெருக்கியடித்து 'நிற்க' இடங்கொடுத்து.... வயதுபோன அந்த அம்மா கம்பியையும் பிடிக்கமுடியாமல்.... நிற்கவும் முடியாமல் காவடியாட.... நான் அந்த அம்மா பக்கம் முகங்காட்டாமல் பராக்குப் பார்த்து.... அடுத்தடுத்த தரிப்புகளில் காத்துநிற்பவர்களையும்"இடந்தரலாம்வாருங்கோ" சொல்லி ஏற்றுவதற்காக, "அக்காபின்னுக்குப்போங்கோ...! அண்ணை பின்னுக்குப்போங்கோ...!" என்று கெஞ்சுவதுபோல நான் கத்த... விளங்காததுபோல அவர்கள் அசையாது நிற்க.... "ஒன்றுவிட்ட அக்கா போங்கோ..! ஒன்றுவிட்ட அண்ணை போங்கோ...!" என்று, விளங்கக்கூடியதாய் நான் கத்தும்போது.., 'அன்புள்ள மச்சாள் போங்கோ!' என்று மென்மையாய், அருகிலிருந்துவருமே'சங்கிலி போட்ட ஒரு மைனர்க் குரல்'...அடடா! என்ன ஒரு...!அருமை..!கேட்கக கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!


'சென்றி' வந்தால் ஏற்படுகிற கம்பீரத்தில்,"சொல்லிப்போட்டன்..! இதிலை எல்லாரும் இறங்கத்தான்வேணும்.... பிறகு கரைச்சல்படாதையுங்கோ! சொன்னால் கேக்கமாட்டியள்....! வந்து, பிறகு இறக்கேக்கை தெரியும்!" என்று ஒரு மிரட்டல் மிரட்டி.... எல்லோரையும் இறக்கி... நடை பழக்கி... முண்டியடித்து ஏறியபின், அந்தப் பெரியவரிடம் (ஒருபழசு), "இண்டைக்கு அவன்ரை முகம் சரியில்லை ஐயா! கடுகடுப்பு...! எனக்கும் 'சாத்தல்'தானோ எண்ட பயத்திலைதான் இறங்கச் சொன்னனான்.... சனம் இறங்கிவிட்டால் என்னோடை சருவவரான்....! நீங்கள் களைச்சுத்தான் போனியள்!" இது எப்பேர்ப்பட்ட ஆறுதல்வார்த்தை....! நடந்த, வெயில் சுட்ட களைப்பு எல்லாம் பறந்து, உச்சி குளிர்ந்து போகாதா என்ன?

மறந்து போயிருக்கிற பயணிக்குக் கிட்டப்போய், ஐயா, இந்தாருங்கோ மிச்சக்காசு...! என்று கொடுக்கும் போது பார்க்கவேண்டுமேபயணியின் முகத்தை..! சுவீப்ரிக்கற்றுக்கு லட்ச ரூபா அதிர்ஷ்டம் அடிச்ச மாதிரி.... அடடா! முருகா...! ஸேர்...! கடைசியிலை 'முத்தியின்பம்' வேணுமெண்டால் மினிபஸ்ஸிலை கொண்டக்ரர் வேலைதான் வேலை...!ஸேர்... அதுக்காக இப்பவே பென்ஷன் எடுப்போமோ எண்டு அவசரப்படாதையுங்கோ....! கொஞ்சநாள் செய்தாலும் முத்திகிடைக்கும்!" - நான் நண்பருக்கு ஒப்பித்து முடித்தேன்.

## அந்தநாள் ஞாபகம்.....

நான் இறுதியாய்க் கற்பித்த கல்லூரி நாட்டு நிலைமைகளால் மிக மோசமாகப்பாதிக்கப்பட்டவற்றுள ஒன்று. அதிபர் அக்கல்லூரியின் பழைய மாணவர். கட்டடங்கள் மிகப்பெரும் பகுதி உடைந்து தகர்ந்தும், உடையாதிருந்த பகுதியும் வகுப்புகள் நடத்த முடியாதனவாகவும இருந்தன.'றோணியோ' செய்வது உட்பட அனைத்துஅலுவல்களுக்கும்பொருள்கள் தட்டுப்பாடும் பொருள் விலையேற்றமும் உச்சமாயிருந்த நேரம் அது.

வகுப்புகளுக்கான கொட்டகைகள் அமைத்தும், தேவையான பொருள்களை இயன்றளவு குறைவான விலையில் பெற்றும் பாடசாலையைச் சீராக நிர்வகிப்பதற்கு அதிபர் மேற்கொண்ட பிரயத்தனங்களும், பாடசாலையின் வலிமையான பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம் என்பன மேற்கொண்ட நடவடிக்கைகளும் போற்றுதற்குரியவை. பாடசாலைச் சங்கங்களின் ஒத்துழைப்போடு, அதிபரது ஓயாத உழைப்பும் இருந்ததாலேயே கல்லூரி சோர்வின்றி இயங்கியது. வெயில், மழைபாராது அதிபர்து சைக்கிள் ஓடிய தூரமென்ன....? வேகமென்ன....?



அவரது மோட்டார்சைக்கிள் அடிக்கடி 'மக்கர்' பண்ணிக்கொண்டு, சமீபமாயிருந்த 'மெக்கானிக்' வீட்டில் போய்ப் படுத்துக்கொள்ளும். அதைப் பார்க்கும் போதெல்லாம், 'இப்படியும் ஓர் அறிவுகெட்ட ஜென்மமா?'என்று மனதில் ஓர் ஆத்திரமும்,அதேநேரம், 'சோழர் காலத்திலும் மோட்டார்சைக்கிள் இருந்திருக்குமோ?' என்ற ஓர் ஐயப்பாடும் எழும்.

ஆனால், அதிபர் வாலிபத்துக்கும் நடுத்தரத்துக்கும் இடையிலிருந்தார். அதனாலேயே அப்படி இயங்க அவரால் முடிந்தது என்பதும் உண்மையே. ஒருநாளில் அவர் செய்துமுடிக்கும் வேலைகளின் அளவு பரிமாணத்தைக் கவனித்திருந்ததால், ஒரு சமயம், "ஒரு நாளில் எத்தனை மணிநேரம் உண்டு?" என்று ஒரு மாணவனைக் கேட்பதுபோல் கேட்டுப்பார்த்தேன். 'அர்த்தம் புரிந்து' சிரிப்பையே பதிலாகத்தந்தார். ஆசிரிய குழாத்தை தன் குடும்ப உறவுகளாய்ப் பேணிய அந்த மனிதரை மறப்பது என்றுமே இயலாத ஒன்று. - மறப்பது பாவச் செயலும் ஆகும் என்பதே பொது அபிப்பிராயம் ஆகும்.

## 'முட்டாள்'தினத்தில்

அன்று, ஏப்ரல் முதலாம் திகதி. நான் ஓய்வுக்காக முன்னறிவித்தல் கொடுத்து விட்டு, ஓய்வுஅனுமதியைக் காத்திருந்த நேரம் அது. அதாவது, எனது, பாடசாலைக் காலத்தின் கடைசி 'ஏப்ரல்.'.பூல்' தினம் அது. யாரிடத்தும் முட்டாளாகி விடக்கூடாதென்ற முன்னெச்சரிக்கையுடன் பாடசாலை சென்றேன்.

மதிய இடைவேளையின்போது, சற்றுத்தொலைவிலுள்ள ஒரு கொட்டகையில் தேநீர் அருந்திக்கொண்டிருந்தேன். அப்போது, என்னுடன் சற்று நெருக்கம் கூடிய, உயர்தர வகுப்பு மாணவன் ஒருவன் வந்து, இராணுவப் பொறுப்பதிகாரியின் அறிவிப்பின்படி, உபஅதிபர், கூட்டம் ஒன்றுக்குப் போய்த் திரும்பும்போது, வழியில் திடீரென இடப்பக்க கை,கால் செயலிழந்து விட்டதால் சைக்கிளிலிருந்து விழுந்து விட்டதாகவும், சுகவீனநிலையில் வாகனம் ஒன்றில் கல்லூரிக்குக் கொண்டு வரப்பட்டு, இப்போது ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு விட்டதாகவும் சொன்னான். சொல்லும் போதே முகத்திலும் குரலிலும் சோகபாவம் ஒன்றைக் காட்டிக் கொண்டான். நிஜமாக நடந்துவிட்ட ஒரு துயரசம்பவத்தைச் சொல்லுகின்ற ஒருபாவனையும் சொன்ன விதத்தில் தெரிந்தது.

இன்று 'ஏப்ரல் 1' என்பது என் ஞாபகத்துக்கு வந்திருக்காது என்று அந்த மாணவன் நினைத்திருக்க வேண்டும் என்று எனக்குப் புரிந்தது.

"எனக்குத் தெரியும்" என்று, சிரித்துக்கொண்டே சொன்ன எனது சுருக்கமான பதிலின் மூலம், 'என்னை முட்டாளாக்குவது சுலபமான காரியமல்ல' என்பதைப் புரியவைத்த திருப்தி எனக்கு.

2 மணித்தியாலங்களுக்குப் பின் அலுவலகம் போனபோதுதான், அந்த மாணவன் சொன்ன விஷயம் நூற்றுக்கு நூறு வீதம் அவன் சொன்னபடியே உண்மையாகவே நடந்திருப்பதைக்கண்டு திகைத்துப்போனேன்.

ஏப்ரல்1, என்பதை மறந்து..., 'சொல்வதை நம்பிவிடுவதால்' மற்றவர்கள் 'முட்டாள்' ஆவார்கள்.

ஏப்ரல்1, என்பதை நினைவில் வைத்திருந்து..., 'சொன்னதை நம்பாததால்' நான்'முட்டாள்' ஆகியிருந்தேன்.

அதிபர் சமுகமளிக்க முடியாதிருந்த அந்தச் சமயத்தில், உப அதிபரே அதிபராகக் கடமைபுரிந்தார். அவரும் அக்கல்லூரி மீது, நேசிப்பு மிகுந்த பழைய மாணவரே. கணிதத் துறையில் அவரது புலமையும் ஆற்றலும் மிகப் புகழ் வாய்ந்தவை. கல்லூரியின் கல்வித்தரத்தில் தொய்வு ஏற்பட்டுவிடக்கூடாது என அவர் மிகக் கரிசனை கொண்டு செயற்பட்டபோதே இவ்விதம் நேர்ந்துபோனது.

ஆனாலும், அவர் மிக விரைவிலேயே பெருமளவு குணமடைந்து விட்டமைக்கு, அவருக்குள்ள இயல்பான மனவுறுதியும், கலங்கிப்போகாத திடசித்தமும் மட்டுமன்றி, பாசமிக்க பாரியார், பிள்ளைகளது அன்பான அனுசரணையுமே காரணம் என்றே எனக்குத் தோன்றுகிறது.

## நினைவில் வந்தசில....

நான் ஓய்வுபெற்ற கல்லூரியிலும் நகைச்சுவை ரசனைமிக்க நண்பர்கள் அனேகர் இருந்தனர்.

தன் கையில் ஏந்திய ஆயுதத்தால் முருகப்பெருமானுக்கு ஏற்பட்ட பெயர் ஒன்று உள்ளதே! அதுவே அவரது பெயராகவும் இருந்தது. பெயர் தொடர்பில் இன்னொன்றையும் அவர் பற்றிக் குறிப்பிடலாம். அதாவது, முருகனைக் குறிக்கும் பெயரே அவரதுபெயராக இருக்க, முருகனின் நாயகியருள் ஒருவரின் பெயரே அவரது பாரியாரின் பெயராகவும் இருந்தது! இவ்வாசிரியர் 'ஜோக்'என்று வரும்போது அட்டகாசமாகச் சிரிப்பவரல்லராயினும், மிகநுட்பமான நகைச்சுவை ரசனையாளர் என்பதை நான் நன்கு புரிந்திருந்தேன்.அவரது ஜோக்குகளும் சாகாவரம் பெற்றவையே.

மற்றொருவர் -

'சேவகன்', என்பதிலுள்ள எழுத்து வடிவங்களை இடம்மாற்றிவிட்டால், அவரது ஊரார் அவரை அழைக்கும் பெயர் வந்துவிடும்.

வானொலிப் பெட்டியை முழுமையாய் உள்வாங்கிக் கொண்ட மூளையுள்ள இளைஞரான அவ்வாசிரியர், நாடகம், அரங்கு விஷயங்களிலும் நாட்டம் மிகுந்தவர். தான் நெறிப்படுத்தும் நாடகங்களில் பொருத்தமான இடங்களில் ஆங்காங்கே நகைச்சுவையை அள்ளித் தெளித்து மகிழ்விப்பார்.

தொலைக்கல்வி வகுப்பில், போதனாசிரியர் ஒருவரின் கேள்வியாகவும் ஆசிரிய மாணவர் ஒருவரின் பதிலாகவும், தான் ரசித்த ஒரு துணுக்கை எங்கள் சிலருக்கும் சொன்னார்.

*"நீங்கள் பாடசாலையில் என்ன செய்கிறீர்கள்?"*

*"படிப்பிக்'கிறேன்!"*

*"அதிபர் என்ன செய்கிறார்?"*

*"படிப்'பிப்பிக்'கிறார்!"*

*"கல்வியமைச்சர் என்ன செய்கிறார்?"*

*"படிப்'பிப்பிப்பிப்பிப்பிப்பிக்'கிறார்!"*

மற்றுமொரு நண்பர், பாடசாலை மரம் நடும்விழா பற்றிச் சொன்ன ஒரு துணுக்கு:-

*அன்று பாடசாலையில் மரம் நடும் விழா! மரம் நடுவதற்காக, பிரபல பிரமுகர் ஒருவர் அழைக்கப்பட்டிருந்தார். மரம்நடுவதற்குப் பொருத்தமான இடத்தை அதிபரும் ஆசிரியர்களுமாகத் தேடித்தேடிப் பார்த்தார்கள். அப்போது, அலுவலகப் பணியாளர்...*

*"இங்கே வாருங்கள். நான் இடம் காட்டுகிறேன்!" என்று அழைத்துச் சென்று, அந்த இடத்தைக் காட்டினார்.*

*"இந்த இடத்தில் அப்படி என்ன விசேஷம் இருக்கிறது?" என்றார் அதிபர்.*

*"இந்த இடந்தான் ஒவ்வொரு வருஷமும் வழக்கமாக மரம் நடுகிற இடம்!" என்றார் அந்தப் பணியாளர்.*

இதைச் சொன்னவர் 'பொன்னரசர்' என்ற நண்பர்.

## அன்று.....

அன்று என் பாடசாலை வாழ்வின் இறுதிநாள். மறுநாள் தொடக்கம் மிக வேறுபட்ட ஒரு வாழ்க்கைமுறை. ஒரு புதிய நாளாந்தநடைமுறை. அதனை ஏற்பதற்குத் தயார்நிலையில், அற்ப அளவிலான சந்தோஷம் ஒன்று நெஞ்சின் ஒரு மூலையில் உறைந்திருந்தது. இருந்தும், பாடசாலையிலிருந்து வெளியேறும் தருணம் அண்மிக்கையில் இனம்புரியாத ஒரு வேதனையும் ஏற்பட்டு, சற்றே வளர்ந்து நெஞ்சை அமுக்கவே செய்தது.

இறுதி நாளின்போது மற்றவர்களுக்கும் இப்படி இருந்திருக்குமா...? அல்லது எனக்கு மட்டுந்தானா....? புரியவில்லை!

என்றோ..... ஒருநாள் பருவம் அறியாப் பாலகனாய்ப் பாடசாலை சென்றிருப்பேன். இன்று.... என் பாடசாலை வாழ்க்கையை முழுமையாய் முடித்து வெளியேறுகிறேன் - என்று ஒருவித துயரத்தோடு நினைத்துக்கொண்டேன். எனது நேசிப்புக்குரிய அதிபர் மீளவந்து சேராததால், அவரிடம் கொஞ்சம் அளவளாவி விடைபெற்றுச் செல்ல இயலாதிருந்தமையும் நெஞ்சில் சுமையாய்க் கனத்தது.

மிக மகிழ்ச்சியானவனாகக் காட்டிக் கொண்டேனேயன்றி, இனம்புரியாத ஒரு துன்பம் இதயத்தைக் கப்பிக்கொண்டது.

ஓய்வுபெற்றபின் வருவாய் தேடும் தொழில்ரீதியில் இறங்கிவிடாமல், மனதுக்குகந்த இனிய பொழுதுபோக்குகளில் மகிழ்ச்சியாய்க் காலம் கழிய வேண்டும் என்று ஒரு தீர்மானம் ஏற்கனவே எப்போதோ மனதில் ஆழமாய் வேர்விட்டு உறுதிப்பட்டிருந்தது.

## ஆசிரியத்துவம்

ஆசிரியத்துவம் சிறப்பாக வாய்க்கப்பெற்ற ஆசிரியர் பலரை, கல்வியுலகு அவ்வப்போது சந்தித்தே வந்துள்ளது. அத்தகைய ஆசிரியர் ஒருவரிடம், யாராவது அவர் குறித்து அவரிடமே அபிப்பிராயம் கேட்டால், 'நான் நல்ல ஓர் ஆசிரியர்' என்றுதான் அவர் சொல்லுவார். 'யாராவது இதைத் தப்பாகப்புரிவார்களோ' என்ற தயக்கம் வந்து தடுத்தால் கூட, அவரின் கருத்து அதுவாகத்தான் இருக்கும். அவரது கூற்றுக் குறித்து மதிப்பீடு செய்யும், அல்லது தீர்ப்பளிக்கும், அல்லது கூற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தும் உரிமையானது, அந்த மாணவ சமுதாயத்துக்கு 'மட்டுமே' உரித்தானது. பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரங்களும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சரியான சான்றுகளாக அமைவதில்லை. (மாணவரின் சிறந்த பெறுபேற்றுக்கு உரிமைகோரும் உரித்து, பாடசாலைக்கு வெளியேயுள்ள ஆசிரியருக்குத்தான் உண்டு என்பதையும் சில சந்தர்ப்பங்களில் மிகச் சரியாகவே நான் கணித்ததுண்டு.) தவிரவும், மாணவரின் பரீட்சைப் பெறுபேறு, அல்லது பெற்ற புள்ளி போன்றவற்றை ஆசிரியர் ஒருவரின் ஆசிரியத்துவத்தை மதிப்பீடு செய்யும் அளவுகோல் அலகுகளாகக் கொள்வது சரியானதல்ல என்பதும் உண்மையே.

சிறந்த ஆசிரியர்கள் எனக் கருதக் கூடியவர்களின் பற்றாக்குறையால் கல்வியுலகில் வரட்சி ஏற்பட்டதாக வரலாறு கிடையாது. பாடத்துக்குப் பாடம், துறைக்குத்துறை வித்துவமும் ஆற்றலும் உள்ள ஆசிரியர்கள், காலத்துக்குக் காலம் தோன்றியே உள்ளார்கள்....!மேலும் மேலும் தோன்றவே செய்வர்....! ஐயமில்லை!

அந்த மாணவச் செல்வங்களின் பசுமையான மனங்களின் மீது மென்மையாய்க் கால்பதித்து நடந்தவர்கள் அவர்கள். மாணவ மனங்களை மெல்ல வருடி, தங்கள் முழுமையான ஆதிக்கத்தையும் வலிமையாய்ச் செலுத்தியவர்கள்;பாடத்தின் மூலமே, கற்பித்தலின் போதே அவர்களை வியக்க வைத்தவர்கள்; மெய்சிலிர்க்க வைத்தவர்கள்; ஆழமாய்ச் சிந்திக்க வைத்தவர்கள்; மகிழ்ச்சியில் ஆழ்த்தியவர்கள்; துன்பச்சுவை மூலம் துக்க மேலீட்டால் தம் கண்ணிலும் நீர் சுரக்க, மாணவக் கண்களில் கண்ணீர் வடியச் செய்தவர்கள்.

'இலக்கியம்' என்பது தனியான பாடமாய் இருந்ததுண்டு. இலக்கியத்தில் துன்பியல் பகுதிகளில், இவ்வாறு கண்ணீர்பெருக்குதல் பலமுறை நிகழ்ந்ததுண்டு. அதிலே அவர்கள் மனம் நிறைய மகிழ்ந்ததுண்டு.


அவர்கள் வகுப்பினுள் நுழையும் வேளை, அந்த மாணவமணிகளது முகங்களின் அதீத மலர்ச்சியும் ஆரவாரிப்பும் அவர்களுக்குச் சொன்னதுண்டு - 'நீங்கள் ஆசிரியர்தான்!' என்று.

இந்த ஆசிரியப் பெருந்தகைகள் அனுபவித்த மகிழ்வை, முழுமையாக இல்லாவிட்டாலும்,ஓரளவாவது அனுபவித்த ஆசிரியர்கள் பலருள் நானும் ஒருவனாவன் என்பது உண்மையான வார்த்தையாகும். இது மிகத் தற்பெருமையான வார்த்தையாகி, என்னை மலினப்படுத்திவிடுமோ என்ற அச்சமும் மனதில்எழவே செய்கிறது. என்னைப் பற்றிய என் கூற்றுக்கு, நீதிபதிகள் என் மாணவர்கள் மட்டுமே! சாட்சிகளும் அவர்களே!

**கா.அருளானந்தம்**
**(கீழ்க்கருணையூர்)**

எனது மாணவர்களின் பிள்ளைகள், வேறு கல்லூரிகளில், என்னைத் தமது பெற்றோர் மூலமோ, வேறு நபர் மூலமோ அறிந்து இனங்கண்டு, "ஸேர்....! எனது அப்பா உங்களிடம் படித்தவர்!", "என் அம்மா உங்களிடம் படித்தவர்!" என்று மகிழ்ந்து போய் என்னிடம் சொல்லும்போது, "நான் சாகாவரம் பெற்றவன்! உனது மகனுக்கோ மகளுக்கோகூட என்னால் படிப்பிக்க முடியும்!" என்று, என் மகிழ்ச்சியைத் 'தமாஷ்' போலத் தெரிவித்திருக்கின்றேன். (நான் கூறியது போல, பேரப்பிள்ளைக்கும் கற்பித்த மூத்த ஆசிரியர் சிலரை நான் அறிவேன்.)

என்னை உருவாக்கிய குருமூர்த்திகள் சிலரின் கவர்ச்சிமிக்க ஆளுமை, நீரோடை போன்று சுரக்கும் சொல்திறன், அளவு கடக்காது விவரிக்கும் வல்லபம் போன்றவற்றால் ஈர்க்கப்பட்டு, இலயித்து, அவற்றில் அற்ப அளவினையாவது சுவீகரித்து, என் பாணியில் அவற்றை விருத்தி செய்து வளர்த்திருந்தமையே, 'நானும் ஆசிரியனே' என்று கூறும் துணிவை எனக்குத்தந்தது.



ஆசிரியர் ஒருவர் வாழ்க்கையில் அடையக்கூடிய மனத்திருப்தியும் நிறைவும் முழுமையாக எனக்கு உண்டு என்று குறிப்பிடும் போதுதான், ஒரு நிறைவுத்தன்மையையும், பூரணத்துவத்தையும் என்னால் உணர முடிகிறது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்று பலவாகி ஓரா

மனித இனப்பெருக்கம் தடையின்றி நிகழுமேயானால் எண்ணிக்கை கட்டுக்கடங்காமற் போய்விடும்; பூமியில் வாழ்வதற்குப் போதிய இடவசதி இல்லாதுபோய்விடும்;போதிய உணவு கிடைக்காது; ஏன் பூமியே தாங்காது! இனப்பெருக்கத்திற்குக் குறைந்தது ஓராண்டு காலமாவது தேவைப்பட்டும் இத்தனை கஷ்டம். இதைக் குறைப்பதற்கு எத்தனை இயக்கங்கள். இனப்பெருக்கத்தைப்பற்றி விசேட அறிவுரை கூறவும், நடைமுறைகளைப் பற்றி எடுத்தியம்பவும் எத்தனை சங்கங்கள்! இருந்தும் சனப்பெருக்கம் குறைகின்றதா? எதிர்பார்ப்பதற்கு அதிகமாகத்தானே பெருகுகின்றது. இதை நினைக்கும் பொழுது,"எல்லாப்பயிர்களுக்கும் காலம்,போகம் வேண்டும். இயற்கை பொய்த்தால் பயிரும் அழிந்துவிடும். ஒரு "பயிருக்கு மாத்திரம் காலமென்றும் போகமென்றும் அவசியமில்லை. எப்பொழுதும் வளரும்; ஒருபோதும் பொய்க்காது. அதுதான் மனிதப் பயிர்" என்று எனது காஷ்மீர் நண்பன் ஒருவன் சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது.

மனித இனப்பெருக்கத்தையிட்டு இத்தனை கவலைப்படுகின்றோம். ஆனால் சில உயிரினங்களின் இனப்பெருக்கவேகத்தை எண்ணும் போது மூக்கின்மேல் விரல் வைக்கத்தான் தோன்றுகின்றது. அத்தனை வேகம்!

## இனம்பெருக்கும் வேகம்

வயிற்றுளைவுக்கு ஏதுவாகவுள்ள அமீபா மற்றும் பற்றீரியங்கள், வைரசுக்கள் போன்றவை மிகவும் விரைவாக இனப்பெருக்கம் நிகழ்த்தக் கூடியவை. சூழ்நிலைகள் தகுந்தனவாக உள்ள காலத்து சாதாரணமாக ஒருபற்றீரியம் 30 நிமிடங்களில் ஒரு முறை பிரியும். அதாவது ஒன்று இரண்டாகப் பிரிந்து இனப்பெருக்கம் செய்யும். இந்நிகழ்ச்சி பிளவுபடல் என அழைக்கப்படும். அப்படிப் பிரிந்து 1 மணித்தியாலத்தில் 4ஆகவும்; 1 1/2 மணித்தியாலங்களில் 8 ஆகவும்; 2மணித்தியாலங்களில் 16 ஆகவும் பெருகிக் கொண்டேபோகும். இப்படியே பத்து மணித்தியாலங்களில் 2,62,144ஆகவும்; 20 மணித்தியாலங்களில் 191,66,72,00,000ஆகவும் பெருகும். இதன் சராசரி எடை 80 மில்லிகிறாம்; 40 மணித்தியாலங்களில் இந்த பற்றீரியக் கூட்டத்தின் எடை 18641.6 தொன்னாக இருக்கும். நினைப்பதற்கே ஆச்சரியமாக இல்லையா? நம்பமுடியாதது போலத்தான் தோன்றுகின்றதல்லவா? ஆனால் இதுதான் உண்மை.


பற்றீரியங்கள் உருவத்தில் மிகவும் சிறியவை. நுணுக்குக் காட்டியின் உதவியின்றிப் பார்க்க முடியாது. வைரசு மிகவும் சிறியது. சாதாரண நுணுக்குக்காட்டியின் உதவி கொண்டு இவற்றைக் காணமுடியாது. இலத்திரன் நுணுக்குக்காட்டியின் உதவி கொண்டு 40000 முதல் 50000 மடங்கு பெருப்பித்தபின் இவை சிறு புள்ளிகள் போலத் தெரியும்.


ஓர் அமீபா பல கூறுகளாகவும் பிளக்கவல்லது (பல்கூற்றுப்பிளவு). அரை மணித்தியாலத்திற்கு ஒருமுறை இரண்டாகப் பிரிவதனால் (இரு கூற்றுப்பிளவு) மேற்கூறியவாறு எண்ணிக்கை பெருகுமேயானால், பலவாகப் பிரியும் போது எண்ணிக்கை எப்படிப்பெருகும் என்று நீங்களே சிந்தித்துப்பாருங்கள். வாந்திபேதி நோயை எமக்களிக்கும் கொலறா பற்றீரியம் மிக விரைவாக இனப்பெருக்கம் செய்யவல்லது. ஒரு பற்றீரியம் 30 நிமிடங்களில் கோடானுகோடி பற்றீரியங்களாகப் பெருகும். 30 மணித்தியாலங்களில் ஒரு பற்றீரியத்தின் சந்ததிகள் உலகை வளைத்து முறிவில்லாத ஒரு படையாக மூடக்கூடிய அளவுக்குப் பெருகிவிடும்.

## அமைப்பு


அமைப்பைப் பொறுத்தவரை பற்றீரியங்களில் சில கோளவடிவுள்ளவை; சில கோல் போன்றவை; சில சுருள் போன்றவை; சில காற்புள்ளி போன்றவை.

கோளவுருவுள்ளவை தனியன்களாகவோ, சோடிகளாகவோ, நால்கூற்றுத் தொகுதிகளாகவோ, எண்கூற்றுத் தொகுதிகளாகவோ, கூட்டங்களாகவோ, சங்கிலிகளாகவோ இருக்கும். கோலுருவானவையும் தனியன்களாகவோ, சங்கிலிகளாகவோ இருக்கும். மேற்படி இயல்புகளின் அடிப்படையில் பற்றீரியங்கள் பெயர் சூட்டப்பட்டுள்ளன. வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அமைப்புக்களைக் கொண்டும், இயல்புகளைக்கொண்டும் பற்றீரியங்கள் இனங்காணப்படும்.




பற்றீரியம், பொதுமைப்பாட்டிற்குரிய கலம். வலப்பக்கமாகவுள்ள அமைப்புக்கள் சில இனங்களில் மாத்திரம் காணப்படும். இலத்திரன் நுணுக்குக்காட்டிப் படம்.




ஈ-கோலை (E.COLI) பற்றீரியம். முதுகெலும்புள்ள விலங்குகளின் உணவுக் கால்வாயில் சாதாரணமாகக் காணப்படும் அழுக்ககற்றி.

வைரசுகள் பொதுவாக கோள அமைப்புள்ளவை; சில படிகம் போன்ற அமைப்புள்ளவை, பற்றீரியங்களைத் தாக்கும் பற்றீரியம் விழுங்கி வைரசு வாற்பேய் போன்ற வடிவமைப்புள்ளது. அமீபாக்கள் ஒழுங்கற்ற வடிவமுள்ளவை.

## இடப்பெயர்ச்சி

சில பற்றீரியங்கள் தாமாக இடம் பெயரக் கூடியனவன்று. அதாவது இயக்கமில்லாதவை (NON MOTILE).

பிசிர் அல்லது சவுக்கு முளைகளையுள்ள பற்றீரியங்கள் இடப்பெயர்ச்சி நிகழ்த்தவல்லவை.

வேறு சிலவோ மிகவும் விரைவாக இடம் பெயரக்கூடியவை. ஒரு விநாடியில் 100 மடங்கு தமது நீளத்தைக் கடக்கவல்ல பற்றீரியங்களுமுண்டு. மனிதனோடு ஒப்புநோக்கும்போது அவன் மணிக்கு 400மைல் வேகத்தில் அசைவதை இது ஒக்கும். கின்னஸ் சாதனையாளர் என்று இவற்றைக் கொள்ளலாமா?

---

## குகன்

---

வைரசுகள் இயக்கமற்றவை. அமீபாக்கள் அமீபாப் போலி அசைவைக்காட்டும்.

## ஏற்ற வெப்பம் (பற்றீரியங்களுக்கு)

கிருமிகளின் நல்வளர்ச்சிக்கு ஏற்ற வெப்பநிலை $68^0$ முதல் $77^0$ பரனைற்றும் $104^0$ முதல் $113^0$ பரனைற்றும் ஆகும். ஆகவே மனிதனின




தும் மற்றும் இளஞ்சூட்டுக் குருதி நிலையான ஏனைய விலங்குகளினதும் உடல் இவற்றின் வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றது. இந்த வகையைச் சேர்ந்த அநேக விலங்குகளின் வெப்பம் 96.8°F தொடக்கம் 104°F வரை இருக்கும். கிருமிகள் 175°F வெப்பத்தைத் தாங்கமாட்டா. சில 131°F முதல் 140°F வெப்பநிலை ஏற்படும்போது இறந்துவிடும். 212°F வெப்பநிலை ஏற்படும் போது சகல கிருமிகளும் அழிந்துவிடும்; வித்திகளாக வித்துப்பைகளுக்குள்ளே இருக்கும் கிருமிகளைத்தவிர. வித்திநிலையை அடைந்த கிருமிகளை, முக்கியமாக இந்த நிலையை அடைந்த பற்றீரியங்களை, அழிக்கவேண்டுமானால் கூடிய அமுக்க நிலையில் 248°F வெப்பநிலையில் 30 நிமிடங்கள் அல்லது மேலாக வைத்திருக்கவேண்டும்.

குறைந்த வெப்பநிலையி
ரூட்டுவதனால்) கிருமிகள
பற்றீரியங்கள் இறப்பதில்லை
கும் நிலையை அடையும்;
ஊடகத்தில் தொங்கிக்கொண்
வெப்பம் ஏற்படும்போது துயி
பாகத் தொழிற்பட முற்படும்.
-310°F தொடக்கம் -426°F கு
படிப்படியாக வெப்பத்தை அ
பார்த்தார்கள். அப்பொழுது அ
எழுவதைக் கண்டார்கள். ஆத
ஐஸ்கிறீம், ஐஸ்பழம், குளிர்ப
பொருள்களில் கிருமிகள் இ
விடக்கூடாது. இப்பொருள்க
அசுத்த நீர் பயன்படுத்தப்பட்
பாக இப்பொருள்களில் கிரு
(ஜூஸ் பிரியர்கள் கவனத்தி

### சூரிய ஒள
### ஒரு சிறந்த கிரும

நேரடியாக இல்லாது பர
கிடைக்கும் சூரியஒளி கிருமி
தில்லை. ஆனால் கிருமிகள
ஒளி நேரடியாகப்படுமேயாயி
மணித்தியாலங்களில் (இரண்
கூடிய மணிநேரம்) இறந்துவி
எடுக்கும் நேரம் கிருமிகளின்
தாங்கும் சக்தியைப் பொறுத்
ஒரு சிறந்த கிருமிநாசினி. நாசி
படுபவை ஒளியும், வெப்பமு


### ஆபத்து

எமக்குப
தாவரங்களு
டங்கள் ஏற்
கிருமிகள்
தால் அவற்
முறையும் இ
முக்கியம்
நாம் அறிய
- இருக்கின்
கள் வருவ
களை ஏற்ப
களே காரணம். கால்நடைகளி
நோயை ஏற்படுத்தும் பசிலச
எமக்கு குஷ்டரோகத்தைத் தரு
பேதியைத் தரும் கொலறா பசி
குக் காரணமாகவுள்ள ரெற்றா
லிசு (பறங்கிநோய்) நோய்க்கு
வுள்ள பசிலசு முதலியன நோ
தும் சிலபற்றீரியங்களின் உ

நோய்களை ஏற்படுத்தும்
களும் உண்டு. இவற்றுள் வயி
காரணமாகவுள்ள என்ரமீபா;
வசிப்பவர்களுக்கு ஏற்படக்கூடி
நகானாகாய்ச்சல், நித்திரை வ
நோய்களை ஏற்படுத்தும் தி
மலேரியாக்காய்ச்சலை ஏற்படுத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ாயிரமாகும் விந்தை




லையில் (அதாவது குளி
ருமிகள், முக்கியமாக
தில்லை. ஆனால் தொங்
டயும்; அதாவது அவை
க்கொண்டிருக்கும். உகந்த
து துயில்நீத்து சுறுசுறுப்
ற்படும். பற்றீரியங்களை
26°F குளிரவைத்துப் பின்
தை அதிகரிக்கச் செய்து
முது அவை உயிர்பெற்று
ள். ஆதலால் பனிக்கட்டி,
குளிர்பானங்கள் போன்ற
கள் இரா என்று ஏமாந்து
பாருள்கள் செய்வதற்கு
ந்தப்பட்டிருந்தால் கண்டிப்
ல் கிருமிகள் இருக்கும்.
வனத்திற் கொள்க)

**ய ஒளி**
**ர கிருமிநாசினி**


து பரவல் காரணமாகக்
ரீ கிருமிகளைக் கொல்வ
கிருமிகளின் மேல் சூரிய
மேயாயின் அவை ஒருசில
(இரண்டு அல்லது சிறிது
இறந்துவிடும். இறப்பதற்கு
மிகளின் சூரிய ஒளியைத்
பொறுத்தது. சூரிய ஒளி
சினி. நாசினியாகத் தொழிற்
வெப்பமும்.

**பத்து**

எமக்கும், விலங்குகள்
வரங்களுக்கும் பல கஷ்
கள் ஏற்படுவதற்கு சில
நுமிகள் காரணமாயிருப்ப
ல் அவற்றின் வாழ்க்கை
றையும் இனப்பெருக்கமும்
க்கியம் வாய்ந்ததாக -
ம் அறிய வேண்டியதாக
இருக்கின்றது. பல நோய்
ர் வருவதற்கு அந்நோய்
ளை ஏற்படுத்தும் கிருமி
நடைகளில் அந்திறாக்ஸ்
பசிலசு அந்திறாக்ஸ்,
தைத் தரும் பசிலி, வாந்தி
லறா பசிலி, ஏற்பு நோய்க்
ரெற்றானஸ் பசிலி, சிபி
நோய்க்குக் காரணமாக
யன நோய்களை ஏற்படுத்
ளின் உதாரணம்.
டுத்தும் வேறு பல கிருமி
றுள் வயிற்றுளைவுக்குக்
ன்ரமீபா; ஆபிரிக்காவில்
படக்கூடிய நோய்களான
ந்திரை வருத்தம் போன்ற
ந்தும் திரிப்பன சோமா;
ஏற்படுத்தும் பிளாஸ்மோ

டியம் போன்றவை ஆதிவிலங்கினத் (PROTOZOA) தொகுப்புக்குச் சேர்மதியான சில ஒரு கலத்தாலான விலங்குகளாகும்.


விசர்நாய்கடித்தால் ஏற்படும் நோய்; அம்மனின் நோய்கள் எனக் கருதப்படும் கூகைக்கட்டு, சின்னமுத்து, கொப்பளிப்பான், பெரியம்மை போன்றவை; பிடிசுரம், அண்மையில் புகழ்பெற்ற AIDS போன்ற நோய்களை ஏற்படுத்துபவை வைரசுக்களாகும். வைரசுக்கள் தாவரங்களையும், தானியங்கள், பழங்களையும் தாக்கி அழிப்பதுண்டு. வைரசுக்களைத் தவிர ஏனையவற்றிற்கு மாற்றுமருந்துகள் உண்டு. அதாவது பெரும்பாலும் பயன்படுத்தப்படும் உயிரெதிரிகள் (ANTIBIOTICS) வைரசுக்களைப் பெரும்பாலும் ஒன்றும் செய்யாது.




**வைக்கோல் பசிலசு** (HAYBACILLUS). **வைக்கோலை அவித்து அடைகாத்தால் இது தோன்றும்.**

## உபயோகம்

கிருமிகள், முக்கியமாகப் பற்றீரியங்கள் எல்லாம் ஆபத்தானவையன்று. உபயோகமான பல பற்றீரியங்களுமுண்டு. எமது நாளாந்த வாழ்க்கையில் பல வழிகளில் இவற்றின் உதவியை நாடுகிறோம். பாலை உறைய வைப்பதற்கு ஒருவகைப் பசிலியின் உதவியை நாடவேண்டியிருக்கிறது.




**அமீபா** (AMOEBA) **வயிற்றுளைவுக்குக் காரணமானது. என்ரமீபா ஹிஸ்ரொலிற்றிக்கா** (ENTAMOEBA HISTOLYTICA), **குடலில் அழுக்ககற்றி என்ரமீபா கோலை** (ENTAMOEBA COLI), **வாய்க்குழியிலுள்ளது என்ரமீபா ஜின்ஜிவாலிஸ்** (ENTAMOEBA GINGIVALIS).


வெண்ணெய் தயாரிப்பதற்கு, ஊறுகாய்கள் தயாரிப்பதற்குப் பற்றீரியங்கள் தேவை. கால்நடைகளில் செலுலோசுச்சமிபாட்டுக்கு உதவுபவை பற்றீரியங்களே. மேற்படி பற்றீரியங்களின் தொழிற்பாட்டிற்கு உதவும் வகையிலேயே கால்நடைகள் உணவைமீட்டு (இரைமீட்டு) நன்றாக அரைத்துக்கொடுக்கின்றன. இரைமீட்காத தாவரஉண்ணிகள் உணவை நன்றாக அரைத்த பின்பே விழுங்கும். கறையான்களில் செலுலோசுச் சமிபாட்டுக்கு உதவுபவை அவற்றின் குடலில் வாழும் திறைக்கோடெஸ்மா (TRICHODESMA) என்ற புரற்றசோவன் விலங்கினங்கள் ஆகும். அங்கிகளின் உணவுக் கால்வாய் சுத்தமாக இருப்பதற்கும் சில பற்றீரியங்களும் சில விலங்கினங்களுமே காரணம். இவை ஒன்றிய வாழிகளாக உணவுக் கால்வாயில் வாழ்ந்து அழுக்குகளை உண

**அங்கிகள் பல்விதம்**
**ஒவ்வொன்றும் ஒருவிதம்**

வாக்கொண்டு அழுக்ககற்றுகின்றன. இத்தகைய அங்கிகள் வாய்க்குழியிலும், பற்களுக்கிடையேயும் உண்டு.

ரொட்டிமா, அப்பம், தோசைமா போன்றவற்றைப் புளிக்கவைப்பதற்கும் பற்றீரியங்கள் தேவைப்படுகின்றன. மதுவமும் உதவும் (மதுவம் ஒரு பங்கசு). மதுவத்தின் உதவியைப் பெறுவதற்காகத்தான் ரொட்டி மாவிற்கு மதுவத்தைச் (BREWER'S YEAST - வடிப்போனொதியை) சேர்ப்பார்கள். புளித்த கள்ளு, புளித்த சீனித்தண்ணீர் முதலியவற்றிலும் இருப்பது மதுவந்தான். சாதாரணமாக மாவைப்புளிக்க வைப்பதற்கு கள்ளும் பயன்படுத்தப்படுகின்றதல்லவா? சக்கறோமை சிசு எலிப்சோயிடிஸ் என்ற நொதி (மதுவம் - YEAST) வைன் (WINE) தயாரிப்பதற்கும், சக்கனோமைசிக செறிவீசியே என்ற நொதி பீர் (BEER) தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. (இவையெல்லாம் மதுவத்தின் இனங்கள், இரண்டாவது பெயர் இனத்தைக் குறிக்கின்றது.) புளித்தல் அல்லது நொதித்தல் நிகழும்போது மதுசாரமும் காபனீரொட்சைட்டும் தோன்றும். வாயுவே மாவைப் பொங்கவைப்பதுடன் பல காரத்தை நுண்துளையுள்ளதாக்கி மெதுமையாக்குகின்றது. புளித்த கள்ளு வெறிப்பதற்கு மதுசாரம் காரணம்; நுரைப்பதற்கு காபனீரொட்சைட்டு காரணம் - வாயு குமிழ் குமிழாக வெளியேறுவதே காரணம். பழஞ்சோற்றிலும் மதுசாரம் உண்டு. (இன்றைய சந்ததியினருக்கு நீர் ஊற்றிய பழஞ்சோறு என்றால் என்ன என்பது தெரியாமலிருக்கலாம்?) கள்ளிலிருந்து மதுசாரத்தை (சாராயம்) வடித்தெடுக்கலாம். (காய்ச்சி வடிப்பதன் மூலம் - DISTILLATION) பழச்சாற்றைப் புளிக்க வைத்தும் மது தயாரிக்கலாம், சர்க்கரை, சீனிப்பாணியிலிருந்தும் தயாரிக்கலாம், முளைக்கும் தானியங்களைப் புளிக்கவைத்தும் தயாரிக்கலாம். (குடிசைத் தொழிலுக்கு ஏதோ இலக்கணம் வரைவதாக எண்ணிவிடவேண்டாம்).

நீர்நிலைகளில் சிறப்பாக ஆறுகளில், நீர் தன்னைத்தானே சுத்தம் செய்துகொள்ளும்




என்று கருதப்படுகின்றது. இதற்குக் காரணம் நீரிலுள்ள அழுக்ககற்றிகளும் வைரசுகளும். வைரசுகளில் சிலஇனங்கள் பற்றீரியாக்களை அழிக்கும், இவை பற்றீரியம் விழுங்கிகள் (BACTERIOPHAGE) என அழைக்கப்படும். இதனால்தான் போலும் ஆறுகளை சிறப்பாக கங்கையை புனிதமானவை என்று முன்னோர் கள் [illegible] நாட்டில் லோட்ஸ் (LORDES) என்ற இடத்தில் உள்ள மாதா கோவிலில் உள்ள நீரூற்றில் உள்ள நீர் பிணி தீர்க்கும் தகைமையுடையது என்ற நம்பிக்கை உண்டு. பலருக்கு தீராப்பிணிகள் தீர்ந்தும் உள்ளன. அந்நீரை ஆய்வு செய்து பார்த்தபோது அதில் பல இன பற்றீரியங்களும் மற்றும் நுண்ணங்கிகளும் கனிமங்களும் இருப்பது புலப்பட்டது. நோய்களைத் தீர்ப்பதற்குக் காரணமானவை இவைதான். அநேக மருந்துப் பொருள்கள் (DRUGS) உயிரெதிரிகள் (ANTI BIOTICS) நுண்ணங்கிகளிலிருந்து பெறப்படுபவையே என்பது குறிப்பிடத்தக்கது.

தாவரங்கள் இருந்தால்தான் விலங்குகளும் இருக்கமுடியும். காரணம் - எல்லா விலங்குகளும் தமது உணவுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாவரங்களையே நம்பியிருக்கின்றன. தாவரங்களோ தமக்குத் தேவையான உணவைத்தாமே தயாரித்துக் கொள்கின்றன. இத்தாவரங்களின் வாழ்க்கைக்கு நைதரேற்று உப்புக்கள் அவசியம். இந்த உப்புக்களைத் தாவரங்கள் நிலத்திலிருந்து நீருடன் உறிஞ்சிப் பெறுகின்றன. அதனால் இந்த உப்புக்கள் நிலத்தில் இருக்க வேண்டும். நிலத்தில் இந்த உப்புக்கள் இருப்பதற்குக் காரணமாக இருப்பது பலவகை பற்றீரியங்களே. இந்த நைதரேற்றம் செய்யும் பற்றீரியங்களுக்கு உதாரணமாகச் சில; சீடோமோனஸ், கிளொஸ்ரிடியம், அகோபக்ரர், றைசோபியம். இயற்கையில் பலவகை உயிரினங்களின் வாழ்க்கை ஒன்றோடுஒன்று எப்படிப் பின்னப்பட்டிருக்கின்றது என்பதைக் கவனியுங்கள்.

எரிமலைகள் இல்லாத இடத்திலும் நிலத்தில் கந்தகம் இருப்பதற்குக் காரணமாகவுள்ளது கந்தகபற்றீரியம் ஆகும். இரும்புப் பொருள் நிலத்தில் தோன்றுவதற்குக் காரணமாகவுள்ளவை இரும்பு பற்றீரியங்கள். இவற்றின் மூலம் எமக்கு கந்தகமும் இரும்பும் கிடைப்பதால் இவற்றின் பயன் வெள்ளிடைமலை.

உயிரினங்கள் இறந்தபின் அவற்றின் உடல்கள் அழியாமல், அகலாமல் இருப்பதாக வைத்துக்கொள்வோம். இப்படியாக ஒரு சில ஆண்டுகளுக்கு நிகழ்ந்தாலும் போதும் உலகத்தில் மிகுந்த இடநெருக்கடி ஏற்பட்டுவிடும். புதிதாகத் தோன்றும் உயிரினங்கள் வாழுவதற்கு இடமில்லாமல் போய்விடும். இக்கஷ்டம் ஏற்படா வண்ணம் இயற்கையில் உயிரினங்கள் இறந்தபின் அவற்றின் உடல்கள் பிரிந்தழிந்து மண்ணுடன் கலந்து விடுகின்றன. பொருள்கள் அழுகிப் பிரிந்தழிந்து போவதற்கு ஏதுவாக உள்ளவை சில பற்றீரியங்களும், அழுகல்வளரிகளும், பூஞ்சணங்களுமேயாகும். இவைகள் இல்லாது போயின் பொருள்கள் அழுகாது கழிவுப்பொருள்கள் தேங்க ஆரம்பிக்கும். உயிரினங்கள் வாழ்வதற்கு இடமில்லாது போய்விடும். (பட்டினங்களில் வாளிக் கக்கூசுகள் இருந்தகாலத்தில் சுத்திகரிப்பாளர் ஒருநாள் வேலைநிறுத்தம் செய்தாலும் போதும். பட்டினமே நாறும். இயற்கையான மேற்படி சுத்திகரிப்பாளர்-ஆண்டாண்டு காலமாக இத்தொழில்களில் ஈடுபட்டுள்ளோர்-வேலை நிறுத்தம் செய்தால் என்னாகும் என்பதைச் சிந்தனை செய்து பாருங்கள்.உரவகைகள், பீடைநாசினிகள்,மற்றும் காரணிகளாலசூழல்மாசடைதல் இவற்றின் தொழிற்பாட்டைப பெரிதும் பாதிக்கும் என்பதைக் கவனத்திற் கொண்டால்நல்லது) நுண்ணங்கிகள என்று எண்ணும் போது எல்லாமே ஆபத்தானவை என்று எண்ணிவிடக்கூடாது. ஆபத்தானவை ஒரு சில இனங்களே; நன்மை பயப்பவைதான் அதிகம்.மேலும் தேவையற்றவை என்று எந்த அங்கியையும் கருதிவிட முடியாது.. இயற்கைத் தேர்வு வாயிலாகவே அவைதோன்றியுள்ளன. ஒவ்வொன்றுக்கும் இயற்கையில் ஏதாவதொரு பங்கு இருக்கும் (நோய் வாயிலாகவேனும் மனிதத் தொகையையும் கட்டுப்படுத்த வேண்டும் தானே!!) .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிமூலமே!

தீபாவளிக்கு இன்னும் இரண்டே இரண்டு நாள்கள் இருக்கின்றன. காலை வேளை....

யாரோ இரண்டுபேர் கேற்றடியில் வந்து நிற்கிறார்கள். கிணற்றடிக்கு முகம்கழுவப் போய்க்கொண்டிருந்த அருமைத்துரையர் - சுருக்கமாக துரையர் - இவர்களைக் கண்டவுடன் இடையிலே திரும்பி வருகிறார்.

"ஆ.... தம்பி வாங்கோ, அவன் சின்னத்தம்பி சொன்னவனே, அது குட்டி 'சின்னன்தான் எண்டாலும்.... எதுக்கும் வந்து பாருங்கோவன்"

துரையர் முன்னால் நடக்க,இரண்டு பேரும் பின்னால் நடக்கிறார்கள்.

* * *

நான் பஞ்சியோடு படுத்துக் கிடக்கிறேன்.

துரையர் கொண்டுவந்து போட்டிருந்த தென்னோலையை தம்பி சப்பிக் கொண்டிருக்கிறான்.

பாவம், அவன் நல்லாச் சாப்பிட வேணும். அவன் இப்பவெல்லாம் முந்தி மாதிரி சாப்பிடுவதில்லை. முந்தியெல்லாம் நாங்கள் போட்டிபோட்டுக் கொண்டு சாப்பிடுவோம். துரையரின் மூத்த பெட்டை நல்லவள். அடிக்கடி ஏதாவது கொண்டுவந்து வைப்பாள்.

இப்ப துரையருக்கு நேரமில்லையோ, என்னவோ?

ஆனாலும் இப்ப தம்பிக்கு அடிக்கடி தவிடு, புண்ணாக்கெண்டு வைக்கிறார். இருவருக்கும் நடுவில் கொண்டு வந்து வைத்தாலும், நான் தம்பியோடு சண்டைபோட்டா சாப்பிடப்போகிறேன்?

போனவருசம் யாரோ ஒருத்தன் வந்து, கதறக்கதற அம்மாவைக் கள வாடிக் கொண்டு போனான். அன்றையில இருந்து தம்பிக்கு அக்கா மட்டுமா? அம்மாவும் நான்தானே!

உஷ்!

யாரோ வருகிறார்களே...

முன்னால் வருவது துரையர். பின்னால் வரும் இரண்டுபேரும் யார்? வந்தவர்கள்,என் தம்பியைப் பார்த்துப்பார்த்து ஏதோ பேசுகிறார்களே...

எனக்கு எதுவுமே புரியவில்லை. அந்த இரண்டுபேரையும் பார்க்கவே மிகவும் பயங்கரமாக இருக்கிறது. அவர்களது பார்வைகளும் பேசுகின்ற பாவனைகளும்..... எனக்குள் ஒரு விதமான பீதியை உண்டாக்குகின்றது. ஒரு வேளை... ஒருவேளை... அன்றொரு நாள் என் அம்மா சொன்னாளே... அவள் சொல்லும் போதே நான் வீரிட்டுக்கத்தினேனே.....அந்தத் தீபாவளி....?

அது வந்துவிட்டதா?

* * *


"தம்பியவ, எனக்கு இதுகளில அனுபவமில்ல. என்னமோ கஷ்ரப்பட்டு பிள்ளை மாதிரி(?) வளர்த்தோம். பார்த்து நாலுபேரிட்ட பேசிக்கீசி காசத் தாங்கோவன்" துரையர் சுருக்கமாய் முடிக்கிறார்.

"எப்படியும் நாலுக்குக் கிட்டத்தான் வரும். எதுக்கும் நாளைக்கு வாறம்"

விடைபெற்றுக்கொண்டு இரண்டு பேரும் சைக்கிளில் ஏறியபோது ஏதோ மறந்தவராக துரையர் ஓடி வருகிறார்.

"தம்பி... நான் பொதுவா கடைகளில ஒண்டும் வாங்றதில்ல. எனக்கும் ஒரு பங்கு வையுங்கோவன்...."

அவர்கள் விடை பெறுகிறார்கள்.



துரையர் வீட்டினுள் நுழைகிறார். அவரது சம்சாரம் அவலமாகக் கத்துகிறாள். "நீங்களும் ஒரு மனிசனே? உங்கட வாய் எதைத்தான் தின்னாது? சிறுத்தொண்டன் மாதிரி.... தின்னவும் கொடுத்து நீங்களும் தின்னப்போறியளே, சீ...."

"எடி விசரி வளர்த்த மரத்தில வெண்டிக்காய் காச்சா தின்றதில்லையே? ஒருநாள் கையெடுத்து ஆடுகளுக்கு ஏதாவது போட்டிருக்க மாட்டாய். அதுக்க வக்காளத்துக்கு வாங்கிற..." துரையர் பதிலுக்கு உச்சஸ்தாயியில் கத்துகிறார்.

சம்சாரம் மௌனம் காத்தாள். நிலைமை தொடர்ந்தால், வீடு நாடக மேடைபோல ஆகிவிடும். விடுப்புப் பார்க்க ஆக்களுக்கா குறைச்சல்?

* * *

நாளைதான் தீபாவளி! எனக்கு வியர்வை உடம்பெல்லாம் ஊற்றெடுக்கின்றது. "தீபாவளி..." ஒரு பூனைக்கு விளையாட்டு, எத்தனை சுண்டெலிகளுக்கு சீவன் போகிறது!

என் தம்பியை பார்க்கிறேன்.

ஏதுமறியாத என் தம்பி அந்த மொட்டக்கறுப்பன் கஞ்சியை உறிஞ்சுவதிலேயே கவனமாக இருக்கிறான். அவனிடம் தீபாவளி பற்றிச் சொல்வோமா? வேண்டாமே.பாவம் ரொம்பவும் பயந்துவிடுவான். அவன் "அக்கா" என்று அழுதால் என்னால் தாங்கவே முடியாது.

ஒரு தரம் அம்மா சொன்ன அந்தத் "தீபாவளி"யை நினைத்துப் பார்க்கிறேன். எனக்கு முதல் அம்மா ஓர் அண்ணாவை ஈன்றாளாம். அது தான் அவளுடைய முதல் பிரசவமாம்.

எல்லா மனிசரும் ஏதோ தீபாவளி, தீபாவளி என்று அமர்க்களப்பட்டினமாம். ஊரெல்லாம் ஒரே கொண்டாட்டமாம்.

விடிந்தால் தீபாவளியாம்! அப்படியிருக்க அந்தப் பயங்கரமான இரவு வந்ததாம். அண்ணாவ நாலு மனிசர் வந்து புடிச்சினமாம். அந்த நாலு மூதேவிகளையும் வேல மினக்கெட்டு தாய்மார் பெற்றார்களே என்று அம்மா கொஞ்சநேரம அழுதா. பிறகுதொடர்ந்து சொன்னா. ஒண்டு அண்ணாவின்ரை காலைப்பிடிச்சிச்சாம், இன்னொண்டு தலையப் பிடிச்சிச்சாம். ஒண்டு அரிவாளால ஓங்கி அண்ணாவின் கழுத்தை வெட்டிச்சாம். அண்ணா செத்துப்போனானாம்.

சொல்லிவிட்டு அம்மா ஓங்கி அழுதது ஞாபகம் இருக்கிறது.

தீபாவளி என்றால் இப்படித்தான் என்று அம்மா சொன்னாளே.... என்னையுமறியாமல் என் உடம்பு வெடவெடுத்தது!

கண்ணுக்குத் தெரிகின்ற வீதியைப் பார்க்கிறேன். சனமெல்லாம் அமர்க்களப்பட்டுக்கொண்டிருப்பது கண்ணுக்குத் தெரிகிறது. தம்பியை இப்போது உற்றுப்பார்க்கிறேன்.

அவன் அழுகிறானா? இல்லை நான்தான் அழுகிறேன்! மெதுவாக இருட்டிக்கொண்டு வருகிறது.

"தம்பி"

என்னால் அழைக்கமுடியவில்லை, அழத்தான் முடிகிறது.

'ஏனக்கா அழுகிறாய்? எல்லோரும் சந்தோசமாய் இருக்க நீ ஏனக்கா அழுகிறாய்' என்று தம்பி கேட்டால் என்ன பதிலைக் கூற? உன் உயிரின் மீதுதான் அவர்கள் ஊஞ்சல் கட்டப் போகிறார்கள் என்று சொல்லவா?

நான் எனக்குள் கதறுகிறேன்.

கன்னங்களின் வழியே கண்ணீரே அருவியாகிறது!

தம்பி சின்னக்குட்டியாய் இருக்கும்போது காலில் கல்லடித்து அவனுக்கு மருந்து பருக்கியதும் அவன் முரண்டு பிடித்ததும் நினைவுக்கு வந்தது.

"நாளைக்கு ஏதோ கொண்டாட்டமாம், உனக்கு மருந்து பருக்குவினமாம், குடிக்காட்டி அடிப்பினமாம்"

'நாளைக்கு உன் தசையைத்தான் உன்னை வளர்த்தவர்களே ருசிக்கப் போகிறார்கள்! என்று எப்படிச் சொல்வேன்?

அப்படிச் சொல்லுமளவுக்கு ஆண்டவன் எனக்கு தைரியம் தரவில்லையே?

மருந்து என்றாலே நடுங்கும் தம்பி, மரணம் என்றால் தாங்குவானா?

"தம்பி, நீ எங்கேயாவது அறுத்துக்கொண்டு ஓடிடடா, தயவு செய்து ஓடிடடா"

தம்பியைத் தொடர்ந்து வற்புறுத்தினேன்.

அவன் ஏங்கி ஏங்கிச் சம்மதித்தான்.

அந்த இரவுப் பொழுதில், பல் இடுக்கில் இரத்தம் வழிய தம்பியின் கட்டுக் கயிற்றை அறுத்துத் துண்டாக்கினேன்.

"தம்பி, ஓடடா ஓடு"...

கடாவாகப் பிறந்த பாவம் உன்னை துரத்துகிறதே. ஓடு... மனதுக்குள் நினைத்துக் கொண்டு அவனை விரட்டினேன் அந்த அந்தகாரமான இருளில் தம்பி எங்கேயோ மறைந்து போனான். இந்த ஐந்தறிவு ஜீவன் மட்டும் தனிமையில் இருந்து அழுதுகொண்டிருக்கிறது.

இன்று. இதோ... விடிகிறது!

தீபாவளி இன்றுதான்!

ஆயிரக்கணக்கான ஆடுகளினதும் கோழிகளினதும் அவலக்குரல்கள் ஆதி மூலத்திற்கு கேட்குமா?

* * *

துரையர் வீட்டில் ஏதோ இசக்குப் பிசகு! ஆடொன்றை யாரோ இரவிரவா அவிழ்த்துக்கொண்டு போட்டினமாம். ஐந்தாறு அயலவர்கள் கூடி திட்டித் தீர்த்தார்கள்.

"நாடெல்லாம் நாறிக்கிடக்கு, இண்டைக்கு ஆட்டக்காணேல. இனி ஆக்களும் காணாமப் போவினம்" யாரோ ஒரு கிழவன் புறுபுறுக்கிறான்.

"யாழ்ப்பாணத்து வெள்ளைவான் ஆடு,மாடும் பிடிக்குறதோ?" ஒரு பெடியன் கேட்டான்.

துரையரோ இடிந்து போய் உட்கார்ந்து விட்டார்!

அன்றைக்கு வந்துபோன இரண்டு பேரும் இப்போது சைக்கிளில் வந்து கேற்றடியில் நிற்கிறார்கள்.

* * *

எனக்கு ஒரு நிம்மதி.

என் தம்பியின் தலை தப்பியதே... அப்பாடா!

ஒரு மாதிரியாக துரையரும் சிரத்தையாக தேடாமல் விட்டுவிட்டார்.

ஆங்...

அங்கே......

துரையரும் அந்த இரண்டு பேர்களும் வருகிறார்கள்! தம்பியைத் தேடப் போகினமோ.....?

அவர்கள் என்னருகிலே வந்து ஏதோ தமக்குள் பேசிக்கொள்கிறார்கள்.

**- சி.சோ.பதந்தன் -**

"சரி துரையண்ணை, நாங்கள் ஓடரெல்லாம் எடுத்தாச்சு. எங்களுக்கு மறிக்குட்டியெண்டாலும்....",ஒருவன் சொல்கிறான். துரையர் யோசிக்கிறார்.

கடாஆடு வெட்டுகிற இடத்தில் மறிஆடு வெட்டினால் எத்தனை கிலோ பாவம் கூடும்?

துரையரின் கண்களில் நாலாயிரம் மின்னல் அடிக்கிறது!

"மறி கடா.... எல்லாம் சாப்பிட்டா குறைஞ்சே போகும்? நாங்கள் எல்லாமே கூலந்தான்... ஆனா அண்ண விஷயத்தைக் கசிய விடாதையுங்கோ."

எல்லாம் பேசி முடிந்தாயிற்று.

"இதெல்லாம் உனக்கெப்படித் தெரியும். உனக்குத்தான் மனிதபாஷையே புரியாதே" என்கிறீர்களா? எனக்கு எல்லாம் புரிகிறது! எனக்கு எல்லாமே புரிகிறது!!

நான்.... விலைப்பட்டுப் போனேன்!

என்னை ஒரு மறைவான இடத்திற்கு இழுத்துச் செல்கிறார்கள். "ஆதி மூலமே!" என அலறுகிறேன். ஆண்டவனுக்குக் கேட்குமா? ஒருவன் என் கால்களைப் பிடிக்கிறான். இன்னொருவன் என் தலையைப் பிடிக்கிறான். ஒருவன் என் கழுத்துக்கு நேர் மேலே அரிவாளை ஓங்குகிறான்! எனக்கு இப்போது எல்லாமே புரிந்துவிட்டது.

ஆக எனக்கு ஒன்றுமட்டும் புரியவில்லை....

என்னைச்சுற்றி இங்கே மூன்று நரகாசுரர்கள் நிற்கிறார்களே. இப்பொழுது அந்தப்பகவான் எங்கே? அவனுக்கு இதெல்லாம் தெரியாதா?

---

# ஐந்து சதம்

அவசரத்துடனும் பரபரப்புடனும் காலை வேளை இந்த நகரத்துள் புகுவது போல் எனக்குப்பட்டது. எங்கள் ஊரில் எங்கள் வீட்டில் உதய காலம் எப்படித் தோன்றும்?

பட்டென்று 1995 மனதிலே பட்டுவிட, அது துடித்துத் துவண்டது.

எங்கேயிருந்தாலென்ன? இதே இயந்திரத்தனமான அவசர வாழ்க்கை தானே! - மனம் அலுத்துக்கொண்டது.

பணிமனைக்கு சரியான நேரத்திற்குப்போக வேண்டுமென்ற அவசரத்துடன் வீட்டிலிருந்து புறப்படுகிறேன்.

ஐந்தாறு அடிகள் வைத்திருப்பேன். பளிச்சென்று அந்த நாணயம் காலடியில் தெரிகிறது. வெள்ளி வண்ணத்தில் சதுரமாகத் தான் ஐந்துசத நாணயமென இனங்காட்டிக்கொண்டு கிடக்கிறது.

நீண்டகாலமாக அது நாட்டில் கண்ணில்படாது போயிருந்தாலும், என் நினைவில் அது மறக்க முடியாததாக ஒரு பதிவை ஏற்படுத்தியிருந்ததால் முதன்முதலிலே கண்ணிற்பட்டதுமே அதனை நான் அடையாளம் கண்டு கொண்டேன்.

எத்தனை நாட்களாக இது இங்கே கிடக்கிறது?

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

சுமார் இரண்டு வாரங்கள் இருக்குமென மனம் கணக்கிட்டது. ஒவ்வொரு நாளும் நான் இந்த வழியால் போகும் போது கண்ணில்படுகிறது. நானும் கண்டும் காணாததுபோல் போய் வந்து கொண்டிருக்கிறேன். இப்பொழுது கூட அப்படித்தான். பணியகத்திற்குப் போக வேண்டுமென்று அவசரத்தில் அதைக் கடந்து நடந்துகொண்டிருக்கின்றேன்.

எத்தனைபேர் போய் வரும் வழி? ஒருவர்கூட அதை எடுக்கவில்லையே!

சீ! எப்பொழுதும் மற்றவர்களைப் பற்றியே ஏன் நினைக்கவேண்டும்? என்னையே எடுத்துக்கொள்வோமே. இது ஒரு இருபத்தைந்து சதமாகவேனும் இருந்திருந்தால் என்ன செய்திருப்பேன்?

பட்டென்று பதில்கூற மனம் தயங்கியது. தயங்கியதா? வெட்கப்பட்டதா?

எங்களை நாங்களே இப்படி ஆராயப்புறப்பட்டால் நிச்சயமாக உண்மையான பதிலைக் கூற நாங்களே தயங்குவோம். அல்லது பெரும்பாலும் தவறான ஒரு மதிப்பீட்டை வைத்துக் கொண்டு பொய்யொன்றைக்கூறுவோம்.

நானென்ன தெய்வமா? அல்லது மகாத்மாவா? மனிதவர்க்கந்தானே!

முதலில் ஏதேதோ பதில்கூற மனம் தொடங்கினாலும் அறிவு மெல்லச் சிரித்தது; அதற்கு ஒரு குட்டுப் போட்டதும் தலையைக் குனிந்துகொண்டு உண்மையை ஒப்புக்கொண்டுவிட்டது.

"நிச்சயமாகக் கண்டவுடனேயே எடுத்து எனது தேவைக்குப் பயன் படுத்தியிருப்பேன்"

வெட்கப்பட வேண்டிய செயல்தான். ஆனால் இப்படி எவ்வளவு காரியங்களைச் செய்துவிட்டு நல்ல பிள்ளை வேடம் போடுகிறேனென்று மீள்பரிசீலனைசெய்ய ஆரம்பித்தால்...

ஒரு மனிதன் உண்மையை ஒப்புக் கொள்ள நிகரற்றவீரமொன்று தேவைப் படுகிறது.

என்னை நானே ஆராயத் தொடங்கியபோது மற்றொன்றையும் நான் உணர்ந்தேன். அந்த ஐந்துசதம் அநாதரவாகக் கிடப்பதைக் கண்டபோது எனது மனம் ஒரு குரூரத் திருப்தியை அடைந்திருந்தது. அதற்கு என்ன காரணமாக இருக்கும்?

சுமார் முப்பந்தைந்து நாற்பது வருடங்களுக்கு முன் இந்த ஐந்து சதம் மிகுந்த பெறுமதியுடையது.

எனது பாடசாலை நாட்களில் ஐந்து சதத்திற்கு வாங்கிய கச்சானை இப்பொழுது வாங்குவதானால் இருபது ரூபாவுக்குமேல் கொடுக்கவேண்டும்.

எனது நினைவோட்டத்தினூடே, அந்தப் பள்ளிப்பருவச் சம்பவமொன்று, மறதிப்பாதியின் பிடியிலிருந்து சிரமப்பட்டு விடுபட்டு மெல்ல மேலெழுந்து மிதக்கிறது.

எனது கிராமம் இளவாலை. நான் பஸ்ஸில் பாடசாலைக்குச் சென்று வந்தேன். பாடசாலையிலிருந்து வீட்டிற்கு பஸ்ஸில் போகத் தேவையான அளவு பணந்தான் அன்று என் கையிலிருந்தது.

எனது பெற்றோருக்கு நான் செல்லப்பிள்ளை. என் தந்தை எப்போதும் அதிகமாகத்தான் பணம் தருவார். அன்று வேறேதோ தேவைக்குப் பணத்தைச் செலவு செய்ததால் அந்தநிலை.

கச்சான் வாங்க வேண்டும் போலிருந்தது. சிறுபிள்ளைகளுக்கு இதைப் பார்த்ததும் வாங்க வேண்டுமென்ற ஆசை அதிகம். ஏன் பெரியவர்களும்



அப்படித்தான்.

வீதியோரக் கடைகளில் இப்படி எல்லாம் பொருள்களையும் அடுக்கி வைப்பது அந்த ஆசையைத் தூண்டுவதற்குத்தானே?

என் கண்ணெதிரேதென்பட்ட கடைகளில் மிரான்டா, ஸ்பிறைற், நெக்ரோ என்று பலவர்ணச் சோடாப் போத்தல்கள் கண்ணைக் கவர்ந்தன. சொக்லேற் அடுக்குகள் ரொபி, இனிப்பு வகை வகையாகப் போத்தல்களில்.... வீதியோரத்தில் அந்த அதிகாலை வேளையிலேயே ஒருவர் சுரணையற்றுச் சுருண்டு கிடந்தார். சற்றுத் தள்ளி அழகான கடையில் அடுக்கடுக்காக மதுபான வகைகள்!

பத்தடிக்கொன்றாக இருந்த வீடியோக் கடைகள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாடலை உச்சஸ்தாயியில் அலறவிட்டிருந்ததால் எதையும் இரசிக்க முடியாத ஒரு நிலை! ஒரே வகைப் பாடல்களையே கேட்ட காலம் மனதுள் வந்து மெல்லச்சிரித்து விட்டுச் சென்றது.

'இவ்வளவும் இருந்தென்ன? அரிசியைத் தேடி அலைய வேண்டியிருக்கிறதே. உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் ஒடுங்கி, ஒதுங்கிக் கிடக்கின்றன. கப்பலில் ஏறிவந்தவை இந்தக் கலக்குக்கலக்குகின்றன. குருபரனின் பிலாக்கொட்டைக் கவிதை எம்மை அழகாகப் படம் பிடித்திருக்கிறது.

*"வாய்த்துவிட்டதென - இறுக்கி வயிற்றுள்ளே அடையாமல்"*

இந்த பலாப்பழ சீசன் எம்மை எவ்வளவு நோயாளிகளாக்கப் போகிறதோ?

ஆ...இப்பொழுதுதான் என்க்கு நினைவு வருகிறது. அன்று முதலிலே காசு எடுத்து வல்வெட்டித்துறை பழச் சோடா வாங்கிக் குடித்திருந்ததால் தான் காசு பற்றாக்குறை ஏற்பட்டது. யானைப் படம் போட்டு வரும் கொழும்புச் சோடா எனக்குப் பிடிக்காது. வல்வெட்டித்துறையிலிருந்து வரும் சோடா தான் பிடிக்கும். விலை இருபதோ இருபத்தைந்து சதந்தான்.

மிகுதிப் பணத்தில் ஐந்து சதத்திற்கு கச்சான் வாங்கிவிட்டு இளவாலைச் சந்தியில் இறங்கி வீட்டிற்குப் போகலாமெனத் திட்டமிட்டேன். எனது வீட்டிற்கு அதற்கு அடுத்த தரிப்பிடத்திலிறங்கித்தான் போகவேண்டும். அதற்கு ஐந்து சதம் அதிகம். முதலுள்ள இளவாலைச் சந்தியில் இறங்கி நடந்தால் ஐந்து சதம் குறைவாகக் கொடுக்கலாம்.

திட்டம் நிறைவேறியது. கச்சான் வாங்கி நண்பர்களுடன் பகிர்ந்துண்டு மகிழ்ந்தாகிவிட்டது. விளையாடிக் கொண்டிருக்க பஸ்ஸும் வந்தது. பஸ்ஸினுள் ஏறியும் எங்கள் கவனம் பாடசாலைக் கதைகளிலேதான். நடத்துநர் வந்ததும் "சேந்தான்குளம்" என்று கூறிவிட்டு, வாய் கதையைத் தொடர்ந்தது. ரிக்கற் கையிற்கு வந்ததும் பணத்தை எடுத்தபோதுதான் ஐந்து சதம் குறைவது நினைவிற்கு வந்தது.

'இளவாலை' என்று கூறியிருந்தால் ஐந்து சதம் குறைவாக ரிக்கற் இருந்திருக்கும்.

இப்போது என்ன செய்வது? திக்திக்கென்று இதயம் அடித்துக் கொண்டது.

"ரிக்கற்றை இளவாலைக்குத் தாறீங்களே?" நடத்துநரிடம் இரந்து கேட்டேன்.

"சேந்தாங்குளந்தானே கேட்டனீர்? இனி எப்படி மாத்திறது?"அவரது பதில் சற்று சூடாகவே வந்தது.

இ.போ.ச.வுக்கு எதிர்க்கடையில்லாத காலம். எல்லா நடத்துநர்களின்

(XVஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாளம் தொலைந்த போது....

"ஏய் செக் கறண்டோண"

திடீரென்று வீசப்பட்ட வாக்கியக் குண்டுகள் தோள்பட்டையை நெருடிச் செல்கின்றன.

"இறங்கி நடக்கிறது தெரியாதா? பபா... ஏய் மொனவத தியென்னே?"

பயத்தின் ஆழமான வலி கண்களை எச்சரித்தது. முகத்தில் தோன்றி மறையும் விதவிதமான மாற்றங்கள் மூலம் விளைவு பெரிதாகலாம் என்ற எதிர்பார்ப்புடன் மெல்லிய சிரிப்பலையுடன் கைப்பர்சைத் திறந்து கொள்கிறேன். ஒற்றை ரூபா சட்டென்று நழுவி நிலத்தில் ஓட அதை எடுத்து வைத்துக்கொண்டு விசேட அடையாள அட்டைக்காகக் கைகளால் பர்சைத் துளாவுகின்றேன். வெள்ளைநிறமான அந்த அட்டையின் வடிவம் புலப்படாததால் சட்டென்று இதயம் நின்றுவிட்ட மாதிரி பிரேமை. உள்ளே இருந்த ஓர் உணர்வு காட்டிக் கொடுக்காதே என்று மூளை வழியாக சைகை சொன்னது. தேசிய அடையாள அட்டையை எடுத்துக் காட்டுகின்றேன். சிவப்பு அட்டையைக் கண்டதும்....

"கம்பஸ்... ஆ போங்க"

'இறைவா... முருகா...' கடவுளின் பாதங்களை மன்றாடிக்கொண்டு மீண்டும் சைக்கிளில் ஏறிக்கொள்கின்றேன்.

வழமையாக மூன்று அடையாள அட்டைகளும் ஒன்றாகவே இருக்கும். இது மட்டும் மறைந்து போனதன் மாயம் விளங்கவேயில்லை. மனதை கசக்கிப் பிழிந்து காயப்போடுகிற மாதிரி ஓர் உணர்வு. செத்துப்போய் விட்டால் என்ன என்ற வினா சற்றைக்கெல்லாம் தோன்றி மறைந்தது.

சங்கவி வித்தியாசமாய் பார்த்தாள். "என்னடி இவ்வளவு வேர்வை? என்ன ரென்ஷன்?" பதில் சொன்னபோது அவளும் பயந்து போனாள்.

திரும்ப வரும்போது இறங்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஒவ்வொரு ஒழுங்கையாக துடிக்கும் நெஞ்சத்தோடு வீடு வந்துசேர்ந்ததும் ஒரு நம்பிக்கையோடு புத்தக மேசை மீது தேடத்தொடங்குகின்றேன்.

"என்ன தேடுறாய்?"

அம்மா அதட்டியதும் மனம் மீண்டும் ஆடத் தொடங்கியது. உண்மையைச் சொன்னபோது அம்மா தாண்டவத்திற்கு உக்கிரம் போடத் தொடங்குகின்றாள்.

"இண்டைக்கு நாடு இருக்கின்ற நிலைமையில உயிரை விட முக்கியம் இதுதானெண்டு தெரியாமலே நடக்கிறியள். அக்கறையில்லாத ஜென்மங்கள். துலைஞ்சா திருப்பி எடுக்கேலுமே? மனுச ஜென்மங்களே... கண்டறியாத ரூர்"

அம்மா கூறிய கடைசி வசனம் நெஞ்சுக்குள்ஏதோசொன்னது. இரண்டு நாள்களுக்கு முன்பு சந்தோசமாக போய்வந்த ரூர் ஞாபகத்துக்கு வந்தது.

'அங்க துலைச்சிருப்பனோ?' சந்தேகமாய் இருந்தது.

"அல்லப்பிட்டியில எல்லாற்ர ஜ.சியும் குடுக்கேக்க உன்ரைஎய் கைத வற விட்டிருப்பினமோ? ஏதோ சிந்தனையில்தானே இருக்குதுகள்"

அப்பா வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகின்றார். ஆனால் அடையாள அட்டையைப், பொறுப்பாக எடுத்துச் சென்றதால் ஞாபகத்தோடு தந்தது நினைவிருக்கிறது.

"அப்ப எங்க துலைஞ்சிருக்கும்?"

"இறைவனே! சோதிக்காதே, கோயிலுக்கு வந்து தேங்காய் உடைக்கிறன்"! அவசியமற்ற வேண்டுதல்களால் கடவுளைக் கூட திகைக்க வைக்கும் இன்றைய நிலையை நினைக்க வேதனை பல மடங்காகின்றது.

அம்மாவும் என்னோடு சேர்ந்து ஒவ்வொரு புத்தகமாகத் தேடுகிறாள். மனதுக்குள் மூச்சு வாங்குகிறது. கை கால்கள் நடுங்கிக்கொள்கின்றன. இதயம் ஒவ்வொரு செக்கனுக்கும் இடைவிடாமல் பிரார்த்தனை செய்கிறது.

"நான் ஆயிரந்தரம் சொல்லிப் போட்டன் கவனமா இருக்க வேணுமெண்டு. வீட்டு நிம்மதியை குலைச்சு போட்டாளே... இனி யார் பொலீஸ் ரேஷனுக்கு அலைஞ்சு திரியிறது?"

மனதுக்குள் எழுந்து ஓய்கிற பூகம்பத்துக்கு நடுவே அம்மா ஊற்றுகிற எண்ணெய் பற்றி எரிகிறது. வெளியே இருள் சூழ்கிறது. உள்ளேயும் ஒரே இருள்.

'இண்டைக்கு கறண்ட் கட்' ஏற்றி வைத்த சின்ன சுட்டி விளக்கில் தேடுதலை நிறுத்தாமல் தொடருகிறேன்.

நாலைந்து மனிதர்கள் சூழ்ந்து கொள்கிறார்கள். "என்ன மனோன் பெட்டை ஐ.சியை துலைச்சுப் போட்டுதாம். உதுகளுக்கு என்ன அக்கறை? எது முக்கியமோ அதில்லாமல் இருக்கேலுமே? எங்கையாம் போட்டது?"

முத்துவேலு மாமியின் துரதிஷ்டம் பிடித்த பேச்சு ஆத்திரத்தை அதிகரிக்க, விக்கி விக்கி அழத் தொடங்குகின்றேன். சற்று நேரத்திற்கெல்லாம் உயிருள்ள பிணமாய் நின்ற என்னைச் சுற்றி இருந்த கூட்டம் வசை பாடத் தொடங்கியது. யாரேனும் இரக்கம் காட்டுவதாக இல்லை.

"தந்த உடன அதைப் பத்திரமா வைக்காமல் என்ன செய்தனி?"



"அப்பவும் சொன்னனான் உந்தத் தூரப் பயணம் 'ரூர்' வேண்டாமெண்டு. பெட்டை கேட்டுதே. இப்ப பார் என்ன செய்ய முடியுமெண்டு. உந்தப் பொம்பிளைப் பிள்ளையளுக்கு படிச்சுப் படிச்சு சொல்லுறது அடக்க, ஒடுக்கமா வீட்டில இருக்கச் சொல்லி."

பாட்டியின் நச்சரிப்புக்கலந்த நஞ்சு வார்த்தைகள் தொண்டைவரைக்கும் வந்து திணறடித்தது. பேசாமல் கண்களை மூடிக்கொண்டு கிணற்றுக்குள் விழுந்தால் என்னவென்று தோன்றியது.

வாசு வந்து நின்றான்.

"என்ன செல்வி ஐ.சி. துலைஞ்சு போட்டுதாம். நம்பர் வச்சிருக்கிறீரே. இப்ப எடுக்கிறது கஷ்டமெல்லே. அது இல்லாமல் ஒரு இடமும் வெளிக்கிடவும் ஏலாது. எங்க விழுந்திருக்கும்?"

பேசாதே என்று விழுந்த என் மன்றாட்டமான பார்வையில் திடீரென்று பேச்சை மாற்றிக்கொண்டான். கண்ணீரைக்கண்டதும் இளகி விட்ட வாசுவின் முன் அழுகை அதிகரித்தது.

"செல்வி நம்பர் தெரிஞ்சா எடுக்கலாமாம். ஒண்டுக்கும் யோசியாதையும். எதுக்கும் நான் போன இடத்தில எல்லாம் விசாரிக்கிறன்."

"நம்பர் வச்சிருக்கிறியா?" மாமாவின் கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் வாசுவைப் பார்க்கிறேன்.

"செல்வி ரூர் லிஸ்ரில இருக்குத்தானே. பாத்துக்கொண்டு வந்து சொல்லுறன்."

நெளிந்துபோன மனதை நிமிர்த்தியதுபோல வந்த வார்த்தைகளில் ஓரளவு நிம்மதி வந்தது. வாசு போய் விட்டான்.

துக்கம் விசாரிக்க வந்தவர்கள் ஆளுக்காள முணுமுணுத்தபடி கலைந்து கொண்டார்கள். அம்மா கடுமையான முறைப்போடு உட்கார்ந்திருக்கிறாள். "நாளைக்கு காம் காம்பாத்திரிய வேண்டியதுதான்." அம்மாவின் முகத்தில் செத்த வீட்டில் ஒப்பாரி வைத்து ஓய்ந்த சோகம் படர்ந்திருந்தது. நானோ மூச்சுவிடும் பிரேதமாய் உட்கார்ந்திருந்தேன்.

நாளைக்கு என்ன செய்வதென்ற ஏக்கம் மனதை வருத்த வயிற்றுக்குள்ளே யாரோ மண்வெட்டியால் பிறாண்டுவது மாதிரிப் பிரமை.

"வழியில விழுத்தினியோ... எங்கே சுக்க போட்டியோ... யாரும் களவெடுத்தாங்களோ... யோசிச்சுப் பாரடி"

அம்மாவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. நாளைக்கு நடக்க இருக்கும் எந்தவிளைவுக்கும் அவள்தானே பொறுப்பாக வேண்டும்.

தன்மகள் கற்பிழந்து வந்து கதறியழுதால் கூட இப்படிப்பட்ட வேதனை இருக்காதோ என்ற வெறுப்புத் தோன்றியது. இன்றைக்கு யாழ்ப்பாணத்தில் கற்பைவிட பிரதானமானதாக இந்த ஐ.சி... அடையாளம்...

இரவு யுகத்தின் சங்கரங்களாக மெலிதாக நகரத் தொடங்குகின்றது. தூரத்தில் கேட்கும் ஊளைச் சத்தங்கள் ஊளைச் சதைகளை உலுக்குகின்றன. நிம்மதியில்லாத யாழ்ப்பாணத்து ராத்திரிகள் என்று யாரோ எழுதியது நினைவுக்கு வருகிறது. தொலைத்த பொருளின் ஆதிக்கம் வெளிப்படுகிறது. பழைய யாழ்ப்பாணம் இந்த அவலநிலையைப் பார்த்துச் சிரிக்கின்றது.

போர்வையை இழுத்து மூடியபடி நாலா திசைகளிலும் இருட்டை வெறிக்கின்றேன். இருள் கூட 'ஐ.சி இருக்கா?' என்று கேட்பது மாதிரி பிரமை.

**- சி.சிவாணி -**

'இருட்டோடு இருட்டாக எங்கேயும் ஓடிவிட்டால் என்ன?' சீ! இதென்ன வேண்டாத யோசனைகள். நானா இப்படியெல்லாம் யோசித்துக் கொள்கின்றேன்? திசை தெரியாத மனம் இப்படியெல்லாம் நினைக்கிறதே.

மெல்லிய விடியலில் கருணையுள்ள இறையருள் அத்தனையும் வேண்டி, பொலீஸ் நிலைய வாசலில் மூன்று வயதுக்குழந்தையாக அம்மாவுக்குப் பின்னால் ஒழித்துக் கொள்கிறேன். எந்த மொழியில், எப்படிச் சொல்வது?

"ஐ காட் லொஸ்ட் மை ஸ்பெசல் ஐடென்ரிக்காட், வென் ஐ வோஸ் றவலிங் பிறம் நைனா தீவு..."

"ஓ! எவ்வளவு சிம்பிள் ஆ... என்ன தொழில்...எப்பிடி இதுமட்டும் தொலையும்?"

"என்ன தொழில்?" சொன்னேன்.

"ஓ! கம்பஸ் பபா. இப்ப குழந்தைங்கதானே கம்பஸ் படிக்கிறது... புட்டில பால் கொண்டுபோறது... ஐ.சி. துலைஞ்சது தெரியாம என்ன பண்ணினீங்க. உங்களுக்கெல்லாம் படிக்க எங்க நொலேஜ் இருக்கு?"

"இப்ப ஐ.சி மூவாயிரம், நாலாயிரம் வித்திட்டு வர்றீங்களா? புதுசு கிடையாது. அப்பீல் குடுத்துட்டுப் போங்க"

சீ! ஏன் இந்தஅழுகை சட்டென்று வருகிறது? மனதைக் கட்டுப்படுத்த முடியாமல் நீர் சொட்டுகிறது. நீள மான விண்ணப்பப்படிவம பயத்தைக கொடுக்கிறது.

"பத்து நாளைக்குப் பிறகு கொண்டாந்து குடுங்க"

சூரிய வெப்பத்தில் எறியப்பட்ட வண்ணாத்துப்பூச்சி மாதிரி சிறகுகள் உருகத் தொடங்குகின்றன.

மெடிக்கல் ரிப்போர்ட் தரும் டாக்டர்களின் தாமதம் மாதிரி அவை அம்மாவைஎரிச்சல் படுத்துகின்றன. தூரத்துப் பல்லி அடிக்கடி சொல்லிக்கொள்கிறது. நன்மையா, தீமையா என்று அறிந்துகொள்ளும் ஆர்வம் இல்லை. சதுப்பு நிலத்தின் கீறல் விழுந்த மாதிரி சப்தமில்லாத சோகம் உள்ளுக்குள் அழுந்திப் போகிறது.

கைகளை உயர்த்திக் காப்பாற்று என்று இதயம் கேட்கிறது. மூளையோ பொறுத்திரு என்றுரைக்கிறது. எவர் சொன்னாலும் மனம் அமைதியடைவதாக இல்லை.

தாலி கழற்றிய பெண்ணின் சோகம் கூட மூன்று நாள்களுக்குத் தானாம் என்பாள் அம்மா. ஆனால் ஆயுள்பூராவும், தொலைக்கப்பட்ட அடையாளத்தோடு, எப்படித் தடைகளைத் தாண்டமுடியும்?

"ஒரு இடமும் போக வேண்டாம். வீட்டுக்குள்ள இரு. ரிப்போர்ட் வரும் வரைக்கும்."

அம்மாவின் கண்டிப்பான உத்தரவு. சோகம் விசாரிக்கும் கூட்டத்தின் வருகையும் அதிகரிக்கிறது. எதிர்த்த வீட்டு பரிமளா அக்காவின் கணவரும் கையை விரித்து விட்டார்.

"கச்சேரியில வேலை செய்யிற எங்கட துலைஞ்சாலே திருப்பத் தர மாட்டினமாம்"

"எதுக்கும் கம்பஸில அறிவிக்கிறது நல்லது"

பீடாதிபதி அலுவலக வாசலில் பெற்றோரைத் துலைத்த குழந்தை மாதிரி நிற்கிறேன்.

"என்னம்மா பிரச்சினை?"

ஒன்று விடாமல் ஒப்பிக்கின்றேன். வெளியே வானம் கருமை போர்க்கிறது. மழை பெய்யலாம் என்பதற்கு அடையாளமாக காற்றில் கலக்கும் மெல்லிய நீர்த்துளிகளாக மனதும் அழ ஆரம்பிக்கிறது.

"இப்ப திரும்ப எடுக்கிறது சரியான கஷ்டம்தான் பிள்ளை. எண்டாலும் எங்களால முடிஞ்ச அளவு முயற்சிப்பம். எல்லா இடமும் தேடிப் பாருங்கோ... ஏ.ஆர்க்கும் மார்ஷலுக்கும் அறிவியுங்கோ. நான் ஏலுமான முயற்சி எடுக்கிறன்"

அடிப்பட்ட மனதுக்கு கட்டுப் போட்ட மாதிரி இருக்கிறது. கண்களைத் துடைத்துக்கொண்டு உதவிப் பதிவாளரிடம் விரைகின்றேன். கேள்விக் குறியோடு நிமிருகின்றார். ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொள்கின்றேன்.

"ஒரு கடிதம் எழுதிக் குடுங்கோ. முயன்றளவு முயற்சிப்பம். இப்ப விதிமுறைகள் வலுகடுமை. திரும்ப எடுக்கிறது கஷ்டம்தான். எண்டாலும் முயற்சிப்பம்"

நூறு யார் தூரத்துக்கு ஒவ்வொரு தடவையும் திரும்பத் திரும்ப நடந்து கொள்கின்றேன். எவ்வளவு பெரிய பயங்கரம் நெஞ்சை அழுத்துகிறது.

அம்மாவின் வலிமைவாய்ந்த உபதேசங்கள் வேறுமனதை நெருடுகிறது.

"உனக்கு எத்தனைதரம் சொன்னனான். உவள் பக்கத்து வீட்டு பரிமளம் முன்னுக்கு நிக்கேக்க ஒரு இடமும் வெளிக்கிடாதையெண்டு. பொல்லாத கண்ணெல்லே?"

என்னுடைய தவறுக்கு அம்மா பல விதங்களில் நியாயம் தேடுகிறாள். ஓட்டைவிழுந்து ஒழுகிக் கொண்டிருக்கும் மனம் போதனைகள் எதையும் சட்டைசெய்வதாக இல்லை.

பிரார்த்தனை, வேண்டுதல், தவற்றுக்கான மன்னிப்பை வேண்டிய நேரங்கள் யுகங்களாக கடந்துசெல்கிறது. 'எங்கே தொலைத்திருப்பேன்?' சுத்தமாக நூலகம்முழுவதும்தேடியாயிற்று. இரவல் எடுத்த புத்தகங்கள் முதல் ஒவ்வொன்றாகப் பார்த்தாயிற்று. கிடைக்கும் என்ற நம்பிக்கையில்லை. பத்திரிகை விளம்பரம் பார்த்துச் சிரித்தது. விளம்பரம் பார்த்துத்தான் தொலைந்த பொருள் தேவை என்று எடுப்பவன் கொண்டுவந்து கொடுப்பதற்கு அது என்ன மற்றவன் அறியாத பொருளா? ஏனோ ஒரு மனஆறுதலுக்கு அதுவும் செய்தாயிற்று.

"இப்பிடியே பேயறஞ்ச மாதிரி எத்தனை நாளைக்கு இருப்பாய்? வா படம் பாக்க" சங்கவி வற்புறுத்தியும் மறுத்தாயிற்று. ஒரு வாரத்திற்கும் மேலாக எவ்வித பலனும் இல்லை.

தூரத்துப் பச்சை வெறுப்பைத்தர குளிர்மை தேடி மனம் அங்கலாய்க்கிறது. நாக்குளிப் புழுவை கொத்திக் கொண்டிருக்கும் கோழியின்மீது கவனம் திரும்புகிறது. துடித்துக் கொண்டிருக்கும் புழுவைக் காப்பாற்றத் தோன்றுகிறது. முடியாதென்றே தோன்றுகிறது. கொத்திப் போய் விட்டால் மீட்க முடியாதயுகம். அகப்படாமல் தப்பிக்கொண்டிருக்கும் புழுக்களுக்குத்தானே வாழ்க்கை... நழுவ முடியாத பிடிக்குள்ளே அகப்படாமல் இருப்பதுதான் புத்திசாலித்தனம்.

அம்மாவின்குரல் என்னைத்தாக்க எழுந்துகொள்கிறேன்."யாரோதேடுகினம்"

"யாராய் இருக்கும்?" விரைவு வித்தியாசமாக இருக்கிறது. தெரியாத முகம். ஆனாலும் தெரிந்த மாதிரி இருக்கிறது. புன்முறுவலில் பூத்த முகம் எடுபடவில்லை.

"உங்கட ஐ.சியை எங்கவானுக்க விட்டுட்டீங்கள். கொண்டு வந்து தர நேரமில்லாமல் போச்சுது."

சொர்க்கத்தில் நிற்பது போலவும், ஆகாயமே சுற்றிக் கொள்ள கடவுள் உயிர்ப் பிச்சை தருவது மாதிரியும், சற்றைக்கெல்லாம் தோன்றி மறைந்த உணர்வை எப்படி வர்ணிப்பது...?

இது என்ன...?இது உண்மையா...? அம்மாவையும் பார்க்கிறேன்.'உங்கட பிள்ளை கற்போட இருக்கிறா' என் மெடிக்கல் ரிப்போர்ட் வந்துவிட்ட சந்தோசம் மாதிரி அம்மாவின் முகத்தில் வெள்ளை ஒளி... ஆனால் உடன் என் நெஞ்சுக்கூண்டில் வந்து மறைந்த அந்த வெறுப்பு என்ன?

அது என் இனத்தின் மீது எனக்கு ஏற்பட்ட வெறுப்பா? இல்லை. இந்த ஆட்சியின் மீது ஏற்பட்டதா? அல்லது தொலைந்து போய் மீண்டும் கிடைத்த அந்த அடையாள அட்டை மீதான வெறுப்பா?!... எனக்குப் புரியவில்லை.

உங்களுக்காவது புரிகின்றதா சொல்லுங்கள்?

(முற்றும்)

## குறள்வெள்ளம்

அவன் நல்லவன். வாய்தான் கூடாது என்பார்கள். இந்தச் சாக்குப் போக்குச் சமாதானம் ஏற்கப்பட முடியாதது என்றுவிட்டார் வள்ளுவர் தெளிவாக.

நாவினால் சுட்டபுண் ஆறாது. விட்ட வார்த்தை விட்டதுதான். எட்டிப்பிடிக்க இயலாது. அது மானத்தையும் கட்டிக்கொண்டு பறந்துவிடும்.

தேடி வருபவரிடம் உனது வார்த்தைகள் தைக்குமோ என்ற அச்சம் சிறிதேனும் இருந்தால் - அவருக்கு எந்த நன்மையைச் செய்து அனுப்பியும் பயனில்லை.

அது அடுத்தவர் மனதைப் புண்படுத்தும் என்பது மட்டுமல்ல உனது ஒழுக்கத்தையும் வழுக்க வைத்துவிடுகிறது.

எனவே வார்த்தைப் பிரயோகம் தெளிவானதாக இருப்பதே அறம். அதுவே ஒழுக்கம்.

மனதிலே இல்லாதது வாயாலே கொட்டுப்படாது. மனது சுத்தமாக இருந்தால் வாயால் அபத்தமான வார்த்தைகள் தப்பித் தவறியும் வரா.

வார்த்தைகளை வைத்தும் மனிதன் மனதினை எடைபோட முடியும்; வாழ்க்கை நெறியினைக் கணித்திடல் இயலும்.

**ஒழுக்கம் உடையார்க்கு ஒல்லாவே தீய**
**வழுக்கியும் வாயால் சொலல் - 0139**

*- அம்பிகைபாகன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி ஒரு சாட்டா?

நாளைக்குத் தீபாவளி நன்குகொண்டாட வேண்டும்
வேளைக்கே எழுந்து எண்ணெய் முழுக்காடி
ஆளுக்காள் புத்தாடை அணிந்து இறைவனின்
தாளைப் பணிந்து தரணியில் மகிழ்ந்திடுவோம்

நண்பகல் வீட்டில் நல்ல விருந்தொன்று வைத்து
நண்பர்களை அழைத்து நயந்து பரிமாறுவதற்கு
உண்பதற்கு இசைவான உருசியான உணவு செய்ய
எண்ணிய போது கேட்டேன் எதிர்வீட்டில் ஒரு முழக்கம்

என்னுடைய காதுகள் இயல்புடன் செயற்பட்டு
அன்பர்கள் அலசியதை அபகரித்துக் கொண்டது
என்பற்ற இறைச்சி வாங்க எழுந்ததொரு கோரிக்கை
தன்பங்கு அதுவேயென அறைந்திட்டா ரொருவரங்கு

அரக்கன் இறந்ததினம் அவசியம் மகிழ்வுடன்
சிறக்கநாம் கொண்டாடல் சிறந்தது என்றொருவர்
உரக்கவே உரைத்து ஒத்ததாய்க் கருத்தியம்பி
அறுக்க வேண்டும் ஆடென அறைந்திட்டார் முடிவாக

ஆட்டிறைச்சி மட்டும் ஆக்கிவிட்டால் போதாது
ஊட்டிட வேண்டும் உயர்ந்தரக மதுபானம்
கேட்டிறைஞ்சி நின்றார் கோரிக்கைப் பிரியரங்கு
மீட்டிதன் பொருளாய்ந்து மிகையில்லை என்றேற்றார்.

அரக்கனைச் சாட்டி அறிவற்ற செயல்புரியும்
இரக்கமற்ற இவர்களுக்குத் தீபாவளி ஒருசாட்டா?
உரக்கவிதை விவாதித்து உலகினில் ஆவதில்லை
மரத்துவிட்ட இதயங்கள் மாறினாலே மீட்சியுண்டு.

- பழையூர் சுந்தரம்பிள்ளை -

# மனநிலை

காற்றொரே மாதிரித்தான் கவிதைபாடிச் செல்கிறது!
ஊற்றின் கலகலப்பில்
ஒருநாளும் மாற்றமில்லை!
பூக்களது பூரிப்பில், புல்லின் நுனிச்சிலிர்ப்பில்
ஈக்களது பாட்டுகளில்
எப்போதும் ஒரே'நிலையே'!
ஆனால்... எமது மனம் அந்தந்தக் கணங்களிலே
பூணும் குணங்களினால்
பூவுலகின் 'குணபேதம்'
மாறிக் கிடப்பதுபோல் உணர்கின்றோம்!
மணித்துளியுங்
காதலியைப் பிரிந்திருந்தால்... காற்றும் அழுவது போல்
தோற்றம் எமதுடலைத் துளைத்தெடுக்கும்.
அதேநேரம்
காதலியை அணைத்திருந்தால்... காற்றும் கவரிவீசி
வாழ்த்தினாற் போல
உயிர்மருமம் சிலிர்த்திருக்கும்!
மனதை மகிழவைத்தால் மற்றதெல்லாம் சுவர்க்கம்தான்.
மனதை மருளவைத்தால் வழியெல்லாம் நரகம்தான்.
பரவசமும், பதறுதலும்
பார்க்கின்ற 'மனநிலை'யைப்
பொறுத்ததிதை எங்கள் புலன்களுக்கு அறிவிப்போம்.
எறிகணைகள் எரிந்தாலும்
எம்மனதை மலர வைக்க
உறுதி எடுத்தால் உயிர்ப்பைப் படைத்திடலாம்!
மனதை அழுகவைத்து
அயலை இழவாக்காமல்
மனதை முகிழ்த்தின் 'இந்த
வாழ்வையும்' இரசித்திடலாம்

- சயனொளிபவன் -

# நிலையாக வாழ்வோம் நீர் நன்கு சிந்திப்பீர்

வருங்கால எம்மினத்தின் அரும்பான இளைஞரே
கரும்பான பொழுதையேன் கரியாக்கிக் கழிக்கின்றீர்?
கருக்கலிலே தெருக்களிலும் கடைகெட்ட மினிகளிலும்
நெருக்கமாய் நின்றுநீர் நீள் பொழுதைக் கழிப்பதேன்?
உருக்கமுடன் உங்களுக்கு உண்மையினைச் சொல்லுகின்றேன்
செருக்கின்றிக் கேட்டிடுவீர் சிந்தையிலே கொண்டிடுவீர்

நடுத்தெருவில் நாம் நிற்க நாலுபேர்கள் சிரிப்பதற்காய்
அடுத்தெம்மைக் கெடுப்பதற்கு அருமை மிகு வழிசமைக்கும்
கொடுந்தன்மை கொண்டகுடி குதூகலிக்க மினிசினிமா
புகைப்பதற்கு கோல்ட்லீவ் புசிப்பதற்கு புரியாணி
கடைத்தெருக்கள் சந்துபொந்து சகலரும் வந்தமர்ந்து
மடைத்தனங்கள் புரிவதற்கு தடைகளின்றித் தந்துவிட்டார்.

அன்றியும் அண்ணனும் அப்பாவும் அத்தானும்
அங்காலை நின்று அடுக்கு மாடி களிலேறி
வெங்காயந் தனைவெட்டி வெறுஞ்சட்டி தனைத் தேய்த்து
அஞ்சாறு தனையனுப்ப அது நூறா யிங்குவர
பெருவிரலில் மைபூசி பெரியம்மா அதைப் பெற்று
தருகின்றார் தடுமாற தம்பிமாரே மிகக் கவனம்

எனவே எம்மருமை இளைஞரே இதைக்கேளும்
மனமாய் நீர்கெட மண்மீது பலவழிகள்
இதமாய்ச் சமைத்து இங்கும்மைக் கெடுக்கின்றார்
அதனை யுணர்ந்து அவர்வழியிற் சென்றிடாது
பழைய வழியைப் பண்பாட்டைப் பின்பற்றி
நிலையாக நாம் வாழ்வோம் நீர் நன்கு சிந்திப்பீர்

- வயவையூரான் -

# 'ஊடுருவல்?'

கந்தவனம் வீட்டுக்
கடைவேலி ஓரம்
'கார்கில்' கருத்தரிப்பு...!

'இந்து' வில்லை
'இஸ்லாமும்' அங்கு இல்லை
'சிங்களமும்' 'தமிழும்'
சீண்டும் நிலையுமில்லை...!

கத்தியோடு கந்தவனம்
கம்பி தாங்கி கார்த்திகேசு
கதியால் கட்டை யெல்லாம்
கத்தி வெட்டில் இடுப் பொடிந்து.

கத்தி, பொல்லுக் கோடாலி,
கள வெடுத்த 'கரண்டுக்' கம்பி
கந்தவனப் படையணியின்
'கனரகத்து' ஆயுதங்கள்?...

வாளோடு வில்லுக் கத்தி
வரிச்சு மட்டை 'சைக்கிள் செயின்'
வன்னியாலை வந்த பின்பு
வாங்கி வைச்ச திருக்கைவாலும்
'கோலோச்சும்' கார்த்திகேசுக்
கோவேந்தன் படைக்கலமே...!

அப்பன், மகன், சித்தப்பன்,
அத்தை, மாமா, அம்மம்மா,
மொத்தமாக இருதரப்பும்
அத்தனையும் அணிதிரள...!

'எல்லை போட்டு விட்டால்
எடுப்பன் தலையிங்கே'
விடுத்தார் 'அறிக்கை' யொன்று
வீம்பர் கார்த்தி கேசு.

பெண்டுகள் தொட்டு
பொடி பெட்டை யெல்லாம்
மிண்டி முழங்கி,
மிக நல்லாய்ப் பேசுதுகள்.

கண்டு நாணும் அந்திப்பகல்
கறுப்புக் கொடி காட்டி நீண்ட
'ஹர்த்தால்' ஒன்று நடத்தி விட...

இடுப்பொடிந்த கால்கள்
எடுப்பாக நிமிர்ந்து நிற்க!
எடுத்தார் கத்தி, கம்பு
'ஊடுருவல்' தடுக்கக் காத்தி

கந்தப்பு பின் நின்று
கடைக்குட்டி ராசனிடம்
'காலை முறி காத்திக்கு'
கக்கினார் கட்டளையை.

போரென்று மூளப்
புறப்படும் வேளையிலே,
'வாறாங்க ளாமி
றவுண்டப்பா மிங்காலை'
வழிப்போக்கன் வார்த்தை
காதைத் தொடுகையிலே
கதிகாலைத் தவிர ~ அந்த
எல்லையில் எதுவுமில்லை...!

- "சத்திராதி" -

# எனை நேசிக்கும் என் எழுதுகோல்

துயில் தொலைந்த
இந்த இரவுப் பொழுதில்
என் கரங்களைப் பிடித்து
எழுதுகோல் முத்தமிடுகிறது.
துயரங்களை சுமந்து சுமந்து,
கனத்த இதயம்,
அமைதியாக அதனை
நோக்குகிறது
கனத்த இதயத்துக்கு
கதை சொல்ல வந்தாயா?
வினாவையும் தொடுக்கிறது
கனாவில் கூட
பாமாலை தொடுக்க
வருகிறாயா...வருகிறாயா
என்று அழைப்பாயே?
இப்போது மறந்தே விட்டாயா?
ஏன் இந்த மௌனம்?
விம்மிக் கொள்கிறது
என் விழிகள்
வியப்பில் ஆழ்கின்றன.
என்ன நீ நேசிக்கிறாயா?
எழுதுகோல் தோழனை
என் கரங்கள்
இதோ...
முத்தமிட்டுக் கொள்கிறது.

- மீசாலையூர் கமலா -

# இப்படியும் ஒரு வாழ்வு!

கொவ்வைப் பழமதைக் கோதும் கிளியதன்
கொஞ்சு மொழிகேட்க வேண்டும் - நான்
அவ்வைப் பாட்டியின் அழகு தமிழினை
அள்ளிப் பருகவே வேண்டும் - அந்த
வெள்ளி நிலவதை வள்ள மாக்கியே
விண்ணில் வலம்வர வேண்டும் -
அள்ளித் தமிழெனும் அமுதம் பருகியே
ஆயுள் நூறுபெற வேண்டும்.

மூச்சுக் காற்றினைத் தென்றல் தொடுகையில்
மூங்கில் இசைமுழங்க வேண்டும் - என்
ஆச்சி கூறிய நீதிக் கதைகளை
அகிலம் ஏற்க வேண்டும் - நான்
நீலக் கடலிடை நீந்திப் போகையில்
நிலவும் நீந்தி வர வேண்டும் -
ஆலம் உண்டவர் அடிகள் தொழுகையில்
அவனி அருள்பெற வேண்டும்.

கோல மயிலதன் தோகை விரிகையில்
குதித்து ஆடிட வேண்டும் - நான்
தாளம் போட்டிட்த் தாவும் மானினம்
தகதிமி என ஆட வேண்டும்

பச்சை வயல்வெளி மீதில் படுத்துமே
பாக்கள் இயற்றிட வேண்டும் - நான்
கொச்சை மொழியினில் கூறும் கதைகளை
குவலயம் ஏற்க வேண்டும்.

அந்தி வேளையில் அல்லி அலர்வதை
கிட்டத்திருந்து இரசிக்க வேண்டும் - நான்
குந்தி புதல்வனின் கணைகள் போலுமே
கோடிக் கவிபாட வேண்டும்.

நித்தம் வாழ்வினில் நீளும் நிம்மதி
நிதமும் எனைச்சேர வேண்டும் - பின்
சத்தம் இன்றியே சாகும் போதிலும்
சாந்தி பெற்றிட வேண்டும்!

- அனலையூர்ச் சேந்தன் -




# பக்கத்தில் நீயிருந்தால்.....?

பக்கத்தில் நீயிருந்து - எந்தன்
பஞ்சணை மீதமர்ந்தால்
றொக்கற்றி லேசென்று - யானும்
சொர்க்கத் தையேதொடுவேன்.

சுக்கிரன் கோளினிலே - பூமிச்
சூழலை யாத்திடுவேன்
மக்களின் மன்னவனாய் - அங்கே
மன்றினில் வீற்றிடுவேன்.

எட்டுத்தி சைகளையே - வானில்
ஏணிக ளாக்கிடுவேன்
நட்சத்தி ரத்தேரிற் - பறந்தே
நாட்டை வலம் வருவேன்.

ஒட்சிசன் காற்றினையே - எங்கும்
ஏற்று மதிசெய்வேன்
வட்டநி லாவினிலே - தமிழோர்
வாழும் வழிகாண்பேன்.

முத்தமிழ் மாநாடு - முகிலின்
முன்றலில் ஆற்றிடுவேன்
சத்திய மாயுனக்காய் - தெய்வச்
சந்நதி தானமைப்பேன்

மெத்தப் படித்தவரும் - செல்வ
மேம்பாடு கொண்டவரும்
நித்தம் பணிந்திடவே - வெற்றி
வீரனாய் வாழ்ந்திடுவேன்.

- த. தர்மேந்திரா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் ஒரு செவ்விந்தியக் 'கிராமம்'

**யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் க.குணராசா (செங்கை ஆழியான்) அண்மையில் கனடாவுக்கு சென்று திரும்பியுள்ளார். தமது பயண அனுபவம் தொடர்பாக அவர் எழுதிய கட்டுரை இது.**

ஒன்ராறியோவிலிருந்து இரண்டு மணி நேர கார்ப் பயணத்தில் குறுக்கிடும் கிராமம் பீற்றர்ஸ்புருக். கனடாவில் பயணத் தூரத்தை மணிக்கணக்கில்தான் குறிப்பர். மணிக்கு 120 மைல் வேகத்தில் சீறிக்கொண்டு பயணப்படுகின்ற கார்கள். அவ்வகையில் ஒன்ராறியோவிலிருந்து பீற்றர்ஸ்புருக் 240 மைல்களுக்கு அப்பால் அமைந்திருக்கின்றது. 401 ஹைவேயில் பயணப்பட்டு நகரத்தின் மையப்பகுதியிலிருந்து நகரின் பின்னணியில் புகும்பொழுது கனடாவின் அழகு புலப்படத் தொடங்கும். பேர்ச் மரங்களும் மேபிள் மரங்களும் அடர்ந்து இருமருங்கும் காணப்பட, இடையிடை பரந்த தானிய வயல்கள் விரிந்து கிடக்கின்றன. அறுவடை முடிந்திருந்தது.

பீற்றர்ஸ்புருக் பிரதான வீதியினின்று விலகி உள்ளே சில மைல்கள் சென்றால் மாமோறா என்ற பிரதேசத்தில், நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட கனடாவின் கிராமம் ஒன்றின் மாதிரி வடிவு அமைக்கப்பட்ட நிலப்பகுதி ஒன்றினைக் காணலாம். இன்று தம் அடையாளங்களை இழந்துவிட்ட செவ்விந்தியர்கள் தம் அடையாளத்தைப் பேணும் வகையில் இந்த மாதிரிக் கிராமத்தை இயற்றி வைத்திருக்கிறார்கள். கனடா என்றால் செவ்விந்தியர்களின் வார்த்தையில் "கிராமம்" என்று அர்த்தம். மொன்றியல் கரையில் முதன் முதல் தரையிறங்கிய பிரான்சியர் அங்கிருந்தவர்களிடம் பின்னர் விசாரித்த போது, "இது KANATA" என்றார்களாம். கனடா என்றால் அவர்கள் மொழியில் "இது ஒரு கிராமம்" என்பதாகும்.

**செங்கை ஆழியான்**


பீற்றர்ஸ்புருக் மாதிரிக் கிராமத்தில் செவ்விந்தியர்களின் புராதன கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தோல்களுக்குப் பல்நிறச் சாயமிட்டு மிக அழகாக அமைத்திருந்தனர். நீண்ட காட்டுத் தடிகளை வட்டமான வடிவில் நட்டுப் பரப்பி, அவற்றின் உச்சியில் ஒன்றாகப் பிணைத்து அக்கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. உள்ளே குனிந்து நுழைவதற்கு வாசல். அதனுள் நான் நுழைந்து பார்த்தேன். வெளியில் யாழ்ப்பாணத்தின் கடும் வெப்பம் நிலவக் கூடாரத்தினுள் தண்ணென்ற குளிர்ச்சி நிலவியது. காரணம் எனக்குத் தெரியவில்லை. கூடாரங்களுக்கு அருகில் அவர்கள் அந்தக் காலத்தில் பயன்படுத்திய சின்னங்கள் மரங்களில் செதுக்கப்பட்டுக் காணப்பட்டன. செவ்விந்தியர்களினது இன அடையாளத்தையும் ஆள்புல உரிமையையும் வலியுறுத்தும் சின்னங்கள் இவை. மந்திர மருத்துவச் சடங்குச் சின்னங்களும் நாட்டப்பட்டிருந்தன. அவை நிறந் தீட்டப்பட்டனவாயும் நிறம் தீட்டப்படாதனவாயும் காணப்பட்டன. ஆங்கிலேயரும் பிரான்சியரும் தங்களைத் தாக்கி ஆக்கிரமித்துக்கொண்ட வரலாற்றினை நினைவுபடுத்தும் வகையில் அவர்கள் பயன்படுத்திய கோச்சுவண்டி, அம்புலன்ஸ் வண்டி என்பனவும் காணப்பட்டன. மரத்தால் அமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களின் வீடுகளும் கட்டடங்களும் அங்கு காணப்பட்டன. சப்பாத்து அணிந்த கால்கள் வெளித்தெரிய அடக்கம் செய்யப்பட்ட மண்பிட்டிகளைக் கொண்ட மயானத்தின் மாதிரியும் காணப்பட்டது. அடையாளம் இழந்துபோன ஒரு மானிடக் குழுவின் எச்சமாக எனக்கு அது தெரிந்தது.



செவ்விந்தியன்.

நானும் என்னை அழைத்து வந்த செல்வராசாவும் வியப்புடன் அவற்றினைப் பார்த்துக்கொண்டு நிற்கும் பொழுது, ஒரு வயோதிப மனிதன் எங்களை நோக்கி மெதுவாக வந்தான். அவன் நடையில் கம்பீரமும் முகத்தில் இறுகிப்போன வைராக்கியமும் தெரிந்தன. கருமையான மயிர்கள் வெளுத்து நரைத்திருந்தன. கருவிழிகள் எங்களை ஆழமாக ஊடுருவின. பரந்த சிவந்த முகம். மொங்கோலிய இனத்தினை அந்த மனிதன் எனக்கு நினைவுபடுத்தினான். நிச்சயமாகச் செவ்விந்தியனாகத்தான் இருக்க வேண்டும்.

1492ஆம் ஆண்டு கடலோடி கொலம்பஸ் இந்தியாவிற்கு மேற்குப் புறமாகப் பாதை ஒன்றினைக் காண வேண்டிப் புறப்பட்டு, அத்திலாந்திக் சமுத்திரத்தினைக் கடந்து, அமெரிக்காவின் சில தீவுகளையடைந்தான். தான் கரையிறங்கிய பிரதேசம் இந்தியாவென அவன் கடைசிவரை நம்பினான். அந்த நம்பிக்கையில் அவன் அங்கு கண்ட சுதேசிகளை "இந்தியர்கள்" எனக் குறித்துச் சென்றான். 1497இல் அமெரிக்க வென்பூசியஸ் என்பவன் கொலம்பஸ் கண்ட பாதையில் பயணப்பட்டு இந்த அமெரிக்கக் கண்டத்தினைக் கண்டறிந்து, அத்திலாந்திக்கில் புதியதொரு கண்டம் இருப்பதை நிலைநாட்டினான். கொலம்பஸ் குறித்த இந்தியர்கள் அமெரிக்கச் சுதேசிகள் எனப்புரிந்ததால், இந்தியர்களிடமிருந்து அவர்களை வேறுபடுத்தும் நோக்கில் அவர்கள் 'செவ்விந்தியர்கள்' என்றழைக்கப்பட்டனர்.




வெள்ளையர்களின் அக்கால அம்புலன்ஸ் வண்டிகள்.

கனடாவின் ஆதிக் குடிமகன் எங்கள் முன் நின்றிருந்தான்.

"நீங்கள் யார்?" என்று அவன் ஆங்கிலத்தில் வினவினான். உச்சரிப்பில் சுத்தம் இல்லை.

"நான் இலங்கையிலிருந்து வந்திருக்கிறேன். சுற்றுலாப் பயணி..." என்றபோது அவன், "வெல்கம்" என்றான். பின்னர் என்னுடன் வந்த செல்வராசாவை நோக்கி விழிகளை உயர்த்தியபோது, "நான் ஒரு கனேடியன்..." என்று அவர் கூறினார். வயோதிபச் செவ்விந்தியனின் முகம் கடுகடுத்துக் கொண்டது.

"நோ... ஐ ஆம் கனேடியன். யூ ஆர் ஏ சிற்றிசன்..." "இல்லை. நான் தான் கனேடியன். நீங்கள் பிரசாவுரிமை பெற்றவர்கள்"

காரில் ஏறிப் பயணப்படும்போது என் நினைவிலும் மனதிலும் அந்த மனிதன் கூறிய வார்த்தைகள் அடிக்கடி எழுந்துகொண்டிருந்தன. 'நாங்கள் தான் கனேடியர்கள்' என்றான். காரில் ஏறும்போது கரங்களை அசைத்தான்.

அவ்வளவுடன் நின்றிருந்தால் பரவாயில்லை.

"திஸ் இஸ் மை லான்ட்..." "இது என் பூமி..." என்று தன் மார்பில் தட்டிக் கொண்டான். மரம் ஒன்றில் பொல்லால் தட்டிய சத்தம் எழுந்தது. நான் சற்றுத் திகைத்துவிட்டேன். என்னை அழைத்து வந்தவர் எதுவித பதற்றமும் அடையவில்லை.

"இவர்கள்இப்படித்தான். கனடாவின் ஆதி மக்கள். நேற்றிவ்ஸ்... கனடாவின் முதலாவது பிரசைகளாகச் சட்டப்படி இவர்கள்தான் கருதப்படுகின்றனர். இவர்களுக்கு இந்த நாட்டில் கிடைக்கின்ற சலுகைகள் கொஞ்சநஞ்சமல்ல. ஒவ்வொருவருக்கும் வெல்பயர் காசு கிடைக்கிறது. பொருள்களுக்கு விற்பனை வரியில்லை. நேற்றிவ்ஸ் என்ற அடையாளத்தை நிறுவியதும் சலுகை உள்ளது. கிடைக்கின்ற பணத்தைக் கண்டபடி இறைத்துச் செலவிடுவர். போதைவஸ்து பாவிப்பர். பனிக்குளிர் இவர்களை எதுவும் செய்வதில்லை. கடும்பனி கொட்டும் வின்ரரில் நள்ளிரவில் குடித்துவிட்டு வீதியில் ஆர்ப்பாட்டம் செய்வர். வீதியோரத்தில் விழுந்தும் கிடப்பர்."

செவ்விந்தியர்கள் பரிதாபத்துக்குரியவர்கள் எனப்படுகின்றது. அமெரிக்கக்கண்டங்களில் தன்னிச்சையாகவும் சுதந்திரமாகவும் வேட்டையாடி அலைந்து இயற்கையின் குழந்தைகளாகத் திரிந்தவர்களை அமெரிக்கக் குடியேற்றங்கள் அழித்துவிட்டன. இயற்கையின் குழந்தைகள் நவநாகரிக ஆக்கிரமிப்பின் அசுர கரங்களுக்குள் முடக்கப்பட்டுவிட்டனர். தம் அடையாளங்களைப் படிப்படியாக இழந்துவிட்டனர். கனடா அரசு அவர்களுக்கு வழங்குகின்ற சலுகைகள் அனைத்தும் அவர்களின் கிளர்ந்தெழலைத் தடுப்பதற்காகவும், தாங்கள் அச்சுதேசிகளுக்கு இழைத்துவிட்ட கொடுமைகளுக்கு பரிகாரம் செய்வது போலவும் எனக்குப்படுகின்றன. அவை தாம் உண்மை. இலங்கையின் சுதேசிகளான நாகரும் இயக்கரும் கூட விஜயனின் வருகைக்குப் பின்னர் நிகழ்ந்த சிங்களக் குடியேற்றங்களால் ஆள்புல ஆக்கிரமிப்பிற்கும் கலாசார ஆக்கிரமிப்பிற்கும் உள்ளாகிப்போன மானிடச் சோகம் நினைவு வருகின்றது.

அமெரிக்காக்கள் கண்டுபிடிக்கப்பட்டபோது இவ்விரு கண்டங்களிலும் வாழ்ந்த செவ்விந்தியர்களின் தொகை ஏறத்தாழ 45 லட்சங்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது. குடியேற்றங்கள் உருவானபோது செவ்விந்தியர்களின் எதிர்ப்புக்கு ஈடுகொடுத்து, செவ்விந்தியர்களின் சடலங்களின் மேலேதான் அமெரிக்கக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. இப்பொழுது கனடாவிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் 5 இலட்சம் செவ்விந்தியர்கள் உள்ளனர். மெக்சிக்கோவில் இந்த எண்ணிக்கை அதிகம். இருபது ஆயிரமாண்டுகளாக அமெரிக்கக் கண்டங்களில் வாழ்ந்து நிலைத்திருந்த இனத்தின் அழிவு இவ்விதமாக அருகிப்போனமைக்குக் காரணங்கள் பலவாகும். முக்கியமானது அமெரிக்கச் சுதேசிகளிடம் நெருங்கிய ஒற்றுமையிருக்கவில்லை. அவர்கள் சிறு சிறு குழுக்களாகப்பிரிந்து தம் ஆள் புலங்களை நிறுவிக்கொண்டிருந்தனர். வேட்டையாடுபவர்கள், காய்கனிகளைத் தேடியுண்பவர்கள் என்ற விதத்தில் மட்டுமே அவர்களிடம் ஒற்றுமையிருந்தது. பல்வேறு இனக் குடும்பங்களாக அவர்கள் விளங்கினர். கரீப், ஆராவக், மாயன்ஸ், ஹெஹோக்காம், நாசிஸ், குவாக்கியூட்டல், ஹெய்சாடிலிங்கிட், எஸ்கிமோவர் எனப் பல பிரிவுகள். இருநூறுக்கு மேற்பட்ட மொழிகளை அவர்கள் பேசினர். அவை 53 மொழிக் குடும்பங்களைச் சேர்ந்தவை. இவ்வாறு அவர்களிடம் காணப்பட்ட பிரிவினைகளும், நவீன தொழில்நுட்பங்களின் விளைவான ஆங்கிலேய, பிரான்சிய, ஸ்பானிய ஆக்கிரமிப்பாளர்களின் ஆயுதங்களுக்கு எதிர் நிற்க முடியாமையும் அமெரிக்கக் கண்டங்களை இழக்க வைத்தன.

மிகப்பண்டைக்காலத்திலிருந்தே கனேடிய செவ்விந்தியர்கள் இப்பிரதேசங்களில் பரவி வாழ்ந்து வந்திருக்கின்றனர். கிறீன்லாந்திலிருந்து அலாஸ்கா வரையிலான நிலப்பரப்பில் வாழ்ந்திருந்த இம்மக்களின் பூர்வீகம் மத்திய ஆசியாவெனக் கருதப்படுகின்றது. இவர்கள் ஆசியாக்கண்டத்திலிருந்து பெரிங்தொடுகடலூடாக அலாஸ்காவிற்குள் வந்தவர்களெனக் கருதப்படுகின்றது. ஆசியாவையும் அலாஸ்காவையும் இணைத்துப் பெரிங் தொடுகடலை மேவி நிலப்பாலமொன்று இருந்திருக்கவேண்டுமெனவும் அதனூடாக இடம்பெயர்ந்து கனடாவில் குடிபுகுந்தனரெனவும் நம்பப்படுகின்றது. இவ்வாறுதான் இந்தியாவையும் இலங்கையையும் இணைத்த நிலப்பாலத்தினூடாக - சேது பந்தனமூடாக - திராவிட இன மக்கள் விஜயனுக்கு முன்னரே நாகர்களாகவும் இயக்கர்களாகவும் இலங்கையில் வந்து புகுந்து நிலைத்திருந்தனர் என நான் எண்ணிக் கொண்டேன்.



மாமோறா என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி செவ்விந்தியக் கூடாரங்களும் சடங்குச் சின்னங்களும்.

கனடாவில் பரந்து விரிந்து சமவெளிகளில் சிதறி வாழ்ந்த செவ்விந்தியர்கள் இன்று நவீன நாகரிகத்தில் உள்வாங்கப்பட்டு அடையாளங்களை இழந்துவிட்ட போதிலும், கனடா தங்களது நிலம் என்பதனை மறந்துவிடவில்லை. கனடாவின் முதற் பிரசைகள் என்ற அரசியல் அந்தஸ்தும் ஏனைய குடியேற்றவாசிகளுக்கு இல்லாத பல்வேறு சமூகப் பொருளாதாரச் சலுகைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற போதிலும் - அவர்களின் உள்ளங்களில் இயற்கையின் மனிதர்களாக அப்பரந்த நிலப்பரப்பிற்கு உரிமையுள்ளவர்களாக வாழ்ந்த வாழ்க்கையின் இனிமையையும் சுதந்திரத்தையும் மறந்துவிடமுடியவில்லை. ஐரோப்பியர்கள் கனடாவின் கரைகளில் கால்களைப் பதித்த காலத்தில் கனடாவின் பெரும்பகுதிகளில் வசித்த செவ்விந்தியர்கள் தங்களுக்கென அரசியல் கொள்கைகளையும், சட்டங்களையும், தமக்கெனச் சிறப்பான பழக்கவழக்கங்களையும் சடங்குகளையும் கொண்டிருந்தனர். ஐரோப்பியருடனான தொடர்ந்த யுத்தம், பரவிய கொள்ளைநோய்கள், ஆக்கிரமிப்பிற்குள்ளான நிலப்பிரதேசக் குறுக்கம், வேட்டை விலங்குகள் அருகியமை முதலான பலகாரணிகளால் கனடாவின் செவ்விந்தியர்களின் தொகை மூன்றிலொன்றாக மாறிவிட்டது. எனினும் கனடாவின் இந்தச் சுதேசிகள் தம் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான கோரிக்கைகளைக் காலத்திற்குக்காலம் முன்வைத்தனர். தங்களுக்கென ஒரு தனிஆள்புலம் தேவையென வாதிட்டனர். அதன் பயனாக 1999ஆம் ஆண்டு அவர்களுக்கென 'நுனாவுட்' என்ற ஒரு மாநிலம் உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. 'நுனாவுட்' என்றால் அர்த்தம் 'எங்கள் நிலம்' என்பதாகும். கனடாவின் வடபாகத்தில் பனிபடர்ந்த ஆக்டிக் பிரதேசத்தில் நுனாவுட் மாநிலம் அமைந்துள்ளது. இப்பகுதியில் பெருந்தொகையினராக வாழ்ந்துவரும் இன்யூட் என்ற செவ்விந்தியச் சுதேசிகளுக்கும் கனடா அரசுக்கும் இடையில் நிகழ்ந்த ஒப்பந்தப்படி இந்த மாநிலம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. ஆயிரமாயிரமாண்டுகளாக இப்பகுதியில் வசித்துவரும் மக்களின் ஆள்புல உரிமையை கனேடிய அரசு மதித்திருக்கின்றது.

ஆரம்பத்திலிருந்தே மாநிலங்களின் சுயாதிபத்திய உரிமையை மதிக்கும் பண்பு கனடாவிலிருந்து வருகின்றது. கனடாவின் முதற் பிரதமராக விளங்கிய சேர்.ஜோன் அலெக்சாண்டர் மக்டொனால்ட், 1867 இல் வடஅமெரிக்காவின் பிரித்தானியக் குடியேற்ற மாநிலங்களை ஒன்றாக்குவதில் அக்கறை காட்டினார். பிரித்தானிய வடஅமெரிக்கச் சட்டப்படி முதலில் ஒன்ராறியோ, குயிபெக்,நோவாகோசியா,நியூபுறுன்ஸ்விக் ஆகிய மாநிலங்கள் கனேடியக் குடியரசில் இணைந்துகொண்டன. பின்னர் மானிற்றோபா,பிரித்தானியகொலம்பியா, பிரின்ஸ்போவார்ட் தீவுகள், சஸ்கற்சிவான், அல்பேட்டா ஆகிய மாநிலங்கள் இணைந்துகொண்டன. 1949 இல் நியூபவுன்லாந்து இணைந்து கொண்டது. இன்று, 1999இல் செவ்விந்திய மாநிலமான நுனாவுட் தனக்கென்ற தனியரசுடன் கனடாவின் குடியரசில் இணைந்துகொண்டிருக்கின்றது.

எனது கனடாப் பயணம் நிகழ்வதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னர்தான் நுனாவுட் மாநிலம் அங்கீகரிக்கப்பட்டது. காரில் செல்வராசாவுடன் பயணப்படும்போது நுனாவுட் மாநிலத்தின் உருவாக்கம் மனதில் எழுந்து கொண்டிருந்தது. பீற்றர்ஸ்புருக்கிலிருந்து ஒன்ராறியோ நோக்கிப் பயணப்பட்டநேரம். செவ்விந்திய மாதிரிக்கிராமத்தில் "இது என் நிலம்...நாடு" என்று மார்ப்பில் தட்டி அறைந்த அந்த மனிதனை எண்ணிக்கொண்டேன். அத்துடன் ஆங்கிலவரசிடம் தன் பிரதேசத்தை - தன்னின அழிவைக் காப்பாற்றுவதற்காக இறுதியில் விட்டுக் கொடுத்த கடைசிச் செவ்விந்தியத் தலைவன் சியாட்டில் (சியாட்டில் வாசகம் எனப்படும்) என்பானின் வார்த்தைகள் நினைவில் எழுந்தன.

"நாங்கள் நிலத்தினை விற்காவிட்டால் வெள்ளையர்கள் துப்பாக்கிகளுடன் வந்து எமது நிலத்தை எடுத்துக் கொள்வார்கள். எப்படி வானத்தை, நிலத்தின் வெப்பத்தை விற்கவோ வாங்கவோ முடியும்? இப்பூமியின் ஒவ்வொரு பகுதியும் எனது மக்களுக்குப் புனிதமானது. இந்த அழகான பூமியை நாம் இறந்தபின்பும் மறந்துவிடுவதில்லை. இது செவ்விந்தியனின் தாய். நாங்கள் பூமியின் ஒரு பகுதி. அருவிகளிலும் ஆறுகளிலும் அசைந்து செல்லும் பளிச்சென்ற நீரானது உண்மையில் வெறும் நீரன்று. அது எமது முன்னோரின் இரத்தம். உங்கள் நகரங்களின் காட்சிகள் செவ்விந்தியனின் கண்களுக்கு வலியை ஏற்படுத்துகின்றன. பூமி எமக்குச் சொந்தமானதல்ல. மனிதன்தான் பூமிக்குச் சொந்தமானவன். வெள்ளை மனிதனின் நகரங்களில் அமைதியான இடம் எதுவுமில்லை. உனது காலடிக்குக் கீழுள்ள நிலமானது எமது மூதாதையரின் சாம்பல் என உன் குழந்தைகளுக்குச் சொல்லிவை."

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகசபை மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுமா?

எமது வீட்டில் இராணுவத்தினர் இருக்கின்றனர். அதற்கான வாடகை எமக்குத் தரப்படுவதில்லை. ஆனால் நாம் எமது நிதிவசதிக்கு அப்பாற்பட்ட விதத்தில் வாடகை கொடுத்தே அடுத்தவர்களின் வீடுகளில் வாழ்கிறோம் - இவ்வாறு கவலை தெரிவிக்கும், கஷ்டப்படும், குறைப்படும் மக்கள் நூற்றுக்கணக்கில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளனர்.

இவர்களில் அநேகமானோர் வலிகாமம் வடக்கைச் சேர்ந்தவர்கள். தெல்லிப்பழையின் சில பகுதிகள் காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி போன்ற கிராமங்கள், பட்டினங்கள் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அடங்குகின்றன. அங்கு மக்கள் இப்போதைக்கு மீளக் குடியமரக் கூடிய வாய்ப்பு அறவே இல்லை.

மேலும் அவர்களில் பெரும்பாலானோரின் வீடுகள் அழிக்கப்பட்டு விட்டன; அல்லது சேதமடைந்துள்ளன. கணிசமானோரின் வீடுளைப் படையினர் பயன்படுத்துகின்றனர்.

தமது சொந்த வீடுகளை எட்டியும் பார்க்க முடியாத ஆயிரக்கணக்கானோரில் 1,662 குடும்பங்களைச் சேர்ந்த 6,923 பேர் நலன்புரி நிலையங்களில் வசிக்கின்றனர். ஏனையோர் தமது உறவினர்களுடனும் வெவ்வேறு தூரக்கிராமங்களில் வாடகைக்கு வீடுகளை எடுத்து வசிக்கிறார்கள். வலி.வடக்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் எண்ணிக்கையில் குறைவாயினும் பலர் தமது வீடுகள் படையினரின் பாவிப்பில் இருப்பதால் வேறு வீடுகளிலும் வசிக்கும் நிலை உருவாகியுள்ளது.

இவர்கள் தமது வீடுகளுக்கு வாடகை பெற்றுத்தருமாறு இப்போது அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்துள்ளனர். இந்திய இராணுவத்தினர் இங்கு நிலைகொண்டிருந்தபோது, தாம் பயன்படுத்திய பொதுமக்களின் வீடுகளுக்கு வாடகை கொடுத்தனர் என்பது இங்கு கவனத்தில் எடுக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

இராணுவத்தினர், வசமுள்ள - அவர்கள் பயன்படுத்தும் - வீடுகளின் சரியான எண்ணிக்கை குறித்த புள்ளிவிவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. எனினும் அச்செழுப் பகுதியைச்சேர்ந்த 48 குடும்பத்தினர் தமது வீடுகள் இராணுவத்தினர் வசமுள்ளதாகவும் அவற்றுக்கு வாடகை தரவேண்டும் என்றும் கேட்டுள்ளனர்.

இதேவேளை இராணுவ நடவடிக்கைகளால் 78,616 வீடுகள் சேதமடைந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இப்போது 18,700 குடும்பங்கள் தமது வீடுகளில் வசிக்கமுடியாது நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் வாழ்கின்றனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

"ஒரு வீட்டைக் கட்டிப் பார்" -என்பது பேச்சு வழக்கு. வீடு கட்டினால் இயற்கையின் தாக்கங்களில் இருந்து தப்பி வசதியாக வாழலாம் என்பது எவ்வளவு உண்மையோ, அதே போன்று ஒரு வீட்டைக் கட்டுவது மிகவும் கஷ்டமான காரியம் என்பதும் உண்மையாகும். எவ்வளவு நிதி வசதி இருந்தாலும் வீட்டை நினைத்தவுடன் கட்டிவிட முடியாது.

யாழ்ப்பாணத்து மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்தே வீடு கட்டுவதற்குத் தேவையான பணத்தைத் தேடினார்கள். தமது ஏனைய பல செலவுகளை ஒறுத்தே - கிராம வழக்கில் சொல்வதானால் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டியே - வீடு கட்டுவதற்கான பணத்தைப் பெரும்பாலானோர் தேடினர். மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக அரசாங்க ஊழியர்கள் கடன் வசதிகளைப் பயன்படுத்தி வீடுகளைக் கட்டிவிட்டு, அவற்றைத் திரும்பச் செலுத்துவதற்காகப் பல கஷ்டங்களை அனுபவிப்பது உண்டு.

இவ்வாறு கஷ்டப்பட்டுக் கட்டிய தமது சொந்த வீடுகளில் வசிக்கமுடியாமல், வேறு கிராமங்களில் மற்றவர்களின் வீடுகளில் வாடகை செலுத்திக் கஷ்டப்படுவோரின் நிலையைச் சம்பந்தப்பட்டவர்கள் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களின் நலன்களில் அக்கறையுள்ளோர் ஒன்றில் வீடுகளை திரும்பக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வாடகையாவது செலுத்த வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பரா?

* * *

## பாண்விலை

கோதுமை மா யாழ்ப்பாணப் பகுதியில் அறிமுகமானபோது எங்களின் முந்திய சந்ததியினர் வைத்த பெயர் பசைமா. அதற்குக் காரணம் உண்டு. அதனை உணவுப்பொருளாக ஏற்க எமது பிரதேசத்தின் பொருள்வளம் இடங்கொடுக்கவில்லை. காலையில் அரிசிமா பலகாரம் சாப்பிடவசதி இல்லாதவர்கள் கூட, கஞ்சியையோ, மரவள்ளிக்கிழங்கையோ, ஒடியல் பிட்டையோ ஆகக்குறைந்தது பனங்காயையோ சாப்பிட விரும்பினார்களே அன்றி கோதுமைமாவை உணவாக்கிக்கொள்ள முன்வரவில்லை.

கோதுமை மா இங்கு வந்த புதிதில் அலங்கார சோடனை வேலைகளுக்கு வர்ணக் கடதாசிகளை ஒட்டுவதற்கும், சுவரொட்டிகள் ஒட்டுவதற்கும், பிரேதங்களை எடுத்துச் செல்லும் பாடைகளைச் சோடனை செய்வதற்குமே பசையாகப் பயன்படுத்தப்பட்டது.

வருடங்கள் செல்லக் கோதுமை மா பாணாக மாற்றப்பட்டு மாலைநேர அல்லது இரவுநேர உணவாகப் புகுந்துகொண்டது. பின்னர் வெதுப்பகங்கள் எனப்படும் பேக்கரிகள் பெருக, அவை தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு இங்கு தொழில் வாய்ப்பளிக்க, பாண் குடாநாட்டு மக்களின் உணவுப் பண்டங்களில் ஒன்றாகியது.

காலப் போக்கில் கோதுமைப் பண்டங்கள் தவிர்க்க முடியாதவையாகி,பாண் பிரதான உணவுப் பொருளாகியது. இப்போது குடாநாட்டைச் சேர்ந்த பலரின் மூன்றுநேர உணவாகக் கூடப் பாண் மாறிவிட்டது, பாருங்களேன்!

பாண் சாப்பிடுவது இப்போது வசதியாகிவிட்டது. உணவு தயாரிப்பதற்கு ஆகும் நேரம் மிச்சம், விறகு மிச்சம், வேலை மிச்சம் என்று பல மிச்சங்கள் உள்ளதால் பாண் கிராக்கி உள்ள உணவாகிவிட்டது. குடாநாட்டில் அரிசி உற்பத்தி வருடாந்தம் குறைந்து கொண்டே வருவதால் பாணுக்கு உள்ள கிராக்கி ஒரு போதும் மாறாது.

இதனை மற்றும் எல்லோரையும் விட மிக நன்றாக அறிந்தவர்கள் பேக்கரி உரிமயாளர்கள் என்றே சொல்லலாம். அதனாலேயே அவர்களில் பலரும், கோதுமைமாவின் விலை ஒரு ரூபாவால் குறைக்கப்பட்ட போதிலும் பாணின் விலையைக் குறைக்காது முந்திய விலைக்கே விற்கிறார்கள்!

கோதுமை மாவின் விலை கடந்த மாதம் பதினேழாம் திகதி தொடக்கம் ஒரு ரூபா குறைக்கப்பட்டுள்ளது. இப்போது குடாநாட்டில் ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 17ரூபா 15சதமாக; அதற்கு முன்னர் 18ரூபா 15சதமாக விற்பனையாகியது.

கோதுமை மாவின் விலை குறைந்துள்ள போதிலும் பாணின் விலை 9ரூபாவிலிருந்து இன்னும் குறையவில்லை. ஒரு இறாத்தல் பாணின் நிறை 450கிராமாக இருக்கவேண்டும் என்பது தான் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதி. ஆனால் 1995ஆம் ஆண்டுக்கு முன்னர் கோதுமை மா கிடைப்பதில் உள்ள கஷ்டங்களின் நிமித்தம், அடிக்கடி தட்டுப்பாடு உண்டானதன் காரணமாக 350கிராமே ஒரு இறாத்தல் பாணின் நிறையாகத் தொடர்கிறது. அதில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. அது தனி விவகாரம்.

ஆனால் கோதுமைமாவின் விலை ஒரு ரூபாவால் குறைந்தபோதிலும் பாணின் விலை குறைக்கப்படாதது ஏன் என்று பாவனையாளர்கள் கேட்கிறார்கள். எந்தப்பொருளின் விலையும் அதிகரிக்கப்படும்போது, அறிவிப்பு வந்ததும் வராததுமாக புதிய விலையை அறவிடுவது வர்த்தகர்களின் வழக்கம். ஆனால் விலை குறைந்துவிட்டால் மக்கள் - பாவனையாளர்கள் - வாய்விட்டுக் கேட்டாலும் தெரியாதவர்கள்போல நடித்துக் கொண்டு - முந்திய விலையையே அறவிடுவார்கள். இது இந்தக்காலத்தின் வர்த்தக வரன்முறைகளில் ஒன்றாகிவிட்டது! ஒரு சில பேக்கரிகள் பாணை எட்டு ரூபாவுக்கும் விற்பனைசெய்கின்றன என்பதனை மறுப்பதற்கில்லை. ஆனால் மிகப் பெரும்பாலான பேக்கரிகளின் உரிமையாளர்கள் விலையைக் குறைக்கப் பின்னடிக்கின்றனர் என்று தெரியவந்துள்ளது.

முந்திய விலையில் வாங்கிய கோதுமை மாவைக் கொண்டே தாம் இன்னமும் பாண் தயாரிப்பதாக பேக்கரி உரிமையாளர்கள் காரணம் கூறலாம். ஆனால் விலையைக் குறைக்கும் விருப்பமே இல்லாமல், மக்கள் நலனை கருத்தில். கொள்ளாமல் அவை செயற்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

1995ஆம் ஆண்டுக்கு முன்னரைப் போலன்றி, கோதுமை மா இப்போது தாராளமாகக் கிடைக்கிறது. இப்போது விலையும் குறைக்கப்பட்டுள்ளது. இந்த நன்மைகள் பாவனையாளர்களைப் போய்ச் சேருவதற்கு பேக்கரி உரிமையாளர்கள் தடையாக இருப்பது எந்த வகையிலும் நியாயமாகாது. மக்களைக் கொள்ளை அடிப்பதாகவே கருதப்படவேண்டும்.

பேக்கரி உரிமையாளர்கள் கோதுமைமாவை தனியார் துறையிடமிருந்து வாங்குவதற்கு இடம் வைக்காமல், அந்தந்தப் பிரதேச பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கொள்வனவு செய்ய வசதி செய்ய முடியாதா?

அரசாங்கம் செய்துள்ள நன்மைகள் மக்களைச் சென்றடையவிடாது அவற்றைத் தாம் ஏப்பம் விடநினைக்கும் எவரும் மக்கள் துரோகிகளாகவே கருதப்படுவர். ஒரு இறாத்தல் பாணின் விலை ஆகக்குறைந்தது ஐம்பது சதமேனும் குறைக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாக உள்ளது.

அரசாங்க அதிகாரிகள் இது விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டும். குடாநாட்டு மக்களை வர்த்தகர்கள் தொடர்ந்து மடையர்கள், எதனை எப்படிக் கொடுத்தாலும் வாங்கும் வர்க்கம் என்று வகுக்க இடம்கொடுக்கலாகாது. அரச அதிகாரிகளின் திறமையையும் மக்கள் நலன் நாடியவர்களா என்பதனையும் சோதிப்பதற்கு தமக்கு இது நல்ல சந்தர்ப்பம் என்கிறார் ஸ்ரீமான் பொதுஜனம். உண்மையில் அரச அதிகாரிகளுக்கு இது ஒரு சவாலாகும்!

* * *

படையினரால் கைது செய்யப்படுவோர் நீதி விசாரணைக்காக அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு அனுப்பப்படும் நடைமுறையில் மாற்றம் வருவதற்கான சமிக்ஞைகள் தெரிகின்றன. பருத்தித்துறை - மல்லாகம் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவுக்கு பிரதம நீதியரசர் சரத்சில்வா எழுதிய கடிதத்தை அந்த சமிக்ஞைகளுக்கான முன்னோடி எனலாம்.

வழக்குத் தவணைக்காக அனுராதபுரம் நீதிமன்றத்துக்குச்செல்ல முடியாததோரின் வழக்குகளை இங்கே விசாரிக்கலாம், மாற்று நடவடிக்கை எடுக்கலாம். என்று பிரதம நீதியரசர் எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

இந்த ஆரம்பம் யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம் ஒன்றை மீண்டும் இயங்கச்செய்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை இங்கேயே தாக்கல்செய்யவும் விசாரிக்கவும் வழிசமைக்க வேண்டும் என்பதே குடாநாட்டு மக்களின் பெரும்பாலானோரின் விருப்பமாகும்.

குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்படும் இளைஞர்களும் ஏனையோரும் நீதி விசாரணைக்காக அங்கு அழைத்துச் செல்லப்படுவதால் வழக்கு விசாரணைகள் அங்கு நடைபெறுவதால் அவர்களின் பெற்றோருக்கு உண்டாகும் சிரமங்கள், கஷ்டங்கள், பணச்செலவுகள், அனந்தம் ஆகையால் இந்த நடைமுறை நிறுத்தப்பட்டு வழக்குகளை இங்கேயே தாக்கல் செய்யவும் விசாரிக்கவும் ஏற்பாடு செய்யப்படவேண்டும் என முன்னரும் இப்பத்தியில் வலியுறுத்தியிருந்தோம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நீதிமன்றங்கள் இயங்கும்போது இந்தப்பிரதேசத்தின் நியாயாதிக்கத்துக்குட்பட்ட மக்கள் மீதான வழக்குகள் வெளிமாவட்டம் ஒன்றில் தாக்கல் செய்யப்படுவதும், சம்பந்தப்பட்டோர் அங்கு கூட்டிச் செல்லப்படுவதும் நியாயமற்றது; பொருத்தமற்றது.

இதனை குடாநாட்டில் பணியாற்றும் நீதிபரிபாலனத்துறையைச் சேர்ந்தவர்களினதும் அவ்வப்போது குறிப்பிட்டுள்ளனர். இங்குள்ள மனித உரிமை அமைப்புகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மக்கள் அமைப்புகளும் யாழ்ப்பாணத்தில் கைதாவோரை அனுராதபுரத்துக்குக் கூட்டிச்சென்று அங்குள்ள நீதிமன்றில் ஆஜர் செய்து வழக்கு நடத்துவதை நிறுத்தவேண்டும் என்று கேட்டுவருகின்றனர். ஆனால் அது உரியவர்களின் காதுகளில் விழவில்லை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் பருத்தித்துறை - மல்லாகம் நீதிவான் மேற்கொண்ட

> **கோதுமை மாவின் விலை குறைந்தபோதிலும் பாணின் விலையைக் குறைக்கப் பின்னடிப்பு**

முன்முயற்சி இவ்விவகாரத்தில் திரையை கணிசமான அளவு திறக்க வழிசெய்துள்ளது.

ஐந்து லட்சம் மக்கள் வாழும் ஒரு மாவட்டத்தில் மேல்நீதிமன்றத்தை இயங்கச்செய்யாதிருப்பது அவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு வசதி செய்யப்படவில்லை என்றாகிறது. ஒரு வகையில் இது அவர்களின் அடிப்படை உரிமையைப் பறிப்பதாகும் அல்லவா?

மக்கள் மீளக்குடியமர்ந்து சிவில் நிர்வாகம் முழுஅளவில் இயக்கத் தொடங்கி மூன்றரை வருடங்கள் ஆகிவிட்டன. எனினும் முன்னர் இங்கு இயங்கிய மேல் நீதிமன்றத்தை மீண்டும் இன்னும் இயங்கச் செய்யாதிருப்பது குடாநாட்டு மக்களுக்கு நீதிமன்றத்தை மீண்டும் இன்னும் இயங்கச் செய்யாதிருப்பது குடாநாட்டு மக்களுக்கு நீதி மறுப்பதற்கு ஒப்பானதாகும். குடாநாட்டு மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதில் அரசுக்கு அக்கறையில்லை என்ற முடிவுக்கு வரவும் இது வகைசெய்கிறது.

இங்கேயே மேல் நீதிமன்றம் இயங்குமாயின் கைதாவோரும் அவர்களின் உறவினர்களும படும் கஷ்டங்களுக்கு முடிவுகட்டலாம். குடாநாட்டு மக்களுக்குச் சிங்கள் மொழியில் பரிச்சயம் இல்லை. அநுராதபுரத்திலோ தமிழ்மொழி தெரிந்தவர்கள் இல்லை. இத்தகைய பின்னணியில் கைதுசெய்யப்பட்டு அநுராதபுரம் கொண்டுசெல்லப்படுவோரை சிறைச்சாலைக்குச் சென்று பார்ப்பது பெரும் சிரமமான ஒன்று. வழக்குத்தாக்கல் செய்யப்படும்போது கைதானவர் சார்பில் சட்டத்தரணிகளை ஏற்பாடு செய்வதிலும் உறவினர்கள் பல சங்கடங்களை அனுபவிக்கிறார்கள்.

குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டம் செல்வதற்கு பாதுகாப்பு அனுமதி பெறுவது அவ்வாறு பெற்றாலும் அநுராதபுரத்தில் சென்று தங்குவது அங்கு சட்டத்தரணிகளை அமர்த்துவது என்பன பல வகைகளாலும் மக்களை அலைக்கழியச் செய்து பணச்செலவை தருவனவாகும். யாழ். மாவட்ட மக்களின் இந்த நிலையை தமிழ் அரசியல் கட்சிகளும் கண்டுகொண்டதாக இல்லை!

செம்மணியில் சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்ட பின்னர் எழுந்துள்ள நிலையில் தமது பிள்ளைகளைக் காணாது தவிக்கும் பெற்றோர் நீதி கேட்பதற்கு யாழ்ப்பாணத்தில் மேல்நீதிமன்றம் ஒன்று அத்தியாவசியமாகிறது.

தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதில் நேர்மையான ஆர்வமுள்ளவராக சொல்லப்படுபவர் நீதியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். குடாநாட்டு மக்களுக்கான நீதிபரிபாலனம், அவர்களின் கஷ்டங்களை அனுபவிக்கச் செய்யும் விதத்தில் அமையக்கூடாது என்பதில் அவர் தானும் கவனம் செலுத்தவில்லை. சொற்பகாலமல்ல, மூன்றரை வருடங்களாக இந்த அவலங்களை எமது மக்கள் அனுபவிக்கிறார்கள்.

மேல்நீதிமன்றம் இங்கு இயங்காதால் மக்கள் படும் சிரமங்கள் குறித்து அமைச்சர் பீரிஸுக்கும் மகஜர்கள் அனுப்பப்பட்டு இருந்தன. ஆகப் பிந்தி யாழ்ப்பாண மாவட்ட மனிதஉரிமை அமைப்புகளின் ஒன்றியம் அமைச்சர் பீரிஸுக்கு இது தொடர்பாக கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

1990ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கடற்கரை வீதியில் மேல் நீதிமன்றம் இயங்கியது. இராணுவ நடவடிக்கைகளின் போது நீதிமன்றக் கட்டடம் சேதமடைந்தது. எனினும் அது திருத்தப்பட்டு சுமார் ஏழு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. நீதிமன்றக் கட்டடம் திருத்தப்பட்டதைக்கண்டு, மீண்டும் மேல் நீதிமன்றம் இங்கு இயங்கப்போகிறது என்று மக்கள் தமக்குள் பேசிக்கொண்டார்கள் ஆனால் மேல் நீதிமன்றத்தை மீண்டும் இயங்கச் செய்யுங்கள் என்று அமைச்சருக்கு கடிதம் எழுதும் கட்டத்துக்கு இன்னும் முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை.

ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல்களை முன்னிட்டாவது மேல்நீதிமன்றத்தை மீண்டும் இயங்கச் செய்யுமாறு உத்தரவு பிறக்குமோ என்னவோ! குடாநாட்டு மக்கள் அரச தரப்புக்கு வாக்களிப்பார்களா என்பதில் சந்தேகமிருப்பதால் தேர்தலும் இது விடயத்தில் உதவமாட்டாது என்கிறார் ஸ்ரீமான் பொதுஜனம்.

மக்கள் தேவையை பூர்த்தி செய்ய அவர்கள் கஷ்டங்களை அனுபவிக்காமலிருக்க நீதிமன்றம் ஒன்றை மூன்றரை வருடங்களாக இயங்கச் செய்யமுடியாத அரசாங்கம் -

தமிழ் மக்களின் பிரதான விவகாரமான இனப் பிரச்சினையை தீர்த்துவைக்கும் என்று குடாநாட்டு மக்கள் எவ்வாறு நம்புவது? தமிழர் நலன் கருதி கொழும்புக் கட்சிகள் எதனையேனும் செய்தபின்னரே பயன் கைக்கு வந்த பின்னரே அவற்றை நம்பலாம் என்ற நிலையே மிஞ்சியுள்ளதை தேர்தல் காலமான இப்போது அவை உணர்ந்து கொள்ளட்டும்.

* * *

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க தமிழர் தரப்பு மீது முதலாவது தேர்தல் குண்டு ஒன்றைப் போட்டிருக்கிறார். ஜனாதிபதி தேர்தலுக்கு வேட்பாளர் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னரே வாக்குத்தேடும், வெற்றிக்கு வழிதேடும் பல காரியங்களை அவர் ஆற்றி வருகிறார். அவற்றில் ஒன்றுதான் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்தை நடத்துவதற்கு இடைக்கால நிர்வாகசபையை நிறுவும் பிரகடனம். அவசர அவசரமாக, அவசரகாலச் சட்டத்தின் கீழ் இடைக்கால நிர்வாக சபையை நிறுவும் பிரகடனத்தை இம்மாதம் முதலாம் திகதி அவர் விடுத்தார்.

வடக்கு - கிழக்கு நிர்வாகத்துக்கு இடைக்கால சபை ஒன்று அமைக்கப்படவேண்டும் என்பது பிரதானமாக ஈழமக்கள் ஜனநாயக முன்னணியின் நீண்டகாலக் கோரிக்கையாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணசபையின் நிர்வாகம் இப்போது அதிகாரியின் கையில் சிக்கித் திக்குமுக்காடுவது உண்மையே. அரசியல் அதிகாரம் இல்லாததால், அதிகாரிகள் பலர் தமது "ஏகாதிபத்தியத்தை" நடத்தி வருகின்றார்கள்.

ஆனால் இடைக்கால நிர்வாகசபையை இந்த வேளையில் அமைப்பதன் மூலம் பயன் எதுவும் கிடைக்கும் என்று நம்புவதற்கில்லை. ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து அனேகமாக ஓகஸ்ட் மாதத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என அறியப்படுகிறது. இடைப்பட்ட காலங்களில் இடைக்கால நிர்வாகசபை மூலம் எதனைச் சாதிக்க முடியும் என்பது ஒரு கேள்வி.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு தமிழர்களின் உரிமைகளை வழங்காமல் இடைக்கால நிர்வாக சபையை நிறுவித் தங்களை ஏய்க்காட்டும் ஏற்பாடாகவே தமிழ் மக்கள் கருதியுள்ளார்கள்.

## உள்ளும் புறமும்

**குறுமுனி**

இந்த நிர்வாகசபை எதிர்பார்ப்பதற்கு மாறான பயனைத்தரும் என்பதே பலரது அபிப்பிராயமாகவும் இருக்கிறது. இடைக்கால நிர்வாகசபை ஒள்று இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் வழியில் ஒரு தங்குமடமாக மாறிவிடும் என்ற அச்சமும் மக்கள் மத்தியில் நிலவுகிறது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் நான்கு மிழ்க் கட்சிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழீழ விடுதலை இயக்கமும் (ரெலோவும்) இடைக்கால நிர்வாகசபையை எதிர்க்கின்றன. இச்சபை வெறும் எலும்புத்துண்டு. இதனைக் கண்டு ஏமாறக்கூடாது என்று ரெலோ வட்டாரங்கள் தெரிவிதுள்ளன. மூன்று வருடங்களுக்கு முன்னர் இடைக்காலச் சபை நிறுவும் யோசனை தெரிவிக்கப்பட்டபோது தாம் அதனை எதிர்த்ததாகவும், தமிழர் விவகாரத்தை மேலும் மோசமான நிலைக்குத் தள்ளும் ஏற்பாடே இதுவென்றும் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழர் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் இப்போது வெளிநாடு சென்றிருப்பதால் இடைக்காலச் சபை குறித்து முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. அவர் நாளை ஞாயிற்றுக் கிழமை நாடு திரும்பியபின்னரே இது குறித்து முடிவு செய்யப்படும் என்று புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காகவே உரியகாலத்துக்கு முன்னர் தேர்தலை நடத்துவதாகக் கூறும் ஜனாதிபதி, தீர்வைக் காலங்கடத்துவதற்கான முயற்சியாகவே இடைக்காலச் சபையை நிறுவுகின்றார் என்பதே தமிழ் மக்களின் பெருங்கருத்தாக நிலவுகிறது.

உத்தேச இடைக்கால நிர்வாக சபை தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுமா என்ற கேள்வி மக்களிடம் மேலோங்கி நிற்பதை காணமுடிகின்றது.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்

26

## சில குறிப்புகள்

நாட்டுப் பிரிவினை, அதையொட்டி எழுந்த இனக் கலவரத்தின் பயங்கரம் - இவற்றை வைத்துப்பார்க்கையில், சுதந்திரத்திற்காக இந்தியா கொடுத்தவிலை அதிகமென்றுதான் கூறவேண்டும். மற்றெந்தப் பகுதியிலும்பார்க்க அதிகம் பாதிக்கப்பட்டது பஞ்சாப்தான். இந்துக்கள், சீக்கியர், முஸ்லிம்கள் - என்று எல்லா இனத்தவரும் பாதிக்கப்படவே செய்தனர். இந்தப் பாதிப்புகள் - சகல இனத்தையும் சார்ந்த - நுண்ணுணர்வாளர்களையும் விட்டுவைக்கவில்லை. இதன் பயனாய் பல இலக்கியங்களும் உருவெடுத்தன. கடந்தவாரம் குறிப்பிடப்பட்ட குஷ்வந்த் சிங்கின் 'பாகிஸ்தானுக்குப் போகும் ரயில்' அவற்றுள் ஒன்று. அதேயளவு முக்கியத்துவம் பெற்ற இன்னொரு நாவல் கர்த்தார் சிங் துக்கல் எழுதிய 'நகமும் சதையும்'.

குஷ்வந்த் சிங் போல ஆங்கிலத்தில் எழுதாமல் தம் தாய்மொழியான பஞ்சாபியில் எழுதியவர் துக்கல். தம்முடைய இந்த நாவலில், தாம் ஒரு பஞ்சாபி என்பதற்கப்பால், ஒரு மானுடநேயமிக்க படைப்பாளியாக நின்று அந்தத் துரதிருஷ்டமிகுந்த காலகட்டத்தையும் சம்பவங்களையும் கலைப் படைப்பாக்கினார், துக்கல். அந்த நிலைமைகளின் தீவிரத்தின் கீழும் மனிதாபிமானமானது எவ்வாறு மரிக்காமல் நின்று சுடர்விட்டது என்பதைத் தமது நாவலில் கூறினார். தன் கிராமத்திலிருந்த சீக்கியரையும் இந்துக்களையும் காப்பதற்காக தன்னுயிரைத் தியாகம் செய்கின்ற ஒரு முஸ்லிம்; அந்த மனிதனுக்கு நன்றிக்கடன் தீர்க்க விழைகிற ஒரு சீக்கியர் - என இந்த நாவலில் வருகின்ற பாத்திரங்கள், உண்மைச் சம்பவங்களினடியாய் உருக்கொண்டவர்கள் என்பது ஒப்புக்கொள்ளச் சிரமமான ஒன்றன்று.

ராவல்பிண்டிக்கருகில் பிறந்து வளர்ந்து லாகூரில் கல்விகற்ற துக்கல், பிரிவினையுடன் இந்தியப்பகுதிக்குக் குடிபெயர்ந்தார். ஆங்கில இலக்கியத்திலும் நாட்டாரிலக்கியத்திலும் ஈடுபாடுகொண்டிருந்த அவர், ஆல் இந்தியா ரேடியோவில் பணியாற்றினார். பதினாறு கதைத்தொகுதிகள், ஆறு நாவல்கள், நாடகங்கள், கவிதைகள் என - எல்லாம் பஞ்சாபிமொழியிலேயே - எழுதிய துக்கலின் படைப்புகள் உர்து, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன நாவலைத்தவிர 'அணையிட்ட தீ' எனும் அவரது கதைத் தொகுப்பொன்றும் ஆங்கிலத்தில் வெளியாகியுள்ளது. பஞ்சாபி மக்களின் வாழ்முறை, பண்பாடு, பரபரப்பான அரசியல் - என்றெல்லாவற்றையும் பதிவு செய்கின்ற கதைகள் அவை. எளிமையான கருப்பொருட்களூடு, மிகவும் சிறிய வடிவத்தில் இவை எல்லாவற்றையும் எம்மால்பரிச்சயம்கொள்ள முடிகிறது.

பாகிஸ்தானுக்குச் சேர்மதியாகிவிட்ட புறத்திலிருந்து இந்திய எல்லைக்குள் வந்த சீக்கிய எழுத்தாளர் துக்கல் என்றால்; இந்தியாவுக்குச் சேர்ந்துவிட்ட பகுதியிலிருந்து புதிய பாகிஸ்தானில் போய்க் குடியேறிவிட்ட அற்புதமான முஸ்லிம் எழுத்தாளர் ஒருவர் இருந்தார். அவர் சாதத் ஹஸன் மண்டோ. மெய்சிலிர்க்கவைக்கும் சிறுகதைகளைப் படைத்த மேதை.

பஞ்சாபின் லூதியானா மாவட்டத்தில் 1912இல் பிறந்த மண்டோ, தம் வாழ்வின் முக்கியமான பகுதியை பம்பாயில் கழித்தார். 1948 ஜனவரியில் பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்தார். துக்கல் போலவே மண்டோவும் ஆல் இந்தியா ரேடியோவுக்காகப் பணியாற்றினார். பம்பாயில் வாழ்ந்த காலத்தில் திரையுலகுடன் நெருங்கிய தொடர்புவைத்திருந்தது மட்டுமன்றி, பலதிரைப் படங்களுக்கான கதைகளையும் எழுதினார். அவருடைய படைப்புகளில் 'ஆபாசமிருந்தது' என்ற குற்றச்சாட்டின் பேரில் மண்டோ, ஆறு தடவைகள் விசாரணைகளை எதிர்நோக்கவேண்டியும் வந்தது. அவருடைய மகத்தான சிறுகதைகளாகக்கொள்ளப்படும் 'ஐஸிலும் குளிரானது' மற்றும் 'திரும்புதல்' ஆகியவைகூட பாகிஸ்தானிய அதிகாரிகளால் ஆபாசம் எனக் கருதப்பட்டன. 1955இல் லாகூரில் காலமான மண்டோவின் வாழ்வின் இறுதி ஏழு ஆண்டுகளிலுமே அவரது படைப்பாற்றல் உச்சம் பெற்றிருந்தது எனக் கூறப்படுகிறது. இருநூற்றைம்பதிற்கு மேற்பட்ட கதைகள், பல நாடகங்கள், கட்டுரைகள் போன்றவற்றையும் எழுதி, பத்திரிகையாளர், வானொலி - திரைப்பட எழுத்தாளர் என்றெல்லாங் கூட பன்முக அடையாளங் கொண்டவராகத் திகழ்ந்திருந்தபோதிலும், மண்டோவை இலக்கிய உலகில் சிரஞ்சீவியாக ஆக்கிவைத்திருக்கும் பெருமை அவரது அற்புதமான சிறுகதைகளுக்கும், குறுங்கதைகளுக்குமே உரியது. மண்டோ, தமது ஆக்கங்களை உர்து மொழியிலேயே படைத்தார். அவற்றுள் முக்கியமானவை ஆங்கிலத்திலும், பிறமொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. நவீன இந்திய சிறுகதையைப் பொறுத்தளவில் ஒப்பாரும் மிக்காரு மில்லாத ஒருவர், மண்டோ - என்றார், ஸல்மான் ருஷ்டி.

மண்டோவின் குறுங்கதைகளுக்கு உதாரணமாகப் பின்வரும் இருகதைகளைக் காணலாம். பிரிவினையையொட்டி எழுந்த பயங்கர இனக்கலவரத்தைப் பின்னணியாகக் கொண்டவையே இவ்விரண்டும்.

### 'மிஷ்ரேக்'

*வயிற்றைக் கீறிப்பிளந்த கத்தி, நட்ட நடுவே நேராக வந்தது. வந்த வரத்தில், கீழே இறங்கி, அந்த ஆள் போட்டிருந்த பிஜாமாவைக் (காற்சட்டையைக்) கட்டியிருந்த கயிற்றையும் அறுத்துவிட்டது.*

*கத்தியுடன் நின்றவன் ஒரு தரம் சரியாகக் கவனித்து விட்டுக் கத்தினான்:- 'அட, சே! மிஷ்ரேக்!'*

### நன்றி கெட்டசனம்

*"என்ன நன்றிகெட்ட சனமடா, இது? எவ்வளவு கஷ்டப்பட்டு ஐம்பது பன்றிகளை இந்த மசூதிக்கு முன்னாலை வைச்சு வெட்டினன்? வாங்கிறதுக்கு ஒரு பயலாவது வாறானா, பார்? அந்தப்பக்கம், ஒவ்வொரு கோவிலுக்கும் முன்னாலை மாட்டிறைச்சி வாங்கிறதுக்கு எவ்வளவு சனம் கியூ விலை நிக்குது தெரியுமா?"*

மண்டோ பற்றிக் குறிப்பிடுகையில், பிரேம்சந்த்நினைவில்வருவது தவிர்க்க முடியாதது. உர்துவிலும் இந்தியிலும் எழுதியபோதும், நவீன இந்தி மொழிப் புனைகதை முன்னோடி அவர். எனவே பிரேம்சந்த் இன்றும் அடையாளம் பெறுகிறார். ருபாப்ராய் என்ற இயற்பெயர் கொண்ட பிரேம்சந்த், இந்தி நாவல் இலக்கியத்திற்குப் புதுத்தென்பும் புத்துயிருமளித்தவர். அவருக்கு முற்பட்ட இந்தி நாவல்கள், மண்ணில் காலூன்றாமல் கதை சொல்லிச்சென்றன. இந்நிலையில் அவருடைய 'கோதான்' - கோதானம் - ஒரு திருப்புமுனையாக அமைந்தது. பிரேம்சந்தின் சிறுகதைகளும் அவருடைய நாவல்துறைப் பங்களிப்புக்குச் சற்றும் குறைந்தவையல்ல. சிறுகதைக்கு இலக்கணமாகக் கொள்ளப்பட்ட பல கதைகளை பிரேம்சந்த் எழுதினார். சமூகப்பொறுப்புணர்வுடன் ஆக்கப்பட்ட படைப்புகள் அவை. நாட்டின் அன்றைய சமூக, பொருளாதார நிலைமைகளை உயிரோட்டத்துடன் படம்பிடிக்க முற்பட்டமையுடன் அமையாது, பிரச்சினைகளுக்குத் தீர்வைச் சுட்டவும் அவைமுனைந்தன. பிரேம்சந்த் வெறும் எழுத்துடன் மட்டும் நின்றவரல்லர்; காந்திஜின் ஒத்துழையாமை இயக்க அறைகூவலுக்குச் செவிசாய்த்து, பாடசாலைப் பரிசோதகர் என்ற தமது அரசு உத்தியோகத்தைத் துறந்தவர்.

### சாந்தன்

இந்தியின் நவீன இலக்கியத்தில் பரிசோதனை முயற்சிகளைச் செய்து பார்த்தவராகக் குறிப்பிடப்படுபவர். 'ஆக்யேய' என்ற புனைபெயரைக் கொண்டிருந்த சச்சிதானந்த வாத்ஸ்யாயன். இந்தி இலக்கியத்தில் இரண்டு தசாப்தங்கட்கு மேல் பெரும் செல்வாக்குச் செலுத்தியவர் இவர். நாவல்களும், கவிதைகளுமாக, இருபதுக்கும் மேற்பட்ட நூல்களாக அவரது ஆக்கங்கள் வெளியாயின. 'அவரவர் அந்நியர்' என்ற ஆக்யேயவின் சிறிய நாவல், இருத்தல், இறப்பு, இறைவன், போன்ற விஷயங்களைப் பேசுவது.

இந்திய சுதந்திரத்திற்குப் பிற்பட்ட இந்தி எழுத்தாளர் தலைமுறையைச் சார்ந்தவர்கள், ஸ்ரீகாந்தவர்மா, ஸ்ரீலால் சுக்ல போன்றோர். இவர்களில் பின்னவர் எழுதிய 'தர்பாரிராகம்' என்ற நாவல், பிந்தியகால இந்திமொழி நாவல்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகக் கருதப்பட்டு - தமிழ்உட்பட - இந்தியமொழிகள் யாவற்றிலும் 'நேஷனல் புக்ட்ரஸ்ட் - இந்தியா'வால் வெளியிடப்பட்டது. நகரங்களிலும், கிராமங்களிலும் அரசியலும் ஏனைய சந்தடிகளும் ஏற்படுத்தும் குழப்பங்களை அங்கதச்சுவையுடன் கூறும் படைப்பு இது.

(தொடரும்)

## ஐந்துசதம்....

( X ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாவுகளும் சொற்களுக்குச் சூடேற்றி உதிர்ப்பதைக் கண்டு பழக்கப்பட்ட எனக்கு மேலே கதைக்கப் பயமாக இருந்தது.

ஆனால் ஐந்து சதத்திற்கு ஏதாவது செய்தேயாக வேண்டுமே.

"காசைக் கெதியாய் தாரும்" நடத்துநர் கையை நீட்டினார்.

என் விழிகளின் மிரட்சி பார்த்தவர்களுக்கு என் நிலையைப் புரிய வைத்திருக்கும். நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டதுபோலப் புரள மறுத்தது.

சமயசந்தர்ப்பம் தெரிந்து அப்பாவின் சட்டைப்பை நிறைய இருக்கும் பணம் நினைவுக்கு வந்தது.

அங்கு எவ்வளவு இருந்தென்ன? எனக்குஇப்போதுஐந்துசதம்வேண்டுமே.

"ஐந்து சதம் குறை...இ...ல்...லை." நான் தடுமாறினேன். குரல் குளறியது.

"ரிக்கற் போட்டாச்சு. முதலே சொல்லியிருக்க வேணும்." நடத்துநர் இளகுவதாக இல்லை.

சுற்றிவரப் பார்க்கிறேன். தெரிந்த முகம் எதுவுமில்லை. அந்த நெரிசலிலும் பல முகங்கள் எட்டி என்னை வேடிக்கை பார்ப்பதைக் காண மனம் குன்றிக் குறுகியது. கண்கள் கலங்க பரிதாபமாக நான் நின்றேன்.

ஒரு பெண் என்னை ஆதரவாகப் பார்த்தாள். சந்தையில் வியாபாரம் முடிந்து திரும்புகிறவளாக இருக்க வேண்டுமென அவளது தோற்றம் கூறியது.

"காசைத் துலைச்சுப் போட்டீரே?" அன்பான அவளுடைய விசாரணைக்குப்பதிலாகப் பொய் கூறமனம் துணியவில்லை.

"ம்...ம்...கச்சான் வாங்கிச் சாப்பிட்டனான். இளவாலையிலை இறங்க நினைச்சனான். மறந்துபோய் எப்போதும் போலை சேந்தாங்குளம்எண்டு சொல்லிப் போட்டன்" ஓர் ஆதரவைக் கண்டதும் என் நிலையை மனம் விட்டுக் கூறினேன்.

"இந்தாரும் ஐந்து சதம். கொண்டக்டரட்டைக் குடும்" அந்தப் பெண் அன்போடு தந்தாள். ஆனால் என்கை பிச்சையேற்பது போல வாங்கக் கூசியது.

இருப்பினும் வேறு வழியேது? கை நீட்டி வாங்கினேன்.

அச்சம்பவம் மனதில் ஆழமான ரணத்தை ஏற்படுத்தி விட்டது. காலவோட்டத்தில் மறதி மருந்து அந்த ரணத்தைப் படிப்படியாகக் குணப்படுத்தியிருந்தாலும் மாறாத வடுவொன்று மனதினுள் நிலைத்து விட்டதோ? அதன் பலன்தான் இந்தக் குரூரதிருப்தியோ?

ஆனால் அந்த ஐந்து சதத்தைப் பார்த்து நான்தான் பரிதாபப்பட்டேனே தவிர அது எந்தக் கவலையுமில்லாமல் முழுமையான சிரிப்போடு நிர்ச்சிந்தையாகக் கிடக்கிறதே. உயர்விலும் தாழ்விலும் இப்படித்தானிருக்க வேண்டுமென்று உபதேசிக்கிறதோ?

நினைவுகளில் ஆழ்ந்துபோய் நடந்துகொண்டிருந்த நான் பணிமனையின் வாயிலை அடைந்தபோதுதான் அங்கே எனது உயரதிகாரிகள் நிற்பதை அவதானித்தேன். அந்தக் கணத்தில் ஐந்து சதம் மனதை விட்டுப் பறந்தோடி விட்டது.

அடிக்கடிவங்கி நடவடிக்கைகளைப் பரிசீலிக்க வரும் அவர்கள் இப்போதும் அதற்காகவே வந்திருந்தார்கள்.

அவர்கள் தம்கடமையை ஆரம்பித்தனர். நானும் எனது கடமையில் ஈடுபட்டிருந்தேன்.

காசாளரின் கையிருப்பு பரிசீலிக்கப்பட்டு முடிவடையும் வேளையில் அது தென்பட்டது. காசாளர் முகாமையாளரிடம் சென்று ஏதோ கூறுவதையும் முகாமையாளர் உயரதிகாரிகளிடம் வந்து உரையாடுவதையும் அவதானித்தேன்.

ஏதாவது பிரச்சனையோ? கையிருப்பு எக்காரணங் கொண்டும் குறைந்தோ கூடியோ இருக்கமுடியாதே! அன்றாடம் சரிபார்க்கப்பட்டுத்தானே பணம் வைக்கப்படும். அதில் என்ன தவறு நடந்திருக்கும்?

எவ்வளவோ மூளையைக் குடைத்தும் பதில் தெரியவில்லை. எப்போது பரிசீலனை முடிந்து காசாளர் வருவாரென ஆவலோடு காத்திருந்தேன்.

அவர் வந்ததும் வராததுமாக ஒவ்வொருவராகப் போய் விசாரிக்க ஆரம்பித்தோம்.

"என்ன மச்சான் பிரச்சனை?"

"பெரிசாய் ஒண்டுமில்லை. ஐஞ்சு சதத்திலை ஒண்டு கையிருப்பிலை இருக்கிறதாய் கணக்கு. இப்ப ஐஞ்சு சதத்துக்கு எங்கை போறது மச்சான்? எப்படியோ இருபத்தைஞ்சு சதம் ஒண்டு தேடி அதுக்குப் பதிலாய் வைச்சிருந்தனான். அதுதான்" காசாளர் செந்தில் விவரித்தான்.

"இங்கும்ஐந்து சதப் பிரச்சினையா?"

"என்ன செய்யட்டுமாம்?" பக்கத்தில் நின்ற சந்திரன் விசாரித்தான்.

"இந்தச் சில்லறையளைத் தேடி எடுத்து ஓர் இடத்திலை வைச்சால் இப்பிடித் தேவைப்படேக்கை பாவிக்கலாமாம்" செந்தில் கூறினான்.

அந்த ஐந்து சதம் என் நினைவில் பட்டென்று வந்து ஒட்டிக் கொண்டது.

"மச்சான், மத்தியானம் சாப்பிடப் போட்டு வரேக்கை ஒரு ஐந்துசதம் கொண்டுவாறன்." நான் பேருதவி செய்யும் தோரணையில் கூறினேன்.

நடுத்தெருவில் கிடக்கும் அது இன்று மாலை இரும்புப் பெட்டியுள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு பத்திரப் படுத்தப்படப்போகிறது.

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.127

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | 11 | ■ | 12 | |
| ■ | 13 | 14 | | | 15 | | ■ |
| 16 | | | ■ | 17 | | | |
| | ■ | 18 | 19 | | ■ | | ■ |
| 20 | 21 | | | ■ | 22 | ■ | 23 |
| 24 | | ■ | 25 | | | | |

**சொற்சிலம்பம் இல. 127**

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ........................................................................

விலாசம்: ....................................................................

........................................................................

........................இங்கே வெட்டுக........................

முடிவுத் திகதி:- 12-11-1999

### இடமிருந்து வலம்

1. இளைப்பாறல். 5. சிரார்த்தம். நிமித்தகாரன். 8. உலோபி. 9. உழக்கு. 10. ஈரலிப்பான இடத்தில் வளரும். 12. ஐயங்கொள். 13. நடைமுறையில் உள்ளது. 16. ஓர் இனிப்புப் பணியாரம். 17. சுயகாரியம். 18. சோற்றுக்குச் சேர்ப்பவர். 20. படைப்பவன். 24. இர. 25. சூரியன்.

### மேலிருந்து கீழ்

1. பேர்வழி. 2. தச்சனின் ஆயுதங்களில் ஒன்று. 3. வழக்குத் தொடுத்தவன். 4. சரியா எனக் கவனி. 5. மார்கழியில் அதிகாலையில் பாடப்படுவது. 6. எருதின் ஏரி. 11. மனம். 14. வீட்டின் வெளிப்புறத்தே அமைவது. 15. ஒரு சாரியை உருபு. 16. பாரசீக நாடு. 19. இறுதியில் துயில் கொள்வது இங்கே. 21. சுவைத்து அனுபவி. 22. கூட்டல் குறி. 23. காட்டு விலங்கு.

## சொற்சிலம்பம் 125 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. பாதசுத்தி. 5. நாத. 7. கட்டு. 8. யாதவன். 10. வட. 11. தகவின்மை. 12. தம்பிரான். 14. சிசு. 17. ஓர். 18. தறுதலை.19.பாரி. 20. பக்க 21. திருநீலகண்டர்.

### மேலிருந்து கீழ்

1. பாகவதம். 2. தட்டம். 3. சுடு. 4. தியாகன். 5. நாவன்மை. 6.தன்மை. 9. தவி. 11. தராசு. 13. பிசிர். 15. தறுகண். 16. கலைஞர். 17.ஓரிரு 18. தக்க. 19. பாதி. 20. பல.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு**:- த.மயூரி, மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

**இரண்டாம் பரிசு**:- ந.திவ்யா, பிராமண வீதி, தும்பளை, பருத்தித்துறை.

**மூன்றாம் பரிசு**:- ப.தனஞ்செயன், 64/2, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 126இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நீ சொல்வதும் சரிதான்



இரண்டு மனிதர்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டார்கள். இருவரும் நீதிக்காக முல்லாவிடம் வந்தனர்.

முதலாமவன் தன்பக்க நியாயத்தை முல்லாவிடம் கூறி முடித்தான். அதைக் கேட்ட முல்லா, "நீ சொல்வது சரிதான்!" என்றார்.

உடனே மற்றவன், "ஐயா! இவன் சொன்னதெல்லாம் பொய்! உண்மையில் என்ன நடந்தது என்பதை நான் கூறுகிறேன்" என்று கூறிவிட்டுத் தன்னுடைய வாதத்தைச் சொன்னான். அவன் பேசி முடித்ததும் முல்லா, "நீ சொல்வதும் சரிதான்!" என்றார்.

நடந்ததையெல்லாம் வீட்டினுள் இருந்து கவனித்துக் கொண்டிருந்த முல்லாவின் மனைவி வெளியேவந்து, "கணவரே! இவர்கள் இருவரும் மாறுபாடான சம்பவங்களைக் கூறித் தாம் சொல்வதுதான் சரியென்று சொல்கிறார்கள். எனவே நீங்கள் கூறியதுபோல் இருவர் சொல்வதும் எப்படிச் சரியாக இருக்க முடியும்?" என்று கோபத்துடன் கேட்டாள்.

தன் மனைவி கூறியதைச் செவிமடுத்த முல்லா சிறிதுநேரம் யோசித்துவிட்டு, "மனையாளே! நீ சொல்வதும் சரிதான்!" என்றார்.

## தீபாவளித் திருநாள்


தீபாவளித் திருநாள் – சுடர்
சிரிக்கும் ஒளித்திருநாள்
மேவும் வாழ்த்துக்களில் – பல
மேன்மை பூத்திடும் நாள்!

ஏழை எளியவரும் – வாழ்வில்
எந்த நிலையவரும்
சூழும் உறவோடு – கூடும்
சுவை சேர் சுபத்திருநாள்!

எண்ணெய் நீராடி – இறை
வழிபடும் இந்நாளில்
சிதறும் முத்தாக – பூக்கள்
சிந்தும் மத்தாப்பு!


நரகப் பகை கொய்து – நன்மை
நாட்டும் வகை செய்ய
வருமித் திருநாளை – நாமும்
வாழ்த்தி வரவேற்போம்!


தொகுப்பு:- கி. கஸ்தனி,
தரம் 6,யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.










## துண்டுகளை இணையுங்கள்



இங்கு துண்டுதுண்டாகச் சிதறியிருப்பவர் பிரபல கிரிக்கெட் வீரரொருவர். துண்டுகளைச் சரியாக இணைப்பதன் மூலம் அவர் யார் என்பதைக் கண்டுபிடியுங்கள்! கண்டுபிடிக்க முடியாவிட்டால் அடுத்தவாரம் வரை காத்திருங்கள்.

## வழக்கு மனிதர்

அமெரிக்காவிலுள்ள பிட்ஸ்பர்க் என்ற இடத்தைச் சேர்ந்த ஜான் காலியார்டி என்பவர் மிகவும் விசித்திரமான மனிதராக இருந்தார்.

இவர் ஏதாவது அற்ப காரணங்களுக்களுக்காகப் பிறர் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துக் கொண்டே இருந்தார்.

சுமார் ஆறுமாத காலத்துற்குள் அறுபது நபர்களின் மேல் வழக்குத் தொடுத்துவிட்டார். இந்த வழக்குகளை விசாரித்த நீதிபதி ஒரு தடவை ஜான் காலியார்டியிடம், 'நீர் வீணான வழக்குகளைப் போடுவதிலேயே உமது வாழ்க்கையை வீணடித்து வருகின்றீர். எனவே இனி நீதி மன்றத்தின் முன் அனுமதியின்றி எக்காரணம் கொண்டும் யார் மீதும் வழக்குப்போடக் கூடாது' என்று கூறி எச்சரித்தார்.

இதைக் கேட்ட ஜான்காலியார்டிக்கு கோபம் பொத்துக் கொண்டுவந்தது.

நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்தவுடன் ஒரு வக்கீலைப் பிடித்துத் தனக்குப் பாதகமாகத் தீர்ப்புக் கூறித் தன்னை எச்சரித்த நீதிபதி மீதே ஒரு வழக்கைப் போட்டு விட்டார் அந்த மனிதர்.

பாவம் அந்த நீதிபதி. திக்கு முக்காடிப் போய்விட்டார். விந்தையான 'வழக்கு மனிதர்' தான் ஜான் காலியார்டி!

## வேப்பமரம்

வீட்டுக்கு அழகைத் தந்திடுமாம்
வெப்பம் குறைய உதவிடுமாம்
நாட்டுக்கு மழையை அளித்திடுமாம்
நல்ல மருந்தாய் உதவிடுமாம்

பறவைகள் வாழ்ந்திட இடந்தருமாம்
பார்த்தால் பரவசம் தந்திடுமாம்
விறகாய் எரிக்க உதவிடுமாம்
வானை முட்டும் வேப்பமரமாம்

கி.கல்கிராஜ்,
(தரம் -8,மானிப்பாய் இந்துக்கல்லூரி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org